730/86

229

25 ஆக. 1986

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 17, 1986-தொகுதி 221 எண் 1.
Monday, 17th March 1986-Volume 221 No. 1.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

௨௨௯

பொருளடக்கம்.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | தமிழநாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—iv |
| | தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் | v |
| | தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல்) | vii—viii |
| 1 | 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளித்தல் | 1—21 |
| 2 | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 21—22 |


143542

D 2 C *I 13*—i

143542

D

V2N

N86.22.1.2

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்.

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், தொல்பொருள் இயல், ஆயத்துறை, மற்றும் பரிசுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, பொது நிர்வாகம், வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், பொது, மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந் தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்-பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள் மற்றும் சர்க்கரைப்பாகு கழிவு.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை.



12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி நெசவாலைகள் மற்றும் மதுவிலக்கு.

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிகவரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (வீட்டுவசதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. கா. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மறுவாழ்வு, வேலைவாய்ப்பும், பயிற்சியும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. வ. அருணாசலம், (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீன்வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித்துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

### THIRU SUNDAR LAL KHURANA

*Members of the Council of Ministers*

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption, Archaeology, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance in charge of Finance, General Administration, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMY, Minister for Labour, in charge of Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru RM. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Public, District Revenue Officers, Planning, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

6. The Hon. Thiru K. RAJARAM, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGAM, Minister for Municipal Administration, in chage of Municipal Adminstration, Panchayat Unions Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering, Agro Service Co-operative Societies, Water Supply and Drainage Boards.

10. The Hon. Thiru C. PONNAIYAN, Minister for Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Chits, Deputy Collectors and Molasses.

11. The Hon. Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health and Environmental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSWAMY, Minister for Transport, incharge of Transport Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms Textiles and Prohibition.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. The Hon. Thiru T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. The Hon. Thiru N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The Hon. Thiru T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. The Hon. Thiru A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes and Fisheries.

22. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.

23. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.

**தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்.**

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ஜி. சுவாமிநாதன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திருமதி வி. ஜெயலட்சுமி.
3. திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்.
4. திரு. அ. மயில்சாமி.

மேலவைச் செயலாளர்.

திரு பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்.

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்.

திரு. ரெ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.

திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

**மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்.**

**திரு. பி. கே. சந்திரசேகரன்.**

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. இராகவானந்தம், திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன். | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| **10. கருணாநிதி, டாக்டர் மு.** | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| **11. கலைமணி, திரு. க.** | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| **12. கோலப்பா, திரு. சி. ஆர்.** | நியமனம் |
| 13. சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்). | நியமனம் |
| 17. சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20. சுப்பு, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 21. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்). | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 22. தாரா செரியன், திருமதி. | நியமனம் |
| 23. தால், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24. பழனிவேல் ராஜன், திரு. பி. டி. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 25. பாலாஜி, திரு. நெல்லை. | நியமனம் |
| 26. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 27. மயில்சாமி, திரு. அ. | சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆசிரியர்கள் |
| 28. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 29. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர். திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆசிரியர்கள் |
| 31. முத்துலிங்கம், கவிஞர். | நியமனம் |
| 32. முனுசாமி, திரு. பி. | நியமனம் |
| 33. யூசுப், திரு. பா. சை. மு. (பொதுப் பணித் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 34. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் |
| 35. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் |
| 36. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 37. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. ஜெயச்சந்திரன், திரு. எம். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 39. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 42. வெற்றிடம் | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் |
| 43. வெற்றிடம். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சிமன்றத் தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சிமன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆர்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆர்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென்னார்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென்னார்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சிமன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சிமன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தியெட்டாவது கூட்டத் தொடர்.

திங்கட்கிழமை, 1986 மார்ச் 17.

(பங்குனி 3, குரோதன, திருவள்ளுவராண்டு-2017)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், நண்பகல் 12-00 மணியளவில். மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே.

1985-86ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1986-87ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும். இந்த அவையின் ஒப்புதல் பெறவேண்டி, அவையின்முன் வைப்பதில், பெரு விருப்பமும் பெருமகிழ்வும் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைக் கடமையுணர்வும், பொறுப்புணர்வும் மிக்க உறுப்பினர் பெருமக்கள் எல்லோரும், நல்ல ஆதரவையும், சிறந்த ஒத்துழைப்பையும் நல்கி, பெருமகிழ்வோடு ஏற்பார்கள் என்று பேராவலோடு எதிர்பார்க்கிறேன்.

பெரும்பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

என்று ஒரு நல்ல நாட்டிற்கு நல்லிலக்கணம் கூறவந்த திருவள்ளுவப் பெருந்தகையார், மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார். மிக்க பொருள்வளம் உடையதாகவும், எல்லோராலும் விரும்பத்தக்கதாகவும், எத்தகைய கெடுலும் எய்ததாதாகவும், மிகுந்த விளை பொருள் தருவதாகவும் அமைவதே நாடு என்பது வள்ளுவனாரின் வாய்மொழியாகும். இத்தகைய இலக்கணத்திற்குப் பெரிதும் பொருந்திவரக் கூடிய ஒரு சிறந்த நிலப் பகுதியாகத் தமிழ்நாடு பொலிவு பெற்றுத் திகழவேண்டும் என்பதில், நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு. இன்றைய தமிழக அரசு, அரும் பணிகள் பலவற்றையும் நிறைவேற்றி வருகிறது.

2. தமிழ்நாடு அரசு மாநில அளவில், ஏற்படுகின்ற பிரச்சனைகள் பலவற்றையும் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதுபோல, இந்தியா முழுவதையும் பாதிக்கின்ற அரசியல்—பொருளாதார—சமூகப் பிரச்சினைகள், இந்தியாவின் கூட்டமைப்புகுள் ஒரு உறுப்பாக இருக்கும் தமிழ்நாட்டையும் பாதிக்கும்போது, அவற்றையும் சமாளிக்க வேண்டிய கடப்பாடுடையதாகத் தமிழ்நாடு அரசு இருக்கிறது. இந்தியா முழுவதும்

தழுவிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைப் பொருளாதாரம், புதிய வரிகள்—ஆயத்தீர்வை—ஏற்றுமதி இறக்குமதி வரிகள் போன்றவற்றால் ஏற்படும் இன்றியமை யாப் பண்டங்களின் விலை உயர்வு, உரம்—இரும்பு—நிலக்கரி போன்றவற்றின் விலை உயர்வு, இரயில் போக்குவரத்துக் கட்டண உயர்வு, டீசல்—பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலை உயர்வு போன்றவை, தமிழக அரசின் பொருளாதாரத்தையும் தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்திருக்கின்றன. சில இனங்களில் மத்திய அரசு அளிக்கும் உதவித் தொகை கூடுதலாகி இருக்கிறது என்பதிலே மகிழ்ச்சி ஏற்பட்டாலும், மேலே கூறப்பட்ட கட்டண உயர்வு—விலைவாசி உயர்வு போன்றவைகளால் பெரும்பகுதித் தொகை திரும்பப் போய்விடுகின்ற நிலைமைதான் ஏற்பட்டுள்ளது.

3. பொதுவாக, வளர்ச்சித் திட்டங்கள், வறட்சி–வெள்ள நிவாரணப் பணிகள், நலிந்தோர்க்கான நல்வாழ்வுத் திட்டங்கள், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருந்து அவதியுறுபவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டங்கள் போன்றவற்றில் மத்திய அரசின் பங்காக ஒரு பகுதித் தொகை கிடைக்கின்றது என்றாலும், பெரும் பகுதித் தொகைக்கான பொறுப்புகளை, மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ள மாநில அரசு தான், ஏற்க வேண்டியிருக்கிறது. மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புக்களைச் சிறப்பாகவும் செம்மையாகவும் முடிக்க வேண்டுமானால், அதற்கு மிகுந்த பொருளாதார வசதிகள் தேவைப்படுகின்றன. பொருளாதார வசதிகளைப் பெருக்கிக்கொள்ள, வாய்ப்புக் கூறுகளும் அதிகார வரம்புகளும் வேண்டப்படுகின்றன. அவற்றிற்கான உரிமைகளும் மாநில அரசிடம் அமையப் பெறவேண்டியிருக்கின்றன.

4. இப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1969 ஆம் ஆண்டில், தாம் மறைவதற்கு முன்னால் எழுதிய கட்டுரை ஒன்றில், ''மாநிலங்கள் அதிக அளவில், அதிக அதிகாரம் பெறத்தக்க விதத்தில், இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறிவருகிறேன்'' என்று திட்டவட்டமாகவும், தெளிவாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

5. இந்திய நிலப்பரப்பைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வலிவான இந்தியாவும் மக்களை வாழவைப்பதற்கு ஏற்ற வளமான மாநிலங்களும் அமையவேண்டும் என்னும் கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்கள். இந்திய ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட மாநிலத் தன்னாட்சி அமைய வேண்டும். அதற்கான ஆக்கம் ஏற்பட வேண்டும். கூட்டாட்சி அமைப்பில் மாநிலத் தன்னாட்சிக் கோட்பாடு என்பது ஒரு அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பல்வேறு அரசியல் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.



6. மைய–மாநில அரசு உறவுகள் குறித்து ஆய்வு நடத்தி, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய அமைக்கப்பட்டுள்ள நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக் குழுவிடம், பல்வேறு அரசியல் தரப்பினரால் மேலே குறிப்பிட்டுள்ள கோட்பாடு வலியுறுத்தப் பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள கொள்கையின் அடிப்படையில், தமிழக அரசும் கருத்துக்களை வற்புறுத்தியுள்ளது. இந்தக் கருத்துக்களை ஏற்று, நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக்குழு, இந்தியாவில் இணைப்பாட்சி அரசு முறை ஏற்பட, உரிய பரிந்துரைகளைச் செய்யும்—செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்போமாக ;

7 தற்போது தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் மிக்க வேதனையும், வருத்தமும் தந்துகொண்டிருக்கிற ஒரு முக்கியமான பிரச்சினை இலங்கை வாழ் தமிழர்கள் பற்றிய பிரச்னையாகும். இலங்கை அரசின் தூண்டுதல்பேரில், இலங்கை போர்ப்படையினர் சனநாயக நெறிமுறைகளையும்—பண்புகளையும்—மனிதத் தன்மையையும் அத்துமீறிய வகையில, அவிழ்த்துவிட்டிருக்கும் அடக்குமுறை வன்செயல்களின் மூலம், இலங்கை வாழ் தமிழர்கள் படும் அவதிகள் குறித்தும், உயிர்–உடல்-உடைமை ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்தும் அன்றாடம் துக்ககரமான செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவர்களைப் பற்றி துக்கச் செய்திகளும் துயரச் செய்திகளும் இங்குள்ளோர் அனைவர் உள்ளங்களையும் வாட்டி வதைத்து வருத்தத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கின்றன. இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் வாழ்வுரிமையையும், குடியுரிமை—மொழியுரிமை—தொழிலுரிமை, பிரதிநிதித்துவ உரிமை போன்ற அடிப்படை உரிமைகளையும் பெற்று, அச்சத்திற்கு இடமில்லாத அமைதி வாழ்வு பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதையும், அதற்கான எல்லாவிதமான நேரிய அரசியல் முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ள இந்தியப் பேரரசு முன்வரவேண்டும் என்பதையும் இம் மன்றம் பலதடவைகளில் வற்புறுத்தி வந்திருக்கிறது. தமிழக மக்களின் வேண்டுகோள்களை ஏற்று, இந்தியப் பிரதமர் அவர்கள் அரசியல் முறையில் தீர்வு காண பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளார்கள் என்றாலும், இனிக் காலத்தாழ்வுக்கு இடமில்லாமல் விரைவில் பிரச்சினையைத் தீர்க்க முறைப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தியப் பிரதமரைத் தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. அண்மையில் இந்தியப் பிரதமர் இலங்கை அரசுக்குக் கூறியுள்ள அறிவுரைகளுக்கு இலங்கை அரசு செவிமடுத்து, அவற்றிற்கு ஏற்ப செயலில் இறங்கும் என்று எதிர்பார்ப்போமாக !

8. தங்கள் உயிர்களைக் காத்துக்கொள்ள, இலங்கையிலிருந்து தமிழகத்துக்குத் தப்பி ஓடிவந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 1,25,000 ஆகப் பெருகியுள்ளது. இவர்களில் 32,000 பேர்கள், ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் நல்ல

சூழ்நிலை ஏற்பட்டு, இவர்கள் அனைவரும் தங்கள் தாயகம் திரும்பும் வரையில் இவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, இவர்கள் மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்தப்படத் தமிழக அரசு அயராது பாடுபடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் ஆகியோரின் நிவாரணப் பணிகளுக்காகவும், மறுவாழ்வு பணிகளுக்காகவும் இதுவரை மொத்தம் சுமார் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

9. தமிழகத்தின் கடந்த ஐந்து ஆண்டுக் கால வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமேயானால், ஒவ்வோர் ஆண்டும் கடுமையான வறட்சி அல்லது பெரு வெள்ளம் அல்லது கடும் மழை ஆகியவற்றால், தமிழகம் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்திருப்பதை அறியலாம். 1985-86ஆம் ஆண்டு இவற்றால் தமிழகம் ஒருசேர பாதிக்கப்படுகின்ற ஒரு தனித்தன்மை நிலவியது. இந்த ஆண்டில் ஒருபுறம் பெரும் வெள்ளத்தால் உயிரிழப்பும், பொருளிழப்பும் பெருமளவுக்கு ஏற்பட்டன; மற்றொருபுறம் மழையின்மையாலும் நீர்ப் பாசனம் இன்மையாலும் கொடிய வறட்சிநிலை ஏற்பட்டது. இத்தகைய கேடு பயக்கும் பருவ நிலைகள் நிலவிய போதிலும், உணவு உற்பத்தியின் இலக்கை அடைவதில் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளோம். இதற்கான காரணம் அரசு மேற்கொண்ட தனி முயற்சிகளும், வேளாண் பெருங்குடி மக்கள் எடுத்துக்கொண்ட விடாமுயற்சிகளுமேயாகும். என்றாலும், வெள்ளத்தால ஏற்பட்ட பாதிப்புகளும், இழப்புக்களும் நமது வளர்ச்சிப் பணிகளைப் பெரிதும் பாதித்துள்ளன. போர்க்கால விரைவு அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகள் முறையாக மேறகொள்ளப்பட்டன. வெள்ள நிவாரணப் பணிகளின் செலவாக, அதிக அளவாக ரூ. 66.8 கோடி மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டது. வெள்ள நிவாரணப் பணிகளுக்காக, மாநில அரசு இதுவரை சுமார் ரூ. 45 கோடி செலவழித்துள்ளது. இந்த நிதியாண்டின் முடிவுக்குள்ளாக செலவின் அளவு ரூ. 60 கோடியை எட்டிவிடும். அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மீதமுள்ள தொகை, வரும் நிதியாண்டில் தொடர்ந்து செலவிடப்படும்.

10. தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலைகளைப் பற்றியும் புதிய திட்டங்களைப்பற்றியும் குறிப்பிடுவதற்கு முன்னர், இந்தியா முழுவதிலும் தற்பொழுது நிலவும் புதிய நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். 1985-86ஆம் ஆண்டில், நாட்டில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் புதிய ஊக்கம் கொடுக்கும் நோக்கத்துடன் பல கொள்கைகளை புதிய கண்ணோட்டத்தில் அணுக, மத்திய அரசு ஆர்வம் காட்டி வருகிறது. புதிய தொழில் கொள்கை, புதிய கல்விக் கொள்கை நீண்டகால வரிவிதிப்புக் கொள்கை போன்றவை பற்றி மத்திய அரசின் அறிவிப்புக்கள், மத்திய அரசு நிறைவேற்றக் கருதியுள்ள வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையனவாகக் கருதப்பட வேண்டும்.





11. மேம்பாடு அடைந்துள்ள இந்த வளர்ச்சிச் சூழ்நிலையைத் தமிழ்நாடு அரசு முழுவதுமாகப் பயன் படுத்திக்கொள்ளக் கருதியுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம், தமிழ் நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழில் துறை, ஆண்டு ஒன்றுக்கு, சராசரி 8.1 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது என்றும், மற்ற மாநிலங்களின் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதுவே மிக உயர்ந்த நிலையினது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நிலை நமக்குப் பெருமையையும் பூரிப்பையும் அளிக்கக்கூடிய ஒரு நல்ல நிலையாகும், வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தவரையிலும்கூட பாதகமான பருவ நிலைகளின் காரணமாக இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், நியாயமான அளவுக்கு உற்பத்தி நிலை இருந்து வருகிறது, 1986-87-ல் உணவு தானிய உற்பத்தி 92 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை, அரிசி போன்ற உணவுப் பொருள்களின் விலை சற்றுக் கூடுதலாக ஆன நிலையிலும், அவற்றைப் பொது விநியோகத்தின் மூலம் குறைந்த நியாயமான விலைக்கு வழங்கியதன் காரணமாகப் பொது மக்களின் இடர்ப்பாடு தவிர்க்கப்பட்டது. அரிசியைக் குறைந்த விலையில், பொது விநியோகத்தின் மூலம், வழங்குவதின் வாயிலாக அரசுக்கு ஆண்டு ஒன்றிச்குச் சுமார் ரூ. 100 கோடி இழப்பு ஏற்படுகிறது.

12. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்குப் பயன் விளைவிக்கின்ற இருபது அம்சத் திட்டத்தினைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகிறது. இருபது அம்சத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்தும் வகையில், அரசின் அனைத்துத் துறைகளும் முடுக்கிவிடப்பட்டு, சீரிய பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும்படி செய்தமையால். 1982-83, 1984-85 ஆகிய ஆண்டுகளில், அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தை அடையும் பேற்றினைப் பெற்றது கடந்த ஆண்டுகளைப்போலவே நடப்பு 1985-86ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு முதலிடத்தைப் பெறுவதற்கு ஏற்ற எல்லா நடவடிக்கைகளையும் மாநில அரசு முறைப்படி மும்முரமாக மேற்கொண்டு வருகிறது. 1986 சனவரித் திங்கள் இறுதிவரை உள்ள கால அளவில், பயிறு உற்பத்தி—கொத்தடிமை ஒழிப்பு—குடிசைப் பகுதியினர் மேம்பாடு—6 முதல் 14 வயதுக்குட்பட்டோரைப் பள்ளியில் சேர்த்தல்—சிறு தொழில்களைத் தொடங்குதல் போன்றவற்றின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைத் தமிழ்நாடு மிஞ்சிவிட்டது. பாசன வளத்தைப் பெருக்குதல்—கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம்—உபரி நிலங்களைக் கையகப்படுத்தி வழங்கல்—ஏழையர்க்கு வீட்டுமனை வழங்குதல்—சிற்றூர்ப் புறங்களில் மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்—கரிம வாயு உற்பத்தி செய்தல்—மரம் நடுதல்—கருத்தடை செய்தல்—முதியோர் கல்வி வழங்குதல் போன்ற அம்சங்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில், 75 விழுக்காட்டிற்கு மேல்

எய்தப்பட்டு விட்டன. 1986 மார்ச் திங்கள் இறுதிக்குள் எல்லா இலக்குகளையும் எதிர்பார்க்கும் அளவுக்கு முடித்திட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

13. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையிலான இந்த அரசு, அனைத்துத் தரப்பினர்க்கும் ஏற்ற பல்வேறு நலப்பணிகளை மேற்கொண்டு, அவற்றைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றி வந்துள்ளது. இயற்கைச் சீற்றங்களால் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், அவற்றையெல்லாம் சமாளித்து, வளர்ச்சிப் பணிகள் ஏதொன்றையும் குறைத்துக்கொள்ளாமலும், அவற்றிற்குக் குந்தகமில்லாத வகையிலும், நலப்பணித் திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாகச் செயற்படுத்த முடிந்தது என்பதே, நமது வலுவான நிதி நிலை நிருவாகத்தைக் காட்டுகிறது. இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சில ஆண்டுகளில், ஊரகத் தன்னிறைவுத் திட்டம் என்னும் பயனுள்ள பெருந் திட்டம் ஒன்று ரூ. 216 கோடி மொத்தச் செலவில் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஏழை எளிய குழந்தைகளுக்கும், பள்ளிச்சிறார்—சிறுமியர்க்கும் பயன் தரத்தக்கத் திட்டமான முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் 1982–83 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றுத் தொடர்ந்து நல்ல நோக்கத்தில் நடை பெற்றுவருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். இந்தத் திட்டம் மேலும் திருத்தியமைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த சத்துணவு—சுகாதாரப் பாதுகாப்புத் திட்டமாகத் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, மொத்தத்தில் 1986–87-க்குரிய வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 168.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ–மாணவியர்க்குச் சீருடைகளும்—பாடநூல்களும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 1986–87 இல் இத் திட்டத்திற்கு ரூ. 27.39 கோடி செலவாகும். இத்தகைய பரந்த—விரிந்த செயல் நோக்கத்தைக் கொண்ட ஒவ்வொரு திட்டமும் அறிவிக்கப்பட்ட நிலையில், அவற்றின் நடைமுறை குறித்துப் பலருடைய உள்ளங்களில் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவித்தாலும், அவை வெற்றி பெறும் நிலையில், நல்லவர்கள் அனைவரின் பாராட்டுதல்களைப் பெறுகின்றன என்பது பெருமகிழ்ச்சியைத் தருவதாகும். இன்று இத் திட்டங்கள் தேசிய முன்னுரிமைத் திட்டங்களாக உருப் பெற்றிருப்பது இம் மாநிலத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

14. ஆதிதிராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர் ஆகியோர்க்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது. வீட்டு வசதி செய்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்கள்,



அவற்றைப்போன்ற மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் நெருங்கிய கூட்டு ஒத்துழைப்பு இதற்கு மிகவும் இன்றியமையாததாகிறது. வீட்டு வசதித் திட்டங்களுக்குக் கடனுதவி அளிப்பதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட இருக்கும் நிறுவனம், வீட்டு வசதி–நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனம் (HUDCO), வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம் (HDFC), ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களின் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தை நான்கு, ஐந்து வகைகளில் செயற்படுத்த திட்டமிடப்பட்டு வருகிறது. குடிசை வாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது, ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவது, வீடுகட்ட ஏழைகளுக்குக் கடனுதவி அளிப்பது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட உதவுவது, தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்டித் தர ஊக்குவிப்பது போன்ற வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் விரிவானதொரு திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம் (NREP), கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் (RLEGP) ஆகியவற்றின்கீழ் அரசின் நேரடி உதவியாக ரூ. 14 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர முதற்கட்டமாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 26 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தரப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நிதி நிறுவனங்கள் மூலம் தேவைப்படும் நிதிகளைத் திரட்டுவதற்கான முயற்சிகள் முறைப்படி மேற்கொள்ளப்படும்.

15. கிருஷ்ணா ஆற்றுக் குடிநீர்த் திட்டத்தை ஆந்திர மாநிலத்துடன் சேர்ந்து செயற்படுத்தத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து நிதி ஒதுக்கீடுகள் செய்து வந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாட்டின் பங்கின் ஒரு பகுதியை நாம் முன்னதாகவே கொடுக்க முன்வந்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலத்தாழ்வு ஏற்படக்கூடாது என்பதே இதன் நோக்கமாகும் என்றாலும், இத் திட்டத்திற்கு இசைவு அளிப்பதில் மத்திய அரசு காலத்தாழ்வு செய்துவருவதன் காரணமாக, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளும் காலத்தாழ்வு பெற்றுள்ளன. இத் திட்டத்தின் செலவில் பெரும்பாலான இனங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவில் இடம் பெறவேண்டியிருக்கின்றன. இத்திட்டத்தைத் துவக்கிவைத்த போது மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மாநிலங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கான ஓர் அருமையான எடுத்துக்காட்டு இத் திட்டமாகும் என்று புகழ்ந்துரைத்ததை ஈண்டு நினைவு கூறலாம். சென்னை மாநகருக்குக் கூடுதலாக நீர் வழங்கக்கூடிய இன்றியமையாச் சிறப்பினைக் கொண்ட, இந்த முக்கியமான

திட்டத்திற்குத் தேவையான அனுமதியை இந்திய அரசு விரைவில் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது இந்தத் திட்டத்தின் பங்கீட்டு விகிதத்திற்கு ஏற்ப ஆந்திரப் பிரதேச அரசும், அவர்களின் சார்பான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அப்படிச் செய்யப்படாத நிலை ஏற்படின், தமிழ்நாடு அளிக்கும் பங்குத் தொகையைக் கொண்டு மட்டும் இத் திட்டப் பணியைக் குறிப்பிட்ட கால அளவு எல்லைக்குள் நிறைவேற்ற முடியாமற் போகக் கூடும். இந்த நிலைமை விளக்கப்பட்டு, அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய அவசியம் ஆந்திரப் பிரதேச அரசிடம் வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. 1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்குப் பயன்படுத்த தமிழ்நாடு அரசு ரூ. 45 கோடி ஒதுக்கியுள்ளது. உரிய அளவுக்கு ஆந்திரப் பிரதேச அரசின் பங்கீட்டுத் தொகையும் தமிழ்நாடு அரசு எதிர் பார்க்கிறது.

16. ஊரகக் குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடு ஒவ்வோர் ஆண்டும் அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. 1986–87 ஆம் ஆண்டிற்கென ரூ. 45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிற்றூர்களில் பழுதுபட்ட இரும்பிலான மேல்நிலைத் தொட்டிகளுக்குப் பதிலாகச் சிமெண்ட் கற்கலவையிலான மேல்நிலைத் தொட்டிகளை அமைக்க, இந்த ஒதுக்கீட்டிலிருந்து ரூ. 5 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான தேவைகளை ஆய்வு செய்து, மதிப்பீடு செய்து, தக்க செயற்குறிப்புகளை வழங்குமாறு, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

17. 1986–87 ஆம் ஆண்டில் மின்சக்தித் துறையின் திட்டச் செலவை நாம் ரூ. 395 கோடியாக உயர்த்தி நிர்ணயித்துள்ளோம். இந்த வகையில் ஏற்படும் செலவினங்களுக்காகத் தமிழ்நாடு அரசு அளிக்கவேண்டியுள்ள ரூ. 300 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கூட்டுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான செயற் குறிப்புக்கள் அரசின் ஆய்வில் உள்ளன. வடசென்னை அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிதி உதவி அளிப்பது பற்றி, ஆசிய வளர்ச்சி வங்கி மதிப்பீடு செய்து வருகிறது. பழுப்பு நிலக்கரி இயற்கையிலேயே அதிகமாகக் கிடைக்கும் நெய்வேலியில், மின் உற்பத்தி அளவை அதிகமாக்கக் கூடிய திட்டங்களுக்கு இந்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்க்கிறோம். ஒப்புதல் கிடைக்கும் நிலையில், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மின் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் ஏற்படும். தமிழ்நாடு, மின்சக்தித் துறையில் தன்னிறைவு அடைய வேண்டும்—அடைய முடியும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.



18. தஞ்சை டெல்டாப் பகுதியில் இயற்கை வாயு கணிசமான அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதனைத் தோண்டி எடுக்கும் முயற்சி மத்திய அரசால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இங்கு கிடைக்கும் எண்ணெய் வளம் தாராளமாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இது பொதுவாகத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குக் குறிப்பாகத் தஞ்சை மாவட்டப் பகுதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். மத்திய அரசு, இந்த வளத்தைப் பயன்படுத்தி அதற்கு ஏற்ற தொழிற்சாலைகளை உருவாக்கவும், மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தவும் முன்வரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

19. 1985–86 ஆம் ஆண்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டாகும். 1985–86 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை, நான் இந்த அவையின்முன் வைத்தபோது, திட்ட ஒதுக்கீடு பற்றியோ, மத்திய நிதியுதவியின் அளவு பற்றியோ திட்டவட்டமாகவும், தெளிவாகவும் அறிவிக்கும் நிலையில் இல்லை. ஏனெனில், திட்டக் குழுவுடன் நடத்தும் விவாதங்கள், அப்பொழுது முடிவடையாமலிருந்தன. பின்னர், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவைவிட, கணிசமான அளவுக்குக் கூடுதலான திட்டச் செலவிற்குத் திட்டக் குழுவிடம் ஒப்புதல் பெறுவதில் தமிழ்நாடு மகிழ்ச்சிக்குரிய வகையில் வெற்றி கண்டது. மேலும், நமது வற்புறுத்தலுக்கிணங்க, திட்டப் பணிகளுக்காக மத்திய அரசின் நிதியுதவியின் பங்கும் உயர்த்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3,150 கோடியாக இருக்க, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 5,750 கோடியாக உயர்ந்தது. திட்டத்திற்கான மத்திய அரசின் உதவியும் ரூ. 665 கோடியிலிருந்து ரூ. 1,438 கோடியாக உயர்த்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் 82.54 விழுக்காடும் மத்திய அரசின் நிதியுதவியைப் பொறுத்த வரையில் 116.28 விழுக்காடும் உயர்ந்துள்ளன. நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மேற்குறிப்பிடப்பட்ட இரு இனங்களிலும் மிக அதிக அளவில், உயர்ச்சியைப் பெற்றுள்ள ஒரு சில மாநிலங்களில், தமிழ்நாடு முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும்.

20. மத்திய நிதியுதவியைப் பெறும் வகையில், இம் மாநிலத்திற்கு நீண்ட நெடுங்காலமாக இழைக்கப்பட்டுவந்த அநீதியைப் போக்கி, ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய மற்ற மாநிலங்களுக்கும் இம் மாநிலத்திற்கும் இடையே நிலவி வரும் ஏற்றத் தாழ்வை, நியாயத்தின் அடிப்படையில் நீக்கவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அவ்வப்போது வற்புறுத்தி விடுத்த வேண்டுகோள்களை மத்திய

அரசு ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், 1985-86 ஆம் ஆண்டிலும் 1986-87 ஆம் ஆண்டிலும் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கும் வரி வருவாயின் பங்கும் ஓரளவுக்கு உயர்ந்துள்ளது. மத்திய அரசின் வரிவசூல் நிலை சற்று உயர்ந்திருப்பதே இதற்குக் காரணம். இந்த இரண்டு சாதகமான சூழ்நிலைகளாலும், மாநில அரசின் வரிவசூல்— சிறு சேமிப்பு வசூல் ஆகிய இரு வகைகளிலும் வருவாயைப் பெருக்கிக்கொள்ள மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளாலும், மிகைப் பற்றைத் தீர்க்க ரூ. 38.9 கோடி மத்திய அரசிடமிருந்து நடுத்தரக் காலக் கடனாகப் பெற்றமையாலும், நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்து, முன்னர் எதிர்பார்க்கப்பட்ட தோராயமான ரூ. 264.20 கோடி பற்றாக்குறையைப் பெருமளவுக்குச் சரிகட்ட முடிந்தது. இதனால், வரும் ஆண்டில் புதிய திட்டங்கள் பலவற்றையும் மேற்கொள்ள இயலும் என்பதற்கான நம்பிக்கையும் உறுதிப்பாடும் ஏற்பட்டிருக்கின்றன. 1985-86 இல் முடிவான பற்றாக்குறை ரூ. 7.45 கோடியாக இருக்கும்.

21. இந்த ஆண்டு சனவரித் திங்களில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நடந்த விவாதத்திற்குச் சட்ட மன்றத்தில் நான் பதில் அளிக்கும்போது, 1987 சனவரித் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் கள்-சாராய விற்பனை அறவே நிறுத்தப்பட்டு, மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்ற அரசின் முடிவு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம், 1986-87 ஆம் நிதி ஆண்டில், ரூ. 60 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். இந்த இழப்பைக் கருத்தில் கொண்டுதான் 1986-87 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

22. எனினும், 1987-88 ஆம் நிதி ஆண்டில், மதுவிலக்கின் மூலம் வருவாய் இழப்பு ரூ. 250 கோடியாக இருக்கும் என்று கணக்கிட வேண்டிவரும். மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதால் ஏற்படும் வருவாய் இழப்பில் 50 விழுக்காட்டை, ஈடு செய்யும் ஒரு திட்டத்தை மத்திய அரசு முன்பு அறிவித்தது. ஆனால், 1977-78 இல் மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பைப் பொறுத்து மட்டும்தான் மத்திய அரசு ஈட்டுத் தொகை வழங்கும் என்று சொல்லப்படுகிறது. மதுவிலக்குக் கொள்கையை நிலைநாட்டுவதன் மூலம் இப்பொழுது ஏற்படக் கூடிய வருவாய் இழப்பைப் பொறுத்தும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவில் ஈட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

23. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் ரூ. 960 கோடி செலவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்க, நாம் இறுதியாகச் செலவிடக்கூடிய தொகை ரூ. 1,069 கோடியாக அமையும். 1986-87 ஆம் ஆண்டுத் திட்டச் செலவு ரூ. 1,153 கோடி என மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்திருக்க, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், நாம் திட்டங்களுக்காகச் செலவிடுவது ரூ. 2,269 கோடியாக அமையும், மொத்தத் திட்டச் செலவில் இது 39 விழுக்காடாகும். திட்ட இலக்குக்கு மேல் சாதனையை ஆண்டிற்கு ஆண்டு எய்திக்காட்ட முடியும் என்பதைத்தான் தமிழக அரசு தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது.



24. கடந்த காலத்தில் பல்வேறு துறைகளைப் பொறுத்து, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கம் பற்றியும், ஏற்பட்ட சாதனைகள் பற்றியும், 1986-87 ஆம் ஆண்டில் நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள் பற்றியும், அவற்றிற்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு பற்றியும் ஓரளவுக்கு விவரங்கள் தொகுக்கப்பட்டு, இணைப்பாக இவ்வுரையுடன் வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றையெல்லாம் படித்துப் பார்த்து, நிலைமைகளைத் தெளிவுபடுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு செயற்படுத்தக் கருதியுள்ள சில முக்கியமான புதிய திட்டங்கள் குறித்து மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

25. காவலர் நலனுக்காகவும், காவற் படையை நவீனப்படுத்துவதற்காகவும், மொத்தம் ரூ. 27.67 கோடி செலவில் திட்டங்கள் தொடங்கப்பெறும். 1986-87 ஆம் ஆண்டில், காவல் துறையினர் குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ. 8 கோடியும், காவற் பணியை மேம்படுத்தி வலுப்படுத்துவதற்காக ரூ. 1.7 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

26. தரிசு நில மேம்பாடு, அழிந்துபட்ட காடுகளை மீண்டும் வளர்த்தல் ஆகியவற்றிற்கான சிறப்புத் திட்டத்தை ரூ. 76 இலட்சம் இறுதிச் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அழிந்துபட்ட இயற்கையான காடுகளை மீண்டும் வளர்க்க, ஒருங்கிணைந்த அணுகு முறை இத் திட்டத்தில் பின்பற்றப்படும்.

27. தெரிந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளில், பின்தங்கிய பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டத்தை ரூ. 50 இலட்சம் இறுதிச் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

28. சென்னை மாநகராட்சிப் பகுதி மேம்பாட்டுக்காக, ரூ. 2.81 கோடி இறுதிச் செலவில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் தானியங்கித் துப்புரவு

[1986 மார்ச் 17

வண்டிகள் வாங்குதல், ஆண்டர்சன் பாலத்தை அகலப்படுத்துதல், நடைபாதை வியாபாரிகளுக்கு அங்காடிகள் கட்டிக் கொடுத்தல் போன்றவை அடங்கும். இதுபோல, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக ரூ. 2.4 கோடி இறுதிச் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இவற்றில் சாலை அமைத்தல், தார் பாவுதல், தொடக்கப் பள்ளிகளுக்காகக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவை அடங்கும்.

29. சென்னையில் ரூ. 54 இலட்சம் இறுதிச் செலவில் மோட்டார் வாகனப் பாகங்கள் வடிவமைப்பு நிலையத்தையும், கோயம்புத்தூரில் ரூ. 60 இலட்சம் இறுதிச் செலவில் நவீனக் கருவி நிலையம்—பயிற்சி நிலையம் ஆகியவற்றையும் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

30. கல்வி எப்பொழுதுமே மாநில அரசின் தலையாய முன்னுரிமையைப் பெற்று வந்துள்ளது. 1985–86 வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி மேம்பாட்டிற்காக ரூ. 468 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க, 1986–87 இல் ரூ. 551 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டிலும் கடந்த ஆண்டுகளைப் போலவே, கூடுதல் ஆசிரியர் பதவிகளுக்கு அரசு அனுமதி அளிக்கவுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்காகத் தனியாக ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

31. தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 48.43 இலட்சம் இறுதிச் செலவில் விபத்து-அவசரச் சிகிச்சைத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள துணை நிலையங்களில் மேலும் நல்ல இட வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, ரூ. 50 இலட்சம் செலவில் கட்டடங்களைக் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

32. 1986–87 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர்க்கு கல்வி வசதிகளை விரிவாகச் செய்துகொடுக்கத் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் நடு நிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், தரமுயர்த்தும் திட்டம் ஒன்று ரூ. 80.62 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது. தற்பொழுதுள்ள பள்ளிகளில் மேலும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 1 கோடி இறுதிச் செலவில் அறைக் கலன்களும், ஆய்வுக் கூடக் கருவிகளும் வாங்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பள்ளி மாணவ-மாணவியர்களுக்காக ரூ. 50 இலட்சம் செலவில் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது.



1986 மார்ச் 17]

33. தமிழ்நாட்டில் ஏற்கெனவே சாலைகள் நன்கு அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாலை வசதிகளை மேலும் வலுப்படுத்துவதற்காக ரூ. 11.58 கோடி இறுதிச் செலவில் புதிய சாலைகளும் பாலங்களும் அமைக்கப்படவுள்ளன. 1986–87-இல் இதற்காக ரூ. 3.05 கோடி செலவிடப்படும்.

34. 1986–87-இல், கூட்டுறவுத் துணிப் பதப்படுத்தும் பிரிவு ஒன்று ரூ. 75 இலட்சம் இறுதிச் செலவில் அமைக்கப்படவிருக்கிறது.

35. பொது துறை நிறுவனங்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டும், மிகுந்த பலனை விளைவிக்கும் பொருட்டும், அரசு எடுத்துக் கொண்டுள்ள பல்வேறு முயற்சிகள் மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் நிறைவேறி வருகின்றன.

36. பரவலான முறையில் தொழில்களின் வளர்ச்சியை உருவாக்கவும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் தனியார் துறை—பொதுத் துறை—கூட்டுத் துறை—கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் மூலம், நிதி நிறுவனங்களின் உதவியோடு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் நல்ல பலன்களைத் தந்து வருகின்றன.

37. தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்கள் நடப்பு ஆண்டில் பொதுவாக ஆதாயம் தரத்தக்க வகையில் செயற்பட்டு வந்திருக்கின்றன. பெரும்பாலான செயல்திறன் குறியீடுகளைப் பொறுத்த மட்டில் அவை அனைத்திந்திய குறியீட்டு அளவைத் தாண்டியுள்ளன.

38. தமிழ்நாடு மின்வாரியம் மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையிலும், உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையிலும் செயல்பட தமிழக அரசு எல்லாவிதமான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் செய்து வருகிறது.

39. இவ்வரசு அரசு ஊழியர்களுக்குப் பல முன்னோடித் திட்டங்களை அறிவித்துள்ளது. 1985-86ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு, அவற்றின்மீது அரசு ஆணைகள் வெளியிட்டதோடு மட்டுமல்லாமல், அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையிலான நன்மைகள் அரசு ஊழியர்களுக்குப் பின் தேதியிட்டு 1—10 – 1984 முதல் வழங்கப்பட்டன. அண்மையில் பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களும், ஆசிரியர்களும் கோரிய தன் அடிப்படையில், நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் தென்படுகின்ற முரண்பாடுகளைப் பரிசீலித்துத் தேவையான திருத்தங்களைப் பரிந்துரை செய்வதற்காக, அரசு, திரு. கார்த்திகேயன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒருநபர் குழுவை அமைத்துள்ளது. இக் குழு பல்வேறு ஆசிரியர், அரசு

ஊழியர் பிரதிநிதிகளின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து வருகிறது. குழுவின் பரிந்துரை அரசுக்கு விரைவில் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவை கிடைக்கப்பெற்றவுடன், ஆராய்ந்து அவற்றின்மீது தக்க ஆணைகள் அரசால் வெளியிடப்படும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

40. பணியிலிருக்கும்போது இறக்க நேருகின்ற அரசு ஊழியர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற குடும்ப நலத் தொகை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆகக் கடந்த ஆண்டு உயர்த்தப்பட்டது. அதேபோல் ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடை திட்டத்தின்கீழ், ரூ. 5,000 வழங்கும் திட்டத்தை இவ்வரசு கொண்டு வந்தது. இவ்வாறாக, அரசு ஊழியர்களுக்கான நல்ல திட்டங்களின் பட்டியலில் இன்னொரு புதியத் திட்டத்தையும் தற்பொழுது இவ்வரசு அறிவிக்கக் கருதியுள்ளது. வீடு கட்டுவதற்காக முன்பணம் பெற்ற அரசு ஊழியர், அரசுப் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால், அவருடைய கணக்கில் நிற்கின்ற பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்வதற்காக, வீடு கட்ட முன்பணம் வாங்கிய அரசு ஊழியர்களுக்கென, ஒரு தனி குடும்ப நல நிதியை ஆரம்பிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. திட்டத்தின்கீழ் வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு அவர்களில் யாராவது பணியில் இருக்கும்போதே இறக்க நேரிட்டால் பாக்கித் தொகைகள் வட்டியுடன் தள்ளுபடி செய்யவும் இத் திட்டம் வழிவகை செய்யும். வீடு கட்ட முன்பணம் பெறும் அனைவரும் இத் திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் மாதா மாதம் கட்டக்கூடிய தவணைத் தொகைக்கு ஏற்ப குறைந்த அளவு கட்டணத்தை இந்த நல நிதிக்குச் செலுத்த வேண்டும். இதன் விவரங்கள் கொண்ட ஆணை விரைவில் வெளியிடப்படும்.

41. இங்கு சில திட்டங்களைப்பற்றி மட்டும் நான் குறிப்பிட்டுக் காட்டியுள்ளேன் என்றாலும், முக்கியமான துறைகள் பற்றிய விளக்கக் குறிப்புகள், மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துப் பயன்பெறும் வண்ணம் இவ்வுரையின் பிற்சேர்க்கையாக* வைக்கப்பட்டுள்ளன.

42. வரி அமைப்புகளில் ஏற்படுத்த இருக்கின்ற மாற்றங்களைப்பற்றி விளக்குவதற்கு முன்னர் நான் மாநிலத்தின் மொத்த நிதி நிலைமை பற்றி எடுத்துக்கூற விரும்புகிறேன். 1986-87-ல் மாநில அரசின் நிதிநிலை மனநிறைவு அளிப்பதாக இருக்கும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வருவாய்க் கணக்கில் உபரி ரூ. 223.25 கோடியாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

* 23ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



செலவினங்களில் இயன்ற அளவு சிக்கனக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் அரசின் போக்கினால், வருவாய்க் கணக்கில் உபரி காட்ட முடிந்திருக்கிறது. இதன்மூலம் மூலதன முதலீட்டு நடவடிக்கைகள் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதன் பலனாக மாநிலத்தின் அடிப்படை நிதி ஆதாரங்கள் மேலும் வலுப்பட வழி ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறே மூலதனக் கணக்கிலான செலவு ரூ. 172.44 கோடியாக உயர்ந்துள்ளது. பொதுக் கடன் — பொதுக் கணக்கு, கடன்கள் மற்றும் முன் பணங்கள் என்பவற்றின்கீழ் உள்ள பற்று வரவுகளைக் கருத்தில் கொண்ட பின்னர், 1986-87 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூ. 4.79 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. துவக்கத்தில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையான ரூ. 7.45 கோடியையும் சேர்த்துக் கொண்டால், 1986-87 வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 12.24 கோடி இறுதிப் பற்றாக்குறையாக அமையும். வரி வசூல் நடவடிக்கைகளையும், வருமானப் பெருக்க நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்துவதன் மூலம் இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்வதோடு மட்டுமல்லாமல் அதற்கு மேலும் வருவாயைப் பெருக்க இயலும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். பல்வேறு சலுகைகளை அளிக்கவும் வரிவிதிப்பு முறையைச் சிறிது சீரமைக்கவுமான வழிமுறைகளை மேற்கொள்ள, இத்தகைய நிதி நிலைமை நமக்கு ஊக்கம் பயப்பதாக இருக்கிறது.

43. நமது மாநிலத்தின் மொத்த வருவாயில் தொழில் துறையின் பங்கு கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. மேலும் தொழில் துறை வேலை வாய்ப்பை அதிகரிக்கும் ஓர் ஆதாரமாக இருந்து வருகிறது. தொழில்களுக்கான ஊக்கத் திட்டங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இந்த வரவு—செலவுத் திட்டத்தில், சில சலுகை நடவடிக்கைகளுக்கான அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன. அளிக்கப்படும் சலுகைகள், தொழில் நடத்துவோரின் கூடுதல் வருவாய்ப் பெருக்கத்திற்கான வழிகள் என்று கொள்ளப்படாமல், பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கும், அல்லல்களைக் களைவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஆன நெறிப்படுத்தும் செயல் முறைகளாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

44. கீழ்க்கண்ட பொருள்களின் மீது இருந்து வரும் விற்பனை வரிகள் அறவே நீக்கப்படுகின்றன:—

(1) துத்தநாகம் பூசிய இரும்பு வாளிகள்.

(2) வீடுகளில் பயன்படுத்தப்படும் கரி மற்றும் நிலக்கரி, மரத்தூள், உமி போன்ற பொருட்களாலான எரிபொருட்கள் (Briquettes).

(3) நாட்டுச் சர்க்கரை (Bhoora Sugar) மற்றும் கற்கண்டு.

[1986 மார்ச் 17

(4) நுரை ரப்பரால் (Foam Rubber) தயாரிக்கப்படாத பஞ்சு, இலவம்பஞ்சு மெத்தைகள், தலையணைகள் மற்றும் இணைப்பு மெத்தைகள் (Quilt beds).

(5) மெழுகுவர்த்திகள்.

(6) பட்டாசுகள் மற்றும் மத்தாப்புகள்.

(7) வெள்ளி மெட்டி (Metty).

(8) பொம்மை விளையாட்டுப் பொருள்கள்.

(9) அனைத்து இசைக்கருவிகள்.

(10) விதைப்பதற்காக விற்கப்படும் சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகள்.

45. கீழ்க்கண்ட வகைகளில், சாதாரணப் பொதுமக்களுக்கும், நுகர்வோர்க்கும் தொழில் துறையினர்க்கும் உதவிடும் தன்மையில், தற்போதுள்ள வரி வீதங்கள் குறிப்பிட்ட அளவுக்குக் குறைக்கப் படுகின்றன :—

(1) மக்களின் உயிர்காக்கும் 41 வகையான மருந்துகள் மீது இருந்து வரும் 8 சதவிகித வரி 4 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(2) குழந்தைகளுக்கு வழங்கும் பால் உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பால்உணவுப் பொருள்கள் மீதான 10 சதவிகித வரி, 4 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(3) இழுவை வண்டிகள் (உந்துகலம் இழுக்கும் சுமையிழுப்பு வண்டி —Trailers) மீதான 15 சதவிகித வரி, 9 சதவிகிதமாகக் குறைக்கப் படுகிறது.

(4) பரிசுச் சீட்டுகள் (Lottory Tickets) மீதான 20 சதவிகித வரி 10 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(5) கோழி தீவனத்தின் மீதான 5 சதவிகித வரி 2 சதவிகித வரி யாகக் குறைக்கப்படுகிறது.

46. இம் மாநிலத்திலுள்ள தொழில் துறையினர்க்கும், வணிகர்களுக்கும் உதவும் வகையில், கீழ்க்கண்டுள்ளவாறு வரி விதிப்பு முறைகளை நெறிப்படுத்தவும், மற்றும் வரி விகிதங் களைக் குறைக்கவும் கருதப்பட்டுள்ளது :—

(1) தற்பொழுது உள்ள வணிகவரிச் சட்டத்தின் முதல் அட்ட வணையின் கீழ் வரும் இறுதிப் பொருள்களைத் தயாரிப் பயன்படும் அனைத்து உறுப்புப் பாகங்கள், மூலப்பொருள்கள் மற்றும் செய்முறைப் பொருள்கள் (Processing Materials) (சாராயம், கலவைச் சாயங்கள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது தயாரிப்புகள் தவிர) ஆகியவற்றின் மீது தற்போதுள்ள 10 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலாக உள்ள வரி விகிதங்கள் இனி 4 சதவிகித வரியாகச் சீராகத் திருத்தி அமைக்கப்படும். இச் சலுகையால் இம் மாநிலத்தில் இறுதிப் பொருள்களின் விலை பொதுவாகக் குறைந்து நுகர்வோர்க்குப் பயன் அளிக்கும்—பயன் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.



1986 மார்ச் 17]

(2) சிறு தொழில் முனைவோர்களின் கோரிக்கையை ஏற்று, மின்சக்தி உற்பத்தி செய்யும் பொறிகள் (Generators) மீதான 12 சதவிகித வரி இனி 8 சதவிகித வரியாகக் குறைக்கப் படுகிறது.

(3) நமது மாநிலத்திலுள்ள மின்னணுத் தொழிற்சாலை களுக்கு ஊக்கம் அளிக்கவும், உள்ளூர் தயாரிப்பாளர்களுக்குப் பாது காப்பு அளிக்கவும் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்னணுப் பொருட்கள் மற்றும் பாகங்கள் மீதான 10 சதவிகித வரி இனி 6 சதவிகித வரியாகக் குறைக்கப்படும். நமது மாநிலத் திற்கு வெளியே தயாரிக்கப்பட்டு இங்கே வந்து விற்பனையாகும் மின்னணுச் சாதனங்கள் மீது ஒரே சீராக 10 சதவிகித வரி விதிக் கப்படும்.

47. வணிக வரி விதிமுறைகள் தொடர்ந்து நெறிப்படுத்தப் பட்டு வருகின்றன. சென்ற வரவு-செலவு நிதி அறிக்கையில் கூட நான் வணிகத் துறையின் பிரச்சினைகளைச் சீராக்கப் பலமுனை வரிகள் சிலவற்றை ஒருமுனை வரிகளாக மாற்றும் சில மாற்றங்களைக் குறிப்பிட்டிருந்தேன். இந்த ஆண்டும் எளிமை பயக்கும், சில நெறிமுறைப்படுத்தும், திட்டங்களை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(1) வெல்லம், சீரகம் மற்றும் சீயக்காய் (Soap Nut) ஆகிய வற்றின் மீதான 5 சதவிகித பலமுனை வரி இனி 8 சதவிகித ஒரு முனை வரியாக மாற்றப்படும்.

(2) செயற்கைப்பசை (Synthetic Adhesives) மற்றும் பாரபின் மெழுகு ஆகியவற்றின் மீதான 5 சதவிகித பலமுனை வரி இனி 8 சதவிகித ஒருமுனை வரியாக மாற்றப்படும்.

(3) தாவர எண்ணெய்களைப் பொருத்தவரையில், 3 சத விகித பலமுனை வரி, இனி 4 சதவிகித ஒருமுனை வரியாக மாற் றப்படும். மேலும் மாநிலங்களுக்கிடையே நிகழ்கிற தாவர எண்ணெய் விற்பனையின்மீதான வரி 4 சதவிகிதத்திலிருந்து 1 சத விகிதமாகக் குறைக்கப்படும்.

(4) இம் மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படும் நிலக் கடலைக்கு இதுவரையில் இருந்துவரும் முதல் விற்பனை வரி என்பது, இனி முதல் கொள்முதல் மீதான வரியாக மாற்றி அமைக்கப்படும். வெளி மாநிலங்களிலிருந்து வரும் நிலக்கடலை யின் மீதான வரி முதல்முனை விற்பனை வரியாக மாற்றி அமைக் கப்படும்.

(5) தற்போது பருத்தி நூலின்மீது பலவிதமான வரி வீதங்கள் இருக்கின்றன. பின்னப்பட்ட உள்ளுடைக்கு (Hosiery)ப் பயன்படுத்தப்படும் நூல்மீது 2 சதவிகித வரியும், கைத்தறி ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படும் நூல் (Hank yarn) மீது 3 சத விகித வரியும் மற்ற நூல் வகைகள்மீது 4 சதவிகித வரியும்

விதிக்கப்பட்டு வருகின்றன. இந்நூல் வகைகள் அனைத்தையும் சமமாகக் கருதி இனி அனைத்திற்கும் ஒரே சீராக 3 சதவிகித விற்பனை வரியாக விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(6) துருப்பிடிக்காத எஃகுப் (Stainless Steel) பொருள்கள் மீது தற்போது 10 சதவிகித விற்பனை வரி இருந்து வருகிறது. தற்பொழுதுள்ள நடைமுறையில் உள்ள வரி ஏய்ப்பு வழிமுறைகளை அடைக்கும் வண்ணம் இனி இவ்வரியை இரண்டாகப் பிரித்து, முதல் விற்பனையின்போது 6 சதவிகித வரியாகவும், இறுதி விற்பனையின்போது 4 சதவிகித வரியாகவும் விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(7) விற்பனை வரி கட்டுவதற்காக பதிவு செய்வதற்கான குறைந்த அளவு விற்பனை வரையறை தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000 மதிப்புள்ள விற்பனையாகும். இனி இவ்வரையறை ஆண்டு ஒன்றுக்கு விற்பனை மதிப்பு ரூ. 75,000 என அதிகரிக்கப்படும். ஆனால் பதிவுக் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 என மிகக் குறைந்த அளவுடையதாக இருப்பதால், அதனை இனி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 என்று உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. கிளைகள் அல்லது கிடங்குகளுக்கான கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்திலிருந்து, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 என்று உயர்த்தப்படும்.

(8) விலை உயர்வுப் போக்குகளைக் கருத்தில் கொண்டும், சிறிய அளவில் விற்பனை வரி செலுத்துவோர் மற்றும் குறிப்பாகத் தொழில் முனைவோர் மூலதன முதலீட்டிற்கான நிதி ஆதாரங்களைச் சீரிய முறையில் பயன்படுத்தவும் கூடுதல் விற்பனை வரியின் சுமையிலிருந்து ரூ. 10 லட்சத்திற்குக் குறைவான ஆண்டு விற்பனை உள்ள விற்பனை வரி செலுத்துவோர்க்கு இனி மொத்தமாக விலக்கு அளிக்கப்படும். அதாவது இதுவரையில் ரூ. 3 இலட்சமாக இருந்த வரிவிலக்கு வரையறை இனி 10 இலட்சம் வரிவிலக்கு வரையறையாகும் என்று மாற்றி அமைக்கப்படுகிறது.

(9) மேலே எடுத்துள்ள முடிவின் மூலம் ஏற்படும் இழப்பை ஒருவகையில் ஈடுகட்ட, மிக அதிகமாக விற்பனை செய்யும் பெரும் வணிகர்கள் செலுத்தும் கூடுதல் விற்பனை வரியில் சிறிதளவு உயர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது ரூ. 10 இலட்சத்திற்கு மேல் ஆண்டு விற்பனை செய்யும் வாணிகத்தின் மீது ஒரே சீராக 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இனி 10 இலட்சத்திலிருந்து ரூ. 40 இலட்சம் வரையில் ஆண்டு விற்பனையின் மீது 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரியும், ரூ. 40 இலட்சத்திற்கு மேல் நடைபெறும் ஆண்டு விற்பனையின் மீது 1.5 சதவிகித கூடுதல் விற்பனை வரியும் விதிக்கப்படும்.



(10) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்குக் குறைவாக விற்பனை செய்பவர்களுக்குச் சுருக்கமான வரி மதிப்பீடு செய்யும் முறை இருந்து வருகிறது. இம்முறையில் பல கட்டுப்பாட்டு வரையறைகள் உள்ளன. இவற்றால் வணிகர்களுக்குப் பெருத்த இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்று அவர்களால் முறையிடப்பட்டது. இனி வணிகர்கள் மற்றும் விற்பனை வரி செலுத்துபவர்கள் ஆகியோர் சுருக்கமான வரி மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்த உதவி புரியும் வகையில், இந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் அறவே நீக்கப்படுகின்றன. வணிகர்கள் மீது நம்பிக்கை வைத்துச் செய்துள்ள இந்த ஏற்பாட்டை, வணிகர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த நம்பிக்கை வீணாகிப்போய், மீண்டும் கட்டுப்பாடுகளை அடுத்துவரும் ஆண்டுகளில் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

(11) இப்பொழுது உருட்டப்பட்ட இரும்பு மற்றும் எஃகு ஆகியவை விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, இறுதிப் பொருள்களின் தயாரிப்பின்போது பயன்படும் கழிப்பு இரும்பின் மீது 4 சதவிகித வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையைச் சீர்படுத்தும் வகையில், இனி கழிப்பு இரும்பிற்கு விற்பனை வரியிலிருந்து அறவே விலக்களித்துவிட்டு, இறுதிப் பொருள்கள் மீது மட்டும் 4 சதவிகித வரியை விதிக்க கருதப்பட்டுள்ளது.

(12) ஓட்டல் விடுதிகளில் அமைந்துள்ள ஆடம்பர வசதிகளைப் பொறுத்து விதிக்கப்பட்டுள்ள வரி விகிதத்தை சீர்படுத்த கருதப்பட்டுள்ளது.

(13) 1984 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் முதல் தமிழ்நாட்டில் வேலை ஒப்பந்தங்கள் மீது வரி விதிக்கப்பட்டது. இதன் செயற்பாட்டில் ஏற்படும் சில இடர்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மனித உழைப்பு மட்டுமே நிறைந்த வேலைகளைப் பொறுத்துச் சலுகை காட்டவும் வரி விகிதங்களைத் தகுந்தவாறு சீர்திருத்தி அமைக்கவும் கருதப்பட்டுள்ளன.

(14) குத்தகை மீதான வரியைச் சீராகவும், செம்மைப் படுத்தி அறிமுகப்படுத்தவும் அரசு விரும்பியுள்ளது. பல்வேறு குத்தகை நிறுவனங்களுடன் அரசு கலந்துரையாடல் நடத்திச் சில முடிவுகளை உருவாக்கியுள்ளது. அவற்றின் அடிப்படையில் குத்தகை மீதான வரி சீர்படுத்தப்பட்டு, நடைமுறைப் படுத்தப் படும்.

(15) உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகம் செம்மையாக நடைபெற அவைகளின் நிதிச் சுயசார்பு நிலையை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. கேளிக்கை வரியின் மூலம் கிடைக்கும் வருமானம், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான நிதி ஆதாரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

இந்த அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் வகையில், அனைத்து நகராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் தற்போது இருந்துவரும் கேளிக்கை வரி மீதான கூட்டுக் கட்டணம் மேலும் 10 சதவிகிதம் அளவில் அதிகரிக்கப்படும்.

(16) மாநிலத்தின் வெளியே கிளைமாற்றம் அல்லது தரகு முகவர் மூலமாகக் கொண்டு செல்லப்படும் இறுதிப் பொருள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள், செய்முறையில் உள்ள பொருள்கள் மற்றும் உபயோகப்படுத்தப்படும் பொருள்கள் ஆகியவற்றின் மீது 2 சதவிகித கொள்முதல் வரியை விதிப்பதற்கான அறிவிப்பை குஜராத் மாநிலம் தனது வரவு-செலவு நிதி நிலை அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள இறுதிப் பொருள்கள் தயாரிப்பாளர்களால் பயன்படுத்தப்படும் பொருள்கள் குறித்து நாம் சலுகைகள் அறிவித்திருக்கிறோம். வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படும் பொருள் மீது விதிக்கக்கூடிய மேற்கண்ட புதிய வரியை முறைப்படி குடியரசுத் தலைவரின் அனுமதிப்பெற்று, 1986-87ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்த தமிழக அரசு எண்ணியுள்ளது.

48. இன்று அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளையும், நெறிப்படுத்தும் முறைகளையும், சீரமைப்புத் தன்மைகளையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களும், பொது மக்களின் பல்வேறு தரப்பினரும் ஏற்று, மகிழ்ச்சியுறுவார்கள் என்று நான் பெரிதும் உறுதிகொள்கிறேன். மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகள் மூலம் அரசுக்கு ரூ. 20 கோடிக்கு மேலாக வருவாய் இழப்பு ஏற்படக்கூடும். எனினும், இச் சலுகைகள் காரணமாக உற்பத்தியும், விற்பனையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாலும், சில சீரமைப்புகள் கொள்முதல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றில் வருவாயைச் சிறிதளவு பெருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பதாலும் ஏற்படக்கூடிய இழப்புகளை ஈடுகட்ட முடியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

49. விளைபொருள் உற்பத்தி—செய்பொருள் உற்பத்தி ஆகியவற்றைப் பெருக்கியும், அவற்றின் மூலம் கிடைக்கும் வரி வருமானம்—வரியில்லா வருமானம் ஆகிய வற்றை ஈட்டியும், அப்படி ஈட்டப்பட்ட வருமானங்களைச் செம்மையுறக் காப்பாற்றியும், காப்பாற்றப்பட்ட வருமானங்களை நீதி—நேர்மை—சட்டம்—திட்டம் ஒழுங்கு—தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வகுத்துத் தந்தும் ஆட்சிபுரிய வேண்டும் என்ற குறள்நெறிக் கருத்திற்கு இணங்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கி வருகின்ற தமிழக அரசு செயலாற்றி வருகிறது.

50. இந்த நிதி நிலை அறிக்கையில், தமிழக அரசின் நிதி நிலைமை, கொள்கை, குறிக்கோள், திட்டம், சாதனை போன்றவை சுட்டிக்காட்டப்பட்டிருப்பதோடு மாண்புமிகு உறுப்



பினர்கள் படித்து பயன்பெறும் பொருட்டு, இதோடு இணைந்துள்ள பிற்சேர்க்கையில், சென்றகாலத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்தும், எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட இருக்கின்ற பணிகள் குறித்தும், விளக்கமாகவும், தெளிவாகவும் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

51. இந்த நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, சீருரை ஆற்ற இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல எண்ணத்தோடும், தூய நோக்கத்தோடும், தெளிந்த சிந்தனையோடும், பண்பட்ட உள்ளத்தோடும் வழங்கும் கருத்துக்கள், நாடு மேலும் வளம் பெறவும், மக்கள் மேலும் நலம்பெறவும் பயன் படுவனவாக அமையவேண்டும் என்று விரும்புகிறேன். இந்த அவையின் பெருமை புகழும் தொடர்ந்து நிலைநாட்டப்பட எல்லோரும் தத்தம் உதவியையும், ஒத்துழைப்பையும் தந்திடுமாறு எல்லோரையும் வேண்டுகிறேன். விவாதங்கள் சூடு அற்றனவாய், ஒளிமிகுந்தனவாய் அமையட்டும்.

52. இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட எனக்கு செவ்விய முறையில் உதவியையும், ஒத்துழைப்பையும் புரிந்த நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று அரும்பணிகள் பலவாற்றையும் ஆற்றிய நிதித் துறை—பிற துறைகள் ஆகியவற்றைச் சார்ந்த அதிகாரிகள் — அலுவலாளர்கள் ஆகியோர்க்கும், அச்சகத்தாருடைய எல்லோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

53. 1986-87 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை உவந்து ஏற்குமாறு அவையினரை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 18-3-1986 அன்று மேலவையின் கூட்டம் இல்லை.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 19-3-1986 அன்று புதன்கிழமை, காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-46)

## 2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

இல்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

68. 1986—87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைத்து நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

69. 1986—87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

70. 1986-87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

71. 1986—87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதி நிலை விவரம் (வரவு-செலவுத் திட்டம்). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

72. நிதி நிலைக்குறிப்பு, 1986—87, (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

73. நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள், 1986—87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

74. 1986—87 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-II திட்டங்கள்). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

75. ஆண்டுத் திட்டம், 1986—87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

76 1986—87 ஆம் ஆண்டின் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

77. பதவிகள்-சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை, 1986—87. (ஆங்கிலம்).

78. 1986-87 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

79. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 37—சாலைகளும் பாலங்களும், 52. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி பற்றிய விவரங்கள். (ஆங்கிலம்).



80. 1986—87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும், 53. சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள். (ஆங்கிலம்).

81. விரிவான மானியக் கோரிக்கைகள், 1986·87—1, 2, 7, 8, 9, 11, 41, 47; 3, 13, 14, 15, 16; 4, 5, 6, 12; 10, 22; 20, 49; 17, 18, 19; 21, 25, 45, 55; 23, 28, 35; 24, 26, 27, 48, 50 56; 30, 31, 32; 29, 33, 34; 36, 51; 37, 38, 52; 39, 53; 40, 44, 54; 42, 46, 58; 43, 57. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

## இணைப்பு I

[14 ஆம் பக்கத்தில் இனம் 1-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### நிதி நிலை அறிக்கை உரையின் இணைப்பு

#### கல்வி

கல்வித் துறையில் மாநில அரசின் சாதனைகள் கற்றறிந்தவர் பலராலும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன. சிறந்த தொரு கல்வித் திட்டம், வளம் செறிந்த வருங்காலத்திற்கு இன்றியமையாதது என்பதை, அரசு நன்கு உணர்ந்துள்ளது என்பது, கல்வித் துறையில் அடைந்துள்ள சாதனைகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

2. தொடக்கக் கல்வியைப் பரப்பும் பணியில் மாநில அரசு, அனைவரும் வியக்கும் வகையில், செயற்பட்டு வந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்திந்திய நிலையில் ஒன்று முதல் ஐந்து வரையுள்ள வகுப்புகளில் 91 விழுக்காடு மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்க, தமிழ்நாட்டில், இவ் வகுப்புகளில் சேர்ந்துள்ள மாணவர்களின் விழுக்காடு, 98·66 ஆகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோன்று, ஆறு முதல் எட்டு வரையுள்ள வகுப்புகளில், அனைத்திந்திய நிலையில் சேர்ந்துள்ள மாணவர்களின் விழுக்காடு 51 ஆக இருக்க, தமிழ்நாட்டில் 72.18 விழுக்காடு மாணவர்கள், இவ் வகுப்புகளில் சேர்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 1985-86-ல், ஆறு முதல் பதினான்கு வரையுள்ள வயதுத் தொகுதியில், கூடுதலாக 2.25 இலட்சம் மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, 31—12—1985-க்குள், 2.97 இலட்சம் மாணவர்கள் சேர்ந்துவிட்டனர் என்பது, பெருமைக்குரிய சாதனையாகும். துவக்கக் கல்வித் துறையில், தமிழக அரசு வெற்றிவாகைசூடி முன்னேறி வருவதற்கு முக்கியமான தொரு காரணம் முதலமைச்சரின் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் என்றால் அது மிகையாகாது.

3. ஒவ்வொரு நிலையிலும், கல்வியை மேம்படுத்துவதற்கு, அதிக வசதியைச் செய்து தர, மாநில அரசு இடைவிடாத முயற்சி செய்து வருகிறது. இதன்விளைவாக, 1985-86 ஆம் ஆண்டில் மட்டும் 85 புதிய உயர்நிலைப் பள்ளிகளும், 49 மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்க, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

4. அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் பல போதிய கட்டட வசதியின்றி பல்லாண்டுகளாக அவதியுற்று வருகின்றன. எனவே, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றுக்குக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு, அரசு சிறப்பிடம் அளித்து வருகிறது. 1977-78 முதல், 1985-86 வரையில், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றிற்காகக் கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூ. 23 கோடிக்கும் மேல், அரசு செலவிட்டுள்ளது. 668 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் வகுப்பறை ஒன்றோடு கூடிய ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்டுவதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 13 கோடி ஆகும். சுகாதார வசதிகள் செய்து கொடுப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 2 கோடி ஆகும்.

5. கல்லூரிக் கல்விக்காக, அதிக வசதிகளைச் செய்து கொடுப்பதில், தமிழக அரசு தொடர்ந்து நாட்டம் செலுத்தி வந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், தற்போதுள்ள அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக 65 பட்டப்படிப்பு பாடமுறைகளும், 30 புதிய பட்ட மேற்படிப்பு பாடமுறைகளும், 13 மாலை நேரக் கல்லூரிப் பட்டப்படிப்பு பாடமுறைகளும் தொடங்கப்பட்டு சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகமும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகமும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகமும், கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும், காரைக்குடியில் அழகப்பா பல்கலைக் கழகமும் தோன்றின.

6. தற்போது மாநிலத்தில், 31 பொறியியல் கல்லூரிகளும், 129 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் செயற்பட்டு வருகின்றன. ஒருபக்கம் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர மாணவர்கள் அதிக அளவில் முன் வந்தாலும், மற்றொரு பக்கம் அரசு அல்லது அரசு நிதி உதவிபெறும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்த அரசு நிதி ஆதாரங்கள் பற்றாக் குறையாயிருப்பதைக் கருத்தில் கொண்டும், அரசு நிதி உதவியில்லாமல், சொந்த நிதியைக் கொண்டு செயற்படும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும், பொறியியல் கல்லூரிகளையும் தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்த, அரசு தற்போது அனுமதி அளித்து வந்துள்ளது. எனினும், இந்த நிறுவனங்களை முறையாக நடத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அரசு வரையறுத்துள்ளது. அவை முறைப்படி நடைபெறாவிட்டால், அவற்றிற்கான அனுமதி மறுக்கப்படும் என்றும் அவை எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில், அரசு நிதி உதவியில்லாமல் சொந்த நிதியைக் கொண்டு,



87 பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும் 23பொறியியல் கல்லூரிகளையும் தொடங்க, அரசு அனுமதி அளித்துள்ளது. பொறியியல் கல்லூரிகளில் தற்போது ஏறத்தாழ 5,700 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில், 22,000 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7. இந்தியா ஏழ்மையிலும் வறுமையிலும் உழலும் நாடு. இங்கு எழுதப் படிக்கத்தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிக குறைவு. எனவே, முதியோர் கல்வி திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி, மீண்டும் வலியுறுத்தத் தேவையில்லை. முதியோர் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழக அரசு, தலைசிறந்த, சாதனை புரிந்துள்ளது. முதியோர் கல்வி மையங்களில் மகளிரைச் சேர்ப்பதில் 1983-84, 1984-85 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும், தொடர்ந்து சிறந்த முறையில் செயற்பட்டமைக்காக, மத்திய அரசு, தமிழக அரசுக்கு ரூ. 25 இலட்சம் பரிசளித்துள்ளது. தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 21,856 முதியோர் கல்வி மையங்கள் செயற்பட்டு வருகின்றன. இம் மையங்களில் 6·82 இலட்சம் முதியோர் கல்வி பயில்கின்றனர். இவர்களில், 5·8 இலட்சம் பேர் மகளிர்; 3·14 இலட்சம் பேர் ஆதிதிராவிட, பழங்குடி வகுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம்.

8. முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்ததன் மூலம், குழந்தைகளின் உடல் நலன், ஊட்டச் சத்து ஆகியவற்றைப் பேணிக் காத்து, சிறார்களின் உடல் நிலையை மேம்படுத்துவதில், தமிழ் நாடு அரசு, மேற்கொண்டுள்ள தலையாய முயற்சி, நாடெங்கிலும் பாராட்டுதலைப்பெற்றுள்ளது. இத் திட்டத்தின் வெற்றி கண்டு ஏனைய மாநிலங்களும் ஊக்கம் பெற்று, தமிழக அரசின் அடிச் சுவட்டைப் பின்பற்றி, இத்தகைய திட்டத்தை, அந்தந்த மாநிலங்களிலும் செயலுக்குக் கொண்டுவந்துள்ளன. 58,000 மையங்கள் மூலம் 2+முதல் 9+வரையிலுள்ள வயதுத் தொகுதியிலுள்ள 66 இலட்சம் சிறார்கள் பயனடையும் வகையில், 1982ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத் திட்டத்தினால், இன்று, 66,504 மையங்கள் மூலம், 86·88 இலட்சம் சிறார்களும், 2 இலட்சம் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களும் பயனடைகின்றனர். முதியோர் உதவித் தொகை பயன்,முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு, இத் திட்டத்தின் பயன், முன்னாள் படைவீரர்களுக்கும், 15—1—1983 முதற்கொண்டு, அவர் மனைவிக்கும் 1—1—1984 படைவீரர் இறந்துவிடின், அவர் மனைவிக்கும் 1—1—1984 முதற்கொண்டும் நீட்டிக்கப்பட்டது. இத் திட்டத்தின் பயன், 10 முதல் 15 வயது வரை உள்ள சிறார்களுக்கும், கிடைக்கும் வகையில், இத் திட்டம் 15—9—1984 முதற்கொண்டு விரிவாக்கப் பட்டது. இத் திட்டத்தினால், சுமார் 2 இலட்சம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் பெரும் பாலோர் ஏழைப் பெண்கள்: ஆதரவற்ற மகளிர் ஆவர். முதல்

ஆண்டில், ரூ. 100 கோடி செலவில் தொடங்கப்பட்ட இத் திட்டம், இப்பொழுது, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 169 கோடி செலவில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

9. இத் திட்டத்தினால் பயன் பெறுபவர்களுக்கு ஊட்டச் சத்து நிலையும், உடல் நலனும் உயர்ந்துள்ளன என்பது, இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்விலிருந்து தெளிவாக தெரிய வருகிறது. கிராமப் பகுதிகளில் சிறார்களிடையே சாதாரணமாக காணப்படும் வாய்ப்புண், இரத்தமின்மை, வெண்விழிப் புள்ளி (Bitot's spots) போன்றவை குறைந்து, இந்த நோய்களினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. இத் திட்டம் செயலுக்கு வந்துள்ள பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்த வண்ணம் உள்ளது.

### இலவசப் பாட நூல்—சீருடைத் திட்டம்

10. ஏழைச் சிறார்கள் பயனடையும் வகையில், விரிவான திட்டமொன்றைக் கொண்டு வரும் நோக்கத்துடன், அரசு, ஒன்று முதல் எட்டு வரையிலுள்ள வகுப்புகளில் படிக்கும் ஏழைச் சிறார்களுக்குப் பாடநூல்களையும், சீருடைகளையும் இலவசமாக வழங்க முடிவு செய்துள்ளது. இந் திட்டத்தினால், ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ. 27 கோடி செலவாகிறது. குழந்தைகளின் வருங்காலம் வளம்மிக்கதாக அமையும் பொருட்டு குழந்தைகளுக்கு முழுச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

### விளையாட்டுக்கள்.

11. விளையாட்டுப் பணிகளை மேலும் தீவிரப்படுத்துவதற்காக, இவ்வரசு, விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைத்துள்ளது. இக் கழகம் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளித்து தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு அதிக அளவில் பங்கெடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது.

### தமிழ் வளர்ச்சி—பண்பாடு

12. தென் மாநிலங்களிடையே பண்பாட்டு நிகழ்ச்சிகளைப் பரிமாற்றம் செய்து வட்டாரப் பண்பாடுகளைப் பேணிக் காப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, தென்மண்டலப் பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 5கோடி வழங்க மத்திய அரசு முன்வந்துள்ளது. தென்மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து இதற்குச் சமமான தொகையை வழங்கும். தமிழ் நாட்டுக் கலைஞர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் ஊக்கமளித்து உதவும் நோக்கத்துடன், அவர்களுக்குத் தாராள நிதியும், பட்டங்களும், பரிசுகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.



### மக்கள் நல்வாழ்வு

13. கி. பி. 2000-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதார வசதியளிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. அதற்கேற்ப, தரமான சிறந்த மருத்துவ வசதி அளிப்பதன் மூலம் கிராமப்புற மக்களுக்கான மருத்துவ உதவி, சுகாதாரப் பாதுகாப்பு ஆகிய வற்றை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இந் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, 5,000 பேர் வாழும் சமவெளிப் பகுதிகளிலும் 3,000 பேர் வாழும் மலை பழங்குடியினர் பகுதியிலும் சுகாதார துணை நிலையங்களை அரசு ஏற்படுத்தி வருகின்றது. 1985 மார்ச் வரையில், 5,860 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில், கூடுதலாக 1,084 சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

14. தொடக்கச் சுகாதார நிலையங்கள் 436, நிலை உயர்த்தப்பட்ட தொடக்கச் சுகாதார நிலையங்கள் 30 சிறு அளவிலான கிராமப்புற சுகாதார நிலையங்கள் 260 ஆகியவற்றில் தற்போது, சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதலாண்டில், அதாவது, 1985–86-ல், புதிய தொடக்கச் சுகாதார நிலையங்கள் 20 ஏற்படுத்த திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### குடும்ப நலம்.

15. குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில், தமிழ் நாடு எப்போதும் முன்னணியில் இருந்து வருகிறது. 1984-85-ல் குடும்பநலத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயற்படுத்தியதை பாராட்டும் வகையில், மத்திய அரசு, இந்த அரசுக்கு, ரூ. 2.5 கோடி பரிசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில், 1985-86-லும் இதே வேகம் இருந்து வருகின்றது. கருத்தடை செய்வதற்கு ஊக்குவிப்போருக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 50 கொடுக்கப்படும் என்று அண்மையில் அரசு அறிவித்துள்ளது. 1985-86ஆம் ஆண்டு 4.75 இலட்சம் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, 31—1—1986 வரையில், 3,77,681 கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்ட ஏனைய முறைகளைப் பிரபலப்படுத்துவதிலும் இதே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### குடிநீர் வழங்கல்.

16. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கக்கூடிய கிருஷ்ணா நதி நீர் திட்டம் தொடர்பான பணிகள் இரண்டு மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டின் எல்லைக்குள் அமைக்கப்படவிருக்கின்ற கால்வாயின் மொத்த நீளம் 25,275 கி. மீ. ஆகும். இதில், காடுகளல்லாத பகுதிகளில், சுமார் 24 கி. மீ. நீளக் கால்வாய் அமைக்கும் பணி நடந்தேறி வருகின்றது

இக் கால்வாய் அமையவிருக்கும் வனப் பகுதியைக் காப்பு வனப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், வனப் பகுதியில் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு எல்லைக்குள் கால்வாய் அமைக்கும் பணி தொடர்பாக, இது வரை ரூ. 5 கோடி செலவிடப்பட்டுள்ளது, இதைத் தவிர, தமிழ்நாடு அரசு, இத் திட்டத்திற்குத் தன் பங்குத் தொகையாக ஆந்திரப் பிரதேச அரசுக்கு, இதுவரையில் ரூ. 47 கோடி வழங்கியுள்ளது,

17. குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள ஒவ்வொரு கிராமத்திலும், குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது ஏற்படுத்திக் கொடுக்கப் பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, கிராமப்புற குடிநீர் வழங்குத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், தமிழ் நாட்டில், மொத்தம் 14,702 குடியிருப்புகளில் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. இவற்றுள் 11,614 குடியிருப்புகளில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுவிட்டன. இருந்தபோதிலும் அடுத்த அடுத்த ஆண்டுகளில் பருவமழை பொய்த்ததன் காரணமாகப் பொதுவாக எல்லா இடங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் இறங்கிவிட்டது. இதன் விளைவாகக் குடிநீர்ப் பிரச்சினை உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை. 14,826 ஆக உயர்ந்து விட்டது. இவ்வாறாகப் புதிதாக குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ள குடியிருப்புகளில், 4,891 குடியிருப்புகளுக்கு. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு விட்டது. ஆக, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், 13,023 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டியுள்ளது. கிராமப்புறக் குடிநீர் வழங்குத் திட்டத்திற்காக ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 175 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின் கீழ் கிராம புறக் குடிநீர் வழங்கு திட்டத்திற்காக ரூ. 30 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. இத்துடன் கிராமப்புறக் குடிநீர் வழங்கு விரைவுத் திட்டத்தின் கீழ், 1986-87 ஆம் ஆண்டில், மேலும் ரூ. 15 கோடி செலவிடப்படும்,

18. கடந்த சில ஆண்டுகளில், கிராமப்புறக் குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ், ஏராளமான கைப்பம்புகளும் விசைப் பம்புகளும் நிறுவப்பட்டுள்ளன. இவையாவும் சமுதாயச் சொத்துக்கள், எனவே, இவற்றைப் பேணிப் பராமரிக்க வேண்டியது மிக முக்கியம். கைப்பம்புகளையும் விசைப் பம்புகளையும் சீராகப் பராமரித்து வரவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இவ்வரசு பராமரிப்பு என்பதன் கீழ் ஒதுக்கப்படும் ஆண்டு மானியத் தொகையை ரூ. 20.70 இலட்சத்திலிருந்து ரூ. 50,00 இலட்ச



மாக உயர்த்தியுள்ளது. குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்துக்கான, ரூ. 24 கோடி நிதியிலிருந்தும், இதற்காக, அரசு ரூ 2 கோடி வழங்க முடிவு செய்துள்ளது' எதிர்காலத்தில், குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின் கீழ்ச் செய்யப்படுகின்ற நிதி ஒதுக்கத்தில், 10 விழுக்காடு பராமரிப்புக்கென ஒதுக்கப்படும்,

19, உலக வங்கியின் உதவியுடன், 1984-85 ஆம் ஆண்டில் ரு, 149.42 கோடி மொத்தச் செலவில் மேற்கொள்ளப்பட்ட, குடிநீர் வழங்குதல் மற்றும் குறைந்த செலவிற்கான துப்புரவுத் திட்டங்கள், செவ்வனே நடந்தேறி வருகின்றன. இத் திட்டங்கள் 4½ ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்படும். 1986-87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக, ரு, 24 கோடி ஒதுக்கபட்டுள்ளது, இது போலவே ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன், கோயம்புத்தூர் பெரியார் மாவட்டங்களில் புளூரைடு கலந்த நீர்நிலைகளுடன் கூடிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டமும் சீராக நடந்தேறி வருகிறது, 1986-87 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக, ரு, 4,80.83 இலட்சம் ஒதுக்கப்பட்டது. நகர்ப்பகுதி குடிநீர் வழங்கு திட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே செயற்படுத்தப் பட்டு வருகின்ற 42 திட்டங்களோடு, 1986-87-ல் ரு. 10,21.25 இலட்சம் செலவில், மேலும் 15 புதிய திட்டங்களை, மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மை

20, இந்த ஆண்டில் இம் மாநிலத்தில் பருவமழையில் போக்கு விநோதமாக இருந்தது, ஒரு சில பகுதிகளில் கடும் மழை பெய்தது: மற்றப்பகுதிகளில் மழை மிகவும் குறைவாக இருந்தது. பருவ மழையின் இத்தகைய போக்கினால், மாநிலத்திற்கு சங்கடமான நிலை ஏற்பட்டது, தஞ்சாவூர் மாவட்டத்தில், டெல்டா பகுதியில், சம்பா நெல் பயிரைக் காப்பாற்ற, நீர் விடுமாறு கர்நாடக அரசைக் கேட்கும் நிலை ஏற்பட்டது, எனினும், இந்தப் பாதகமான சூழ்நிலையை ஈடு செய்யும் வகையில், இம் மாநிலத்தில் தீவிர கோடைக்காலப் பயிர் சாகுபடித் திட்டம் ஒன்றை, இம் மாநில அரசு மேற்கொண்டது', பாதகமான பருவநிலை இருந்தபோதிலும் நெல், சிறு தானியங்கள் ஆகியவற்றின் உற்பத்தியளவு, முறையே 50 இலட்சம் மெட்ரிக் டன், 20 இலட்சம் மெட்ரிக் டன் ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது, 1986-87 ஆம் ஆண்டில். உற்பத்தித் திட்டம் முனைப்பாக்கப்பட்டு, 64 இலட்சம் மெட்ரிக் டன் நெல், 24 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்கள், 4 லட்சம் மெட்ரிக் டன் பயறு வகைகள், 5·2 இலட்சம் பேல்கள் பருத்தி என்ற உற்பத்தி அளவு கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

21, டெல்டா பகுதியில் அரசு ஏகபோக கொள்முதல் உரிமையை மேற்கொண்டிருக்கிறது, எனவே, உற்பத்தி ஊக்கத் தொகையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரு. 35 ஆக அதிகரித்துள்ளது.

22. தமிழ்நாட்டில், இயற்கை வளங்கள் மிகவும் குறைவு. எனவே, மண்வளம், நீர்வளம் போன்ற அடிப்படை இயற்கை வளங்களைப் பொருத்தமான அளவில் பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும். நில மேம்பாடு, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்புத் திட்டம், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், ஆற்றுப் பள்ளத் தாக்குத் திட்டம் போன்ற திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், மண்வளத்தையும், நீர்வளத்தையும் தக்க முறையில் பயன்படுத்த அரசு முயன்று வருகின்றது. பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டப் பகுதியில் ரு. 30.98 கோடி செலவில், பண்ணை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான புதிய திட்டமொன்றுக்கு, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் கீழ் ரு. 14.15 கோடி செலவில், 1,754 கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பு அணைகள் ஆகியவை கட்டப்பட்டன. இதனால், கிராமப் பகுதிகளில், வேலைவாய்ப்புக்கள் உருவாகி, நீரை மேலும் சிக்கனமாகப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

23. எண்ணெய் வித்துக்களின் மொத்த உற்பத்தியைப் பெருக்கியும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியாகும் பரப்பளவை அதிகரித்தும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தும், சமையல் எண்ணெய் பற்றாக் குறையை சரி செய்தும் ஏற்றங்காணும் நோக்கத்துடன், எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. மூல விதைகள் வழங்குவதைப் பெருக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் மேற்பார்வையின் கீழ், மூல விதைகளை உற்பத்தி செய்வது உட்பட, விதைப்பண்ணைகள் அனைத்திலும், எண்ணெய் வித்துக்களின் தரமான விதை உற்பத்தியையும் எண்ணெய் வித்துக்கள் துறை மேற்கொண்டிருக்கிறது. 1986-87-ல், 11,990 மெட்ரிக் டன் வேர்க்கடலை விதைகளையும், 120 மெட்ரிக் டன் எள்ளையும், 990 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளையும், 63 மெட்ரிக் டன் ஆமணக்கு விதைகளையும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

24. 1986-87-ல், தென்னை வளரும் பரப்பளவை, 1.70 இலட்சம் எக்டேராக அதிகரித்து 172 கோடி நெற்றுக்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1986-87-ல், 17 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியை அடையும் வகையில் எண்ணெய் வித்துக்களின்கீழ், 15.12 இலட்சம் எக்டேர் பரப்பளவில், இவை பயிரிடப்படும். 1986-87-ல், எண்ணெய் வித்துக்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம், தோராயமாக ரு. 15.39 கோடியாகும்.



கால்நடை.

25. கால்நடை வளர்ப்பு கிராமப்புற பொருளாதாரத்தின் முக்கியமான அங்கமாகும். பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களில் இது முக்கியமான பங்கு வகிக்கிறது. கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. எனவே, மாநிலத்தில் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்த மாநில அரசு பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

26. தமிழ்நாட்டுல் 11 தீவிரக் கால்நடை வளர்ப்புத் திட்டங்களும், 1,220 துணை நிலையங்களைக் கொண்ட 62 மையக் கிராமங்களும் செயற்பட்டு வருகின்றன, இவற்றுள் 1985-86-ல் 50 துணை நிலையங்களைக் கொண்ட ஒரு தீவிரக் கால்நடை வளர்ப்புத் திட்டம் உடுமலைப்பேட்டையில் தொடங்கப்பட்டது, 1985-86-ல் (31—12—1985 வரையில்) 3,56 இலட்சம் கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தரிப்புச் செய்யப்பட்டது. தீவிரக் கால்நடை வளர்ப்புப் பகுதியில், 3.25 இலட்சம் செயற்கைக் கருத்தரிப்புகள் சரிபார்க்கப்பட்டன. கால்நடைகளுக்கு இத்திட்டத்தின் மூலம் 77,630 கன்றுகள் பிறந்த விவரமும் நேரில் சரிபார்க்கப்பட்டது.

27. 1986-87 ஆம் ஆண்டில் செயற்கைக் கருத்தரிப்பு முறையே மேலும் 250 மையங்களுக்கு விரிவுபடுத்த, அரசு முடிவு செய்துள்ளது.

பாசனம்.

28. காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினைக்கு, விரைவில் தீர்வு காண, மாநில அரசு, தீவிர அக்கறை கொண்டுள்ளது, தமிழக முதல்வரும், கருநாடக மாநில முதல்வரும் 1984 சனவரி திங்களிலும், 1985 நவம்பர் திங்களிலும் இப் பிரச்சினைபற்றிக் கலந்துரையாடினர். விரைவிலேயே இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடரப் பெறவேண்டும். இப்பிரச்சினையில் இருதரப்பாரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு தீர்வை விரைவிலேயே காண வேண்டுமென்ற முறையில்தான் தமிழக அரசு முயன்று வருகிறது.

29. உலக வங்கியின் உதவியுடன் பெரியாறு-வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் பெருந்திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில், 10,305 எக்டேர் பரப்புக்குப் பாசன வசதியை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டது. முதல் கட்டப் பணிகளுக்காக, ரூ. 44.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் 23 மில்லியன் டாலர் நிதி உதவியுடன், 1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள், 1984

டிசம்பரில் முடிக்கப்பட்டன. உதவித் தொகையான 23 மில்லியன் டாலர்களும் உலக வங்கியிடமிருந்து ஏற்கெனவே முழுமையாக கிடைத்து விட்டது.

30. இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக, ரூ. 56.86 கோடி செலவிட, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந் திட்டத்தின்கீழ் கூடுதலாக 7,521 எக்டேர் பரப்பளவுக்குப் பாசன வசதி அளிப்பதே இரண்டாம் கட்டப் பணியின் நோக்கமாகும். இந்த இரண்டாம் கட்டப் பணிக்காக உலக வங்கி, 35 மில்லியன் டாலர் அளிக்கிறது. இரண்டாம் கட்டப் பணிகள், 1988 ஏப்ரல் திங்களுக்குள்ளாக முடிக்கப்பட வேண்டும். 1985-86 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 1,439 இலட்சத்தில், 1986 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் வரையில், ரூ. 10,59.77 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

31. தமிழ்நாட்டில் இயற்கைப் பாசன ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. இந்த ஆதாரங்கள் ஏற்கெனவே முடிந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. எனவே, எஞ்சியுள்ள பாசன ஆதாரங்களைப் பயன்படுத்த இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய அவசியத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின்கீழ், 66,000 எக்டேர் நிலத்துக்குப் பாசன வசதியை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்க, 72,720 எக்டேர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறைவான பாசன ஆதாரங்களே எஞ்சியிருப்பதால், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், கூடுதலாக 40,000 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதிகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இதற்காக ரூ. 154 கோடி செலவாகும்.

32. சிறுபாசனத் திட்டத்தின்கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 10,900 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூ. 13.83 கோடி செலவில், 10,982 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதியை ஏற்படுத்த, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

33. ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், தமிழ்நாட்டில், பாசன ஏற்பாட்டின்கீழ் வராத 150 ஏரிகளை, நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றையும், இவ்வரசு மேற்கொண்டுள்ளது. தண்ணீர்ப் பங்கீடு, உரிய அளவில் இருக்கும் வகையில், பாசன ஆதாரங்களைப் பெருக்குவதே, இந் திட்டத்தின் நோக்கமாகும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்—கட்டுப்பாட்டு அமைப்பை மேலும் சீரமைத்தல் ஆகியவற்றிற்காக ஏரிக் கரைகள், மதகுகள், உபரி நீர் ஏற்பாடு ஆகியவற்றை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 1986-87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 504.7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



34. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக, 1985–86 ஆம் ஆண்டுக்கு ஏற்பளிக்கப்பட்ட திருத்தச் செலவு மதிப்பீடு, ரூ. 39.33 கோடியாகும். இதனால் நடப்பாண்டில், கூடுதலாக 20,000 எக்டேர் நிலம் பாசனம் பெறும் என்றும், புன்செய் தானிய உற்பத்தி 49,080 மெட்ரிக் டன்னும், நன்செய் தானிய உற்பத்தி 260 மெட்ரிக் டன்னும் கூடுதலாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றன. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக, 1986–87 ஆம் ஆண்டில், ரூ. 39.92 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், கூடுதலாக, 17,000 எக்டேர் நிலப் பரப்புக்குப் பாசன வசதிகள் உருவாக்கப்படும். இதனால் புன்செய் தானிய உற்பத்தி, 37,090 மெட்ரிக் டன்னும், நன்செய் தானிய உற்பத்தி 4,052 மெட்ரிக் டன்னும், கூடுதலாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்.

35. மத்திய அரசு, 1-4-1985 முதல் விரிவான பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின்படி, வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், வட்டார கிராமப்புற வங்கி ஆகியவற்றின் மூலம் நெல், கோதுமை, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட பயிர்க் கடனின் 150 விழுக்காடு கட்டாயமாகக் காப்புறுதி செய்யப்பட வேண்டும். இந்திட்டத்தின்கீழ்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிறு, சொற்ப நில உழவர்கள் தாம் செலுத்திய பிரீமியத் தொகையில் 50 விழுக்காடு என்ற விகிதத்தில் உதவித் தொகை பெறத் தகுதியானவர். இத் திட்டத்தின்கீழ் நெல்-I 1985 பயிர் பருவத்தில் 140 வளர்ச்சி வட்டாரங்களைச் சேர்ந்த 45,000 உழவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தங்கள் பயிர்களைக் காப்புறுதி செய்துள்ளனர்.

### கூட்டுறவு.

36. கூட்டுறவுச் சங்கங்கள் உழவர்களுக்குத் தொடர்ந்து வேளாண்மை இடுபொருட்கள் வழங்கி வருகின்றன. நடப்பாண்டில், 1985 டிசம்பர் இறுதிவரையில் ரூ. 56.02 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் உழவர்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 82 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் வினியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காய்கறி உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலையும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான காய்கறிகளும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயற்படுத்துவதற்காகவும், காய்கறி உற்பத்தியாளர்களுக்கென்றே

வளர்ச்சி வட்டாரத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் மொத்தம் 516 காய்கறி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### காட்டு வளமும் தோட்ட வளமும்.

37. சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவி பெறும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் முதல் நிலை, 31-3-1987 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் 21,268 எக்டேர் பரப்பளவிலும் 610 கி.மீ. அளவிலும்மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

38. சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், காப்பு வனங்களுக்கு வெளியே செயற்படுத்தப்படுகிறது. குறிப்பாக, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், ஆகியவற்றின் மூலமாகச் சமுதாய நிலங்களில், மரங்களை வளர்க்கும் திட்டம், அதிக அளவில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. 24 கோடி மரக்கன்றுகளை நடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் ஆகியவற்றுக்கான நிதிகளிலிருந்து 15 கோடி மரக் கன்றுகள் நடப்படும். எஞ்சிய 9 கோடி மரக்கன்றுகள், சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழும் ஏனைய திட்டங்களின் கீழும் நடப்படும்.

39. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் செவ்விய முறையில் செயற்பட்டு வருகின்றது என்பதும், அது இது வரையில் தனக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதையும், ஈடு செய்து, இப்போது ஆதாயத்தில் இயங்கி வருகின்றது என்பதும் மகிழ்ச்சிக்குரியது. இக் கழகம், 1985-86ஆம் ஆண்டில், 42,800 டாலர் மதிப்புள்ள, அதாவது ரூ. 5.35 இலட்சம் மதிப்புள்ள, தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது.

### உணவு.

40. நமது மாநிலத்தில் இந்த ஆண்டில் நிலவிய கடுமையான பருவ நிலைமை காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டது. கொள்முதல் அளவை அதிகரிக்க காவிரி டெல்டா பகுதிகளில், ஏகபோக கொள்முதலை, அரசு 1-11-1985ஆம் நாளிலிருந்து கொண்டுவந்தது. இருப்பினும், இப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மேலும் ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், உற்பத்தி ஊக்கத் தொகை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 20-லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது.





குறுவை பருவத்தில், அரசு 2·9 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்தது. சம்பா பருவத்திற்கும் இதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டியிருந்தது. இத்துடன் கொள்முதலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய தொகுப்பிலிருந்து மாதந்தோறும் ஒதுக்கப்படும் அளவை அதிகரிக்க வேண்டுமென, மாநில அரசு, மத்திய அரசிடம் கேட்டது. மத்திய தொகுப்பிலிருந்து மத்திய அரசு ஓரளவுக்கு ஒதுக்கீட்டின் அளவை இப்போது அதிகரித்து தந்துள்ளது.

41 மத்திய அரசு அளிக்கக்கூடிய தனிக் கூடுதல் ஒதுக்கீடு, 1986 சனவரிக்கும் நீட்டிக்கப்பட்டது. வழக்கமாக வழங்கப்படும் 40,000 டன் அரிசிக்குமேல் கூடுதலாக 25,000 டன் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

42. நெல் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டதனால், திங்கள் ஒன்றுக்கு ஒரு அட்டைதாரருக்கு அதிக அளவாக வழங்கப்பட்டு வந்த 20 கிலோ அரிசியை, அரசு, 12 கிலோவாகக் குறைத்துள்ளது. ஆனால், ஒரு சிறுவருக்கு அல்லது வயது வந்த ஒருவருக்கு வழங்கப்பட்டு வந்த அளவு மாற்றப்படவில்லை. இந்த திருத்த அளவு வீதங்கள் 1–11–1985 முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன. 15–9–1984 ஆம் நாளுக்கு முன்னர் கிராமப் பகுதிகளில் அட்டைதாரர் 6 கிலோ அரிசியை பெறத் தகுதியுடையவராவார். இந்த அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தற்போதைய அளவு தாராளமானதாக இருக்கிறது.

43. தமிழ்நாட்டில் நீண்டகாலமாக, வலுவான பொது விநியோகமுறை உள்ளது. இது 20,723 நியாயவிலைக் கடைகள் மூலம் செயற்படுத்தப்படுகிறது. இவற்றில் 15,648 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், 5,011 கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், 64 நியாய விலைக் கடைகளைத் தனியார் நிர்வாகங்கள், மலைத் தோட்ட நிர்வாகங்கள் போன்ற ஏனைய அமைப்புகளும் நடத்துகின்றன. ஒரு கடைக்கான சராசரி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 575 என்று கணக்கிடப்பட்டுள்ளது. பல நியாய விலைக் கடைகள் ஆதாயமற்ற நிலையில் செயற்படுகின்றன. ஆகையால் நியாய விலைக் கடைகளை நடத்த ஒவ்வோர் ஆண்டும் அரசு உதவித் தொகையாக ரூ. 3 கோடி செலவிடுகிறது. 1985 ஆம் ஆண்டில், 11.05 இலட்சம் டன் அரிசி, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது. இத்துடன், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 2.19 இலட்சம் டன் அரிசி வழங்கப்பட்டது.

44. பொதுவான ரக அரிசியின் விலை 1981 பிப்ரவரியில் நிர்ணயிக்கப்பட்டது. அதன் பின்னர், மத்திய அரசு நெல் கொள்முதல் விலையையும் அரிசி விற்பனை விலையையும்

5 முறை உயர்த்தியுள்ளது. இருப்பினும், பொதுவான ரக அரிசியைப் பொறுத்தமட்டில், கிலோ ஒன்றுக்கு ரூ. 1.75 என்ற மிகக் குறைவான விலையையே மாநில அரசு பின்பற்றி வருகிறது. பொது விநியோக முறையில், குறைவான விலையில் அரிசி விற்பனை செய்யப்படுவதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, வழங்கப்படும் உதவித் தொகை வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 கோடி செலவுப் பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

### பொது விநியோகம்.

45. இம் மாநிலத்தில், விலை நிலைமையைக் கண்காணிப்பதற்கு, அரசு, தீவிர முயற்சிகளை எடுத்து வந்துள்ளது. மத்திய அரசின் வரிவிதிப்பு நிதிக் கொள்கைகளும் நாட்டின் மொத்த உற்பத்தி அளவும் விலை நிலவரத்தைப் பாதிப்பதால் இதில் மாநில அரசின் பங்கு வெகுவாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. எனினும், மாநில அரசைப் பொறுத்தவரையில், பொது விநியோக முறை மூலம் விற்பனையைச் சரிவர முறைப் படுத்துவதைக் கண்காணித்து, விலையைக் கட்டுப்பாட்டில் வைத்துவர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மோசமான பருவநிலை இருந்தபோதிலும், பொது விநியோக முறைமூலம் விற்பனை செய்ததால், அரிசியின் விலையேற்றம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறாக, 1985 மே திங்களுக்கும் 1985 செப்டம்பர் திங்களுக்குமிடையே அரிசி விலை அதிகரித்த போதிலும், சென்ற சில மாதங்களில் அரிசி விலை கட்டுப் படுத்தப்பட்டு வந்துள்ளது. நடப்பு அறுவடைப் பருவத்தில் விலை மேலும் சரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை, கோதுமைப் பொருட்கள், சமையல் எண்ணெய், தேயிலை ஆகியவற்றின் விலைகளும் குறைந்திருக்கின்றன. பயிறு வகைகள், காய்கறிகளின் விலை ஏற்ற இறக்கத்தைத் தவிர, மற்றபடி ஒரே சீராக இருந்து வருகின்றது. விலைகளின் ஏற்றத்தை கட்டுபடுத்த இந்த அரசு போதிய அளவு கண்காணிப்புப் பணியை முறையாக மேற்கொண்டு வருகிறது.

### மீனளம்

46. வீடுகள் தேவைபபடும் மீனவர்களுக்கு அவற்றைக் கட்டித் தருவதற்கு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு எடுத்து வருகிறது. இதுவரை, 11,404 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 9,738 வீடுகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986-87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக ரூ. 50 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.





### தொழில்கள்.

47. தமிழ்நாட்டில், மத்திய அரசு, அதிக அளவு முதலீடு செய்ய வேண்டுமென்ற கருத்தை மாநில அரசு அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது. காந்த நாடாக்களை ரூ. 10 கோடி முதலீட்டில் தயாரிப்பதற்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்திற்கு, மத்திய அரசு, அண்மையில் இசைவுக் கடிதத்தை வழங்கியுள்ளது, கனரக வாகனத் தொழிற்சாலை, சேலம் உருக்காலை, சென்னை உரத் தொழிற்சாலை போன்ற ஏனைய மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன மத்திய அரசுத் துறைத் திட்டங்களின் விரிவுத் திட்டத்திற்கு, நாம் நிலங்களை இலவசமாகக் கொடுத்துள்ளோம். தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திலுள்ள சுழல் உலை ஆலை, ரூ. 765 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இதன் வணிக உற்பத்தி விரைவில் தொடங்கப்படும். முழுக்க முழுக்க ஏற்றுமதி நோக்கில், கருங்கல்லைச் செதுக்கி மெருகேற்றும் தொழிற்சாலையை, ரூ. 640 இலட்சம் செலவில் மணலியில் அமைப்பது சம்பந்தப்பட்ட பணிகள் முடிவடைந்துவிட்டன. இத்தொழிற்சாலை, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ஒரு பிரிவாகும். இது விரைவிலேயே வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிதி நிறுவனங்கள், ஆதாயம் ஈட்டத் தொடங்கியுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1984—85 வரை ரூ. 121 இலட்சம் திரண்ட ஆதாயத்தை ஈட்டியுள்ளது. 1984–85–ல் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (SIPCOT) ரூ. 116 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. படித்து வேலையற்றிருப்பவர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்கும் பிரதமரின் திட்டத்தின்கீழ், நாம் இலக்கைத் தாண்டி விட்டோம், இத் திட்டத்தின்கீழ், 1984–85-ல், 22,500 பேருக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### வேலை வாய்ப்புப் பணி

48. நாளுக்கு நாள் பெருகி வரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, தனித் திறம் பெற்ற பணியாளர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. தற்போது, நமது மாநிலத்தில், 40 தொழிற் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில், 5 நிறுவனங்கள் மகளிருக்கானவை. இந் நிறுவனங்களில், மொத்தம் 15,120 மாணவ, மாணவியர் பயிலுகின்றனர். இருந்தாலும், பெருகிவரும் பணியாளர் தேவையைச் சமாளிக்க 1986–87–ல், மேலும் இரண்டு தொழில் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

### கதர் கிராமத் தொழில்கள்.

49. கிராமப் புறங்களில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்கு, அரசு, அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. தொழில் உற்பத்தியைப் பொறுத்தவரையில், கதர்–கிராமத் தொழில்கள் வாரியம், மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருட்களை

உற்பத்தி செய்வதில் முக்கியப் பங்கு ஆற்றுகிறது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பற்றவர்களுக்கும் உரிய வேலைவாய்ப்பு கிடைக்காதவர்களுக்கும், பெருமளவில் வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதில் இவ் வாரியம் முக்கியப் பங்காற்றி வருகிறது. இவ் வாரியம் தன் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவுகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் கதர்த் தொழிலையும் கிராமத் தொழில்களையும் வளர்த்து, அதன் மூலம், கிராமப்புறங்களில் உள்ள நலிந்த பிரிவினருக்கு, அந்தந்தக் கிராமங்களிலேயே, கிடைக்கின்ற கச்சாப் பொருட்களைக் கொண்டு, சிறிய மூலதன முதலீட்டுடன் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

50. இவ் வாரியம், 1984—85ஆம் ஆண்டில், ரூ. 108,82 கோடி மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்தது, 1985-86 ஆம் ஆண்டில் இது ரூ, 119 கோடியாக உயர்ந்துள்ளது 1986-87 ஆம் ஆண்டில் ரூ, 130 கோடி மதிப்புள்ள பொருட்கள், கதர்-கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

51. 1984-85ஆம் ஆண்டில், ரூ. 105 கோடி மதிப்புள்ள கதர், கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்கள் உற்பத்தியாகியுள்ளன. 1985-86–ல் ரூ, 125 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87-ல் ரூ, 137 கோடி மதிப்புள்ள கதர்-கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்கள் விற்பனையாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது வரை, இவ் வாரியம் 6.03 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளது, 1985 86-ல் மேலும் 63,000 பேர் இவ் வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பைப் பெறுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டு முடிய 7.33 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கைத்தறி

52. நெடுங்காலமாகவே, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், கைத்தறித் தொழில், மிக முக்கியமான பங்காற்றி வந்துள்ளது. இத் தொழில், ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. எனவே, இத் தொழிலில், மாநில அரசு, மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இம் மாநிலத்தில், மொத்தம் 5·56 இலட்சம் தறிகள் உள்ளன. இவற்றுள் 3.82 இலட்சம் தறிகள் ஏற்கனவே 1,600 தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் கொண்டு வரப்பட்டு விட்டன. கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் வருகின்ற நெசவாளர்களின் நூல் தேவையை மாநிலத்திலுள்ள 17 கூட்டுறவு நூற்பாலைகள் நிறைவு செய்து வருகின்றன, 1986-87-ல் கைத்தறித் துறையின் கீழ்த் தள்ளுபடிக்காகவும் உதவித் தொகைக்காகவும் அரசு ரூ. 16.00 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்காக, அரசு, சேமிப்பு-பாது காப்புத் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.



## மின்சக்தி.

53. நமது மாநிலம், சீரான பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டுமானால், மின்சாரப் பற்றாக்குறையின் பிடியில் சிக்காமல் இருக்க வேண்டியது அவசியம். இதனைக் கருத்திற் கொண்டு, ஏழாவது திட்டத்தில் மொத்தத் திட்ட நிதி ஒதுக்கமான ரூ, 5,750 கோடியில், மின்சக்தித் துறைக்கு ரூ. 2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1985–86-ல் மின்சக்தித் துறைக்கு ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டது. இது 1986–87–ல் ரூ. 395 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

54. நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களான சேர்வலாறு புனல்மின் திட்டம் (20 மெ.வா.), காடம்பாறை நீரேற்றுத் திட்டம் (400 மெ.வா,), கீழ்மேட்டூர் புனல்மின் திட்டம் (120 மெ.வா.), குந்தா மின் உற்பத்தி நிலையம்-V (20 மெ.வா.), மேட்டூர் அனல்மின் திட்டம் நிலை.I (420 மெ. வா) ஆகியவை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் தொடங்கப்படும். நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட புதிய திட்டங்களில், மேட்டூர் அனல்மின் திட்டம் நிலை II-ன் ஒரு பிரிவு (420 மெ. வாட்டில் 210 மெ.வா.), தூத்துக்குடி விரிவுத் திட்டத்தின் ஒரு பிரிவு (420 மெ. வாட்டில் 210 மெ.வா), நுண்ணிய புனல்மின் திட்டங்கள் மூன்று (16 மெ.வா,) ஆகியவை ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் தொடங்கப்படும். மாநில அரசுத் துறையின்கீழ் மொத்தம் 1.416 மெ.வா. உற்பத்தி செய்யப்படும். மேலும், ஏழாவது திட்டத்தில் வடசென்னை அனல்மின் திட்டத்தைச் (630 மெ.வா,) செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது, எனினும், இதன் பயன்கள் எட்டாவது திட்டக் காலத்தில்தான் கிடைக்கும். இத்துடன், கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டாவது பிரிவு, நெய்வேலி இரண்டாவது அனல்மின் நிலையம் (இது கட்டப்பட்டு வருகிறது), ஆந்திர மாநிலத்திலுள்ள ராமகுண்டம் உயர் அனல்மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து மின்சக்தியைப் பெறும். மாநில-மத்திய அரசுத் துறைத் திட்டங்களிலிருந்து தமிழ் நாட்டின் பயனுககுக் கிடைக்கும் மொத்த நிறுவு திறன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், 3,344 மெ. வாட்டாக இருந்தது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில், இது, 5,184 மெ. வாட்டாக உயரும்.

55. நடப்பாண்டில், இம் மாநிலத்தில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவமழையும் பொய்த்ததால், மாநிலத்தின் மின்சக்தி உற்பத்தியின் அளவு

குறைந்தது. இந்த ஆண்டில் 1985 ஜூலையிலிருந்து 1986 சனவரி இறுதி வரையிலான மின் உற்பத்தி, 10 ஆண்டு சராசரியுடன் ஒப்பிடுகையில், 1035 மி. யூனிட் குறைந்தது.

56. எண்ணூர், தூத்துக்குடி அனல்மின் நிலையங்களைப் புதுப்பித்து நவீனப்படுத்த, வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்ததனால், இவற்றின் செயல்திறன் இந்த ஆண்டு வெகுவாக மேம்பாடு அடைந்துள்ளது. தூத்துக்குடி அனல்மின் நிலையம், 1985-86-ல், 65 விழுக்காடு PLF-ஐ அடைந்தது, இந் நிலையம் 1983-84-ல், 51·5 விழுக்காட்டையும் 1984-85-ல் 62 விழுக்காட்டையும் ஒப்பிடுகையில், ஆண்டு முழுவதற்கும் 67 விழுக்காடு PLF-ஐ அடையும். எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் பொறுத்தவரை ரூ, 100.10 கோடி செலவில் விரிவான புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் பயன்கள் ஏற்கனவே கிடைக்கத் தொடங்கியுள்ளன, தொடங்கப்பட்டதிலிருந்து பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய இந் நிலையம், கடந்த ஆண்டு வரை, 36 விழுக்காடு PLF-ஐ மட்டுமே எய்தியுள்ளது. 1985-86-ல் அடைந்த PLF 50 விழுக்காடு ஆகும். ஆண்டு முழுவதற்குமான PLF 51 விழுக்காடு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

57. அனல் மின் நிலையங்கள் சிறந்த சாதனைகளை ஆற்றியதோடு, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில். 1985ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ஆம் நாளன்று தொடங்கி வைக்கப்பட்ட இரண்டாவது பிரிவிலிருந்து கூடுதலாக (235 மெ.வா.) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லையானால், இம் மாநிலத்தில் மின் பற்றாக்குறை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். தற்போது உயர் அழுத்த மின் சக்தி தேவைப்படும் 1,000 தொழிற்சாலைகளுக்கு 40 விழுக்காடு மின் வெட்டு உள்ளது, விவசாயிகளுக்கு இரு முறைமாற்று திட்டத்தின் கீழ் பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. நெய்வேலியிலுள்ள இரண்டாவது அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு 1986 ஏப்ரலில், செயல்படத் தொடங்கியவுடன், மின்சார நிலைமை சீரடையக்கூடும்.

58. இயக்கச் செலவுகளைக் குறைக்க மின் வாரியமும், அரசும் கவனம் செலுத்தி வருகின்றன. இயக்கச் செலவைக் குறைக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எண்ணூர் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள், மின் உற்பத்தியாகப் பயன்படுத்தும் எண்ணெய் அளவு, குறைந்துள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தமட்டில், மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தக் கூடிய எண்ணெய் அளவு 1983-84-ல், ஒரு பிரிவிற்கு 57 மில்லியன் லிட்டர் என்றிருந்தது. 1984-85-ல் ஒரு பிரிவிற்கு 48 மில்லியன் லிட்டர் ஆகக் குறைந்தது. 1985-86-ல் இதுவரை ஒரு பிரிவிற்கு 12.06 மில்லியன் லிட்டர் மட்டுமே



ஆகியுள்ளது. எண்ணூர் அனல் மின் நிலையத்தில்கூட பயன்படுத்தப்படும் எண்ணெய் அளவு, ஒரு பிரிவிற்கு 7.8 மில்லியன் லிட்டர் குறைந்துள்ளது.

59. அண்மையில் தொழிலாளர் சங்கங்களுடன் செய்து கொண்ட ஊதியத் திருத்த ஒப்பந்தத்தில், முதல் முறையாக ஊதியத் திருத்தத்துடன் தொழிலாளர்களுக்கான பணிச் சுமை குறித்தும் விவாதிக்கப்பட்டு, அதிகப் பணி அளவு கோட்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

60. செலவைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும், நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றின் விலையும், சரக்குக் கட்டணமும், மின் சக்தி வாங்குவதற்கான செலவும், அடிக்கடி உயர்வதனால், மின் வாரியத்தின் நிதி நிலை கடும் சுமைக்குள்ளாகியுள்ளது. 1986 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 9ஆம் நாள் முதல், நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 28 அதிகரித்ததால், 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 2.47 கோடியும், 1986-87-ல் ரூ. 10.71 கோடியும் கூடுதல் செலவு ஏற்படும்.

### போக்குவரத்து.

61. திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு, 1-4-1985-லிருந்து தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களின் போக்குவரத்து வசதிக்காக திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு, மற்றொரு புதிய போக்குவரத்துக் கழகம் தொடங்கப்படவிருக்கிறது. மதுரையை ஆண்ட புகழ்வாய்ந்த இராணி மங்கம்மாளின் பெயர் அதற்குச் சூட்டப்படும்.

### தொழிலாளர் நலன்.

62. தொழிலாளர்களுடன் நல்லுறவு தொடர்ந்து நிலவச் செய்வதில் மாநில அரசு முக்கிய பங்காற்றி வருகிறது. அரசு தலையிட்டதின்பேரில், தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது. 20 அம்சத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் இதுவரை ரூ. 44.45 இலட்சம் மொத்தச் செலவில் 32,575 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. 1985-86-ல் 1,100 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இம்மாநில அரசு, 1,109 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளித்துள்ளது.

## ஊரக வளர்ச்சி

திரு. க. சுப்பு : அந்தப் பரிசீலனைக்கு ஏதாவது காலவரையறை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். கால்நடை ஆய்வாளர்களைப் பொறுத்த வரையில், பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் வரையில் கால்நடை ஆய்வாளர்களாகவே பணியாற்றிவிட்டு எந்தவித பதவி உயர்வும் இல்லாமலே இருக்கிறார்கள். அப்படி 3,400 பேர் இருக்கிறார்கள். ஆகவே பால்வளத் துறையிலும், ஆடு வளர்ப்புத் துறையிலும் பல பதவிகளை உருவாக்க வேண்டும் என்பது போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்து அவர்கள் ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். அதிலே அமைச்சரும் கலந்து கொண்டிருக்கிறார். இருந்தாலும் "பரிசீலனையில்" இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே விரைவில் அந்தப் பரிசீலனையை முடித்து, தகுந்த முறையில் அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் எவ்வளவு காலம் என்று கேட்டார்கள். இந்தக் காலதாமதத்திற்குக் காரணம்—அவர்கள் கேட்டிருக்கின்ற கோரிக்கைகள் எல்லாம் இன்று நேற்றல்ல, பதினைந்து ஆண்டுக் காலமாக திரும்பத் திரும்ப அரசு பரிசீலனை செய்து ஏற்க இயலாது என்று தெரிவித்த கோரிக்கைகள். அவர்களுடைய எட்டு கோரிக்கைகளும் திரும்பத் திரும்ப கேட்கிறார்கள். அவர்களிடத்திலே களும் ஏற்க இயலாத கோரிக்கைகளாக இருக்கின்றன. அவர்களிடத்திலே யும் சொல்லியிருக்கிறேன். புதிய சூழ்நிலையில் ஏதாவது செய்யலாமா என்று புதிய முகாந்திரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதால் இதிலே கால தாமதம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. க. சுப்பு : ஏற்க இயலாத கோரிக்கைகளுக்குக் காலம் எடுத்துக் கொள்ளலாம். 36 மேற்பார்வையாளர்கள் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. 25 ஆண்டுக் காலம் பணி முடித்தவர்களையாவது அந்த 36 பணியிடங்களில் நிரப்ப வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஒரு கோரிக்கையையாவது அரசாங்கம் உடனடியாக அமுலாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்த காலியாக இருக்கின்ற இடங்களை நிரப்பக் கூடிய அளவிற்கு தற்போதுள்ள ஆய்வாளர்களுக்கு போதுமான நியதிகளுக்குட்பட்ட தகுதிகள் இல்லாத காரணத்தால், அவர்களை நியமிக்க முடியாது என்பதால், உரியவர்களை இந்த அரசு தேடிக் கொண்டிருக்கிறது.

திரு. அ. ப. சிவராமன் : இதனைத் தவிர்த்து கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சிக்கு அதிக எண்ணிக்கையில் சேர்த்து பயிற்சியை நீடித்து அதன் மூலம் கால்நடை ஆய்வாளர்களைப் பெற்று கிளை நிலையங்கள் மூடுவதைத் தவிர்க்கலாம். மேலும் 6 மாதங்களுக்கு மேல் மூடிக் கிடக்கும் கிளை நிலையங்களை அரசு விதிமுறைப்படி நிரந்தரமாக மூடிவிட வழி செய்வதால் இந் நிலையைக் கருத்திற்கொண்டு பயிற்சி நிலையங்களைத் துவக்கிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று உகந்த வரையில் பரிகாரம் தேடப்படும்.

## மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் குழுக் கூட்டம்.

* 74 வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 27—7—1985 அன்று புதுடில்லியில் நடைபெற்ற மாநில தொழிலாளர் நல அமைச்சர்களின் குழுக் கூட்டத்தில், தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில், தொழிலாளர்களுக்கு பங்கு அளிப்பது பற்றி, விவாதிக்கப் பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (இ) விவர அறிக்கையொன்று @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 312-313 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1986 மார்ச் 19

## Arakkonam Steels

*75 Q.—THIRU K. SUBBU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that a few persons belonging to the Arakkonam Steels Limited (Rolling Mill Project), were sent to Sweden for training;

(b) whether any of them was transferred to some other place; and

(c) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்வி எழ இடமில்லை.

(முற்பகல் 11-05)

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, தனிப் பயிற்சி பெறுவதற்கு என்று வெளிநாடுகளுக்கு சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றார்கள். அவர்கள் பயிற்சி முடித்து வந்த பிறகு, அவர்கள் பயிற்சி பெற்று வந்த துறையிலேயே அவர்களுக்கு வேலை அளிக்கப்படாமல், மற்ற சாதாரண வேலைகளுக்கு அவர்கள் மாற்றப்பட்டு விடுகின்றார்கள். இதன்மூலம் அரசாங்கத்தினுடைய பணம் வீணாகிறதல்லவா? தனியான பயிற்சி பெறுபவர்களை மற்ற பணிகளிலே அமர்த்துவதற்கு என்ன காரணம் என்றுதான் கேட்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, 4 பேர்கள் சுவீடன் நாட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். திருவாளர்கள் கணபதி, பால சுப்பிரமணியம், ஜகந்நாதன், அண்ணாதுரை என்று 4 பேர்கள். அவர்கள் யாரும் பணிமாற்றம் செய்யப்படவில்லை. மாறாக பதவி உயர்வுகான் தரப்பட்டிருக்கின்றார்கள்.



1986 மார்ச் 19]

### அரசின் உதவியுடன் தொழிற்சாலைகள் தொடங்குதல்.

* 76 வினா—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசின் 15 சதவிகித நிதியுதவி மற்றும் மாநில அரசின் 10 சதவிகித நிதியுதவியுடன் தொழில் துவங்க முனைவோர்களுக்கு, 21 இடங்களைத் தேர்ந்தெடுக்க, அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவை எந்தெந்த இடங்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இதுபற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது. இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த வினா எழுந்ததற்கு முக்கிய காரணம் இதுபோன்று தொழில் தொடங்க மானியமாக 25 சதவிகிதம் அளவுக்கு தென்னாற்காடு மாவட்டத்திற்கு அருகே உள்ள புதுவை மாநிலத்தில் கொடுக்கப்படுகிறது. அதை வைத்துத்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. புதுவை மாநிலத்தில் இதுபோன்று தொழில் தொடங்க 25 சதவிகிதம் மானியமாகக் கிடைப்பதால், வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் தொழில் தொடங்க தொழிலதிபர்கள் பின்வாங்கியிருக்கின்றார்கள். அதுதான் அதற்குக் காரணமாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருக்கின்றது என்று சொன்னார்கள். இந்தச் செயல்திட்டத்தை அரசு எப்போது நிறைவேற்றப் போகின்றது? அந்த 21 இடங்களிலே இதை நிறைவேற்றும்போது, முதல் கட்டமாக எவ்வளவு இடங்களில் அப்படிக் கொடுக்க இருக்கின்றார்கள் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் மான்யத் திட்டத்தின் கீழ் தமிழக அரசு இதை மூன்று வகையாகப் பிரித்திருக்கின்றது. ஏ, பி, சி என்று பிரித்திருக்கின்றது. தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டங்களில் மான்யம் 25 சதவிகிதம் அல்லது 25 லட்சம் ரூபாய், இதில் எது குறைவோ அதை மான்யமாக வழங்க இருக்கிறோம். அப்படிப்பட்ட இடங்கள் இருக்கின்றன. அப்படி 21 இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது. அதிலே பல்வேறு பரிசீலனைகள் இருக்கின்றன. பரிசீலனையில் இருக்கின்றபோது, அந்தப் பகுதியில்

இடத்தின் விலை கூடிவிடுகின்றது. ஒரு இடத்தில் விலை ஆயிரம் என்பது ஒரு லட்சம் ரூபாயாக ஆகின்ற நிலைமைகூட வந்துவிடுகின்றது. அதையெல்லாம் பரிசீலித்து விரைவில் தேர்ந்தெடுக்கவேண்டிய நிலையில் அரசு இருக்கின்றது. விரைவில் அந்தக் காரியம் பரிசீலிக்கப்பட்டு செய்யப்படும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இதைத் தொடங்குவதற்குக் காலதாமதம் ஆனாலும், நான் முன்பே குறிப்பிட்டதுபோல், தென்னாற்காடு மாவட்டம் புதுவை மாநிலத்திற்கு மிக அருகில் இருப்பதால், கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் தூரமே இருப்பதால், அங்கே சென்று தொழில் தொடங்க எண்ணம் வந்து எல்லோரும் புதுவை மாநிலத்திற்குச் செல்ல காரணம் இருக்கின்றது. அதைக் கருத்தில் கொண்டு முதன்முதலாக தென் ஆற்காடு மாவட்டத்தில் இதை அரசு அறிமுகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல, தமிழகத்திலே 21 இடங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கின்றது. அந்த 21 இடங்கள் ஒரே மாவட்டத்தில் வராவிட்டாலும், மற்ற மாநிலத்திற்கு தொழில்கள் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு இந்த இலாகாவினால் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு தொழிற் கொள்கை மீது நடைபெற்ற விவாதத்தில் 21 இடங்களைப்பற்றி ஒரு உறுதிமொழி கொடுத்தார்கள். இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல, நம்முடைய மாநிலத்தினுடைய முதலீடு வேறு மாநிலத்திற்குப் போய் நம்முடைய மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. முதல் கட்டமாக இந்த 21 இடங்கள் இல்லாவிட்டாலும்கூட, சிப்காட் காம்ப்ளெக்ஸ் எங்கு எங்கு இருக்கின்றதோ அந்த சிப்காட் காம்ப்ளெக்ஸ்க்காவது, அரசுக்குச் சொந்தமான அந்த சிப்காட் காம்ப்ளெக்ஸ்க்காவது இந்தச் சலுகைகளை உடனடியாக உறுதிப்படுத்துவதற்கு அரசு முடிவு செய்யலாம். இது குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ஏ, பி, சி என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அதைப் பின்பற்றி அங்கே தொழில் தொடங்கிக்கொண்டிருக்கின்றார்கள். கும்மிடிபூண்டியில் நிறைய பேர் தொழில் செய்துகொண்டிருக்கின்றார்கள். கடலூரிலே நிறைய பேர் தொழில் செய்துகொண்டிருக்கின்றார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் தொழிற்பேட்டை இல்லை என்ற குறைபாடு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் 25 சதவிகிதம் மான்யம் உள்ள தொழில் இடம் தேவை என்று கேட்கின்றார்கள். அது தற்போது பரிசீலனையில் இல்லை.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் எண்கள் 77 மற்றும் 78 ஒத்தி வைக்கப்படுகின்றன.

### மோட்டார் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர்

*** 79 வினா—திரு. சி. இராமலிங்கம் (செல்வி ஆ. லீலாவதி சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூரில் உள்ள இந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர், அங்குள்ள பாசனக் கால்வாயில் கலப்பதால், நீரின் தூய்மை பாதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இந்தத் தொழிற்சாலையில் சுத்திகரிக்கப்படாது வெளியேறும் கழிவுநீர், பாசனக்கால்வாயில் விடப்படும் போது நீர் மாசுபடலாம்.

(இ) அரசு, தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### தனியார் மருத்துவக் கல்லூரிகள்

*** 80 வினா—திரு. சி. இராமலிங்கம் (டாக்டர் இரா. சனார்த்தனம் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழகத்தில் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகள் எத்தனை ?

(இ) வெளிநாட்டுத் தமிழ் மாணவர்களுக்கு, குறிப்பிட்ட சதவீத இடங்கள், அக்கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யும் கருத்தரு ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மூன்று.

(இ) இல்லை.

(முற்பகல் 11-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துவங்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரியையும் தனியார் கல்லூரி என்று அரசு ஆணையிட்டிருப்பதால், பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல்கலைக் கழகம் ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பாக இருப்பதால், அங்கே துவக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரியை பெகல்டிகளில் ஒன்றாகத் தான் கருத வேண்டும். அதை தனியார் கல்லூரி என்று போட்டு, வேறொரு பல்கலைக் கழகத்தில் அதை 'அஃபிலியேட்' செய்ய வேண்டுமென்று சொல்லியிருப்பதால், பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மூன்று கல்லூரிகளுக்கும் ஒன்றாகச் சேர்த்து, அரசு ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதனுடைய அடிப்படையிலே அரசாங்கத்திற்கு சில இடங்கள் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தனியாக, இன்னொரு கேட்டிகரியாக அது இருக்க வேண்டுமென்ற அந்தக் கருத்தை அரசு ஏற்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனம். அந்தத் தன்னாட்சி பெற்ற நிறுவனத்தில் பல் மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு, அது அந்தப் பல்கலைக் கழகத்தின் பெகல்ட்டியாக இருக்க ஏற்கெனவே அனுமதித்திருக்கிறோம். இந்தியப் பல் மருத்துவக் கழகமும் அதை அனுமதித்திருக்கிறது. அங்கே பொறியியல் துறை இருக்கிறது, விவசாயத் துறை இருக்கிறது. பல்வேறு பெகல்டிகள் இருக்கின்றன. எனவே இந்த மருத்துவக் கல்லூரியும் ஒரு பெகல்டியாகத்தான் இருக்க வேண்டும். அதை தனியார் கல்லூரி என்று போட்டு, வேறொரு பல்கலைக் கழகத்துடன் அதை 'அஃபிலியேட்' செய்ய வேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கும், சட்டத்திற்கும் பொருந்தாது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை அந்தப் பல்கலைக் கழகத்தின் ஒரு பெகல்ட்டியாகக் கருதினால் தான், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்று சொல்லி, அதைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அந்த மருத்துவக் கல்லூரியை வேறொரு பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டுமென்று அரசாங்கம் சொல்லவில்லை. அனுமதி கொடுக்கும்போது, ஒன்றாக அரசாணை பிறப்பித்திருக்கிறோம் என்று சொன்னேன். இவற்றுக்கு மருத்துவ மனைகள் தேவைப்படுகின்றன. அதனால் அரசாங்கத்தினுடைய சில பொறுப்புகளும் இதில் இருக்கின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : வெளி நாட்டுத் தமிழ் மாணவர்களுக்கு இடம் ஒதுக்கீடு ஆய்வில் இல்லை என்று சொன்னார்கள். வெளிநாட்டில் வாழும் தகுதியுள்ள தமிழ் மாணவர்களுக்கு இடம் ஒதுக்க ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது ? அதற்கு ஏதேனும் தடைகள் இருக்கின்றனவா ? அதைப் பற்றி அமைச்சரவர்களின் விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : வெளிநாட்டில் வாழும் Tamil Nadu based foreign students என்று சொல்லக்கூடிய அந்த மாணவர்களைப் பொறுத்தவரையில், 22 இடங்கள் நம்முடைய அரசின் மூலமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குக்கூட மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று சொல்லி, நேற்றையதினம் அவர்களிடமிருந்து ஒப்புதல் வந்திருக்கிறது. ஏற்கெனவே, Computer system மூலமாக priority கொடுத்து, இடங்கள் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (* அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படாதது என்பதைக் குறிக்கும்.]

## 4. தகவல் கோரல்.

### உடுக்குறியிட்ட வினாக்களுக்கான அறிக்கைகளை உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அனுப்புவது குறித்து.

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தங்களிடத்திலே ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கும்போது, அதற்கான பதிலை அறிக்கையாகத் தரும்போது, இங்கே வந்த பிறகுதான் நாங்கள் பார்க்கிறோம். அப்படியில்லாமல், முன்தினம் அஜெண்டா அனுப்பும்போதே, இப்படிப்பட்ட அறிக்கைகளைச் சேர்த்து அனுப்பினால், அவற்றைப் பார்க்க வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது இருக்கும் முறை ரொம்ப நாளாகக் கடைப்பிடிப்பதாகும். இதுவரை எந்தவிதப் புகார்களும் வரவில்லை. குறைபாடுகள் ஒன்றும் வரவில்லை. எல்லா பார்லிமென்ட் முறைகளிலும் இப்படித்தான் இருக்கிறது. இன்றைய தினத்தைப் பொறுத்தவரையில், உறுப்பினர் அவர்கள் கேள்வி அவையில் வருவதற்கு முன்பே, அறிக்கையைப் படிக்க நீண்ட நேரம் இருந்தது. முதல் கேள்வியாக இருந்தால், உறுப்பினர் சொல்வது சரியாக இருக்கலாம். இருந்தாலும், இதுபற்றி யோசிக்கலாம்.

**5. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றையதினம் பேசுவதற்கு திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். குறித்த நேரத்திற்குள் அவர்கள் சொற்பொழிவை முடித்துக்கொள்ளலாம். அவர்கள் ஆரம்பப் பேச்சாளர்களாக இருப்பதால், கொஞ்சம் கூடுதலாக நேரம் அனுமதிக்கலாம். இருந்தாலும், நேரத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11-15)

*** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது எங்கள் அணியின் சார்பாக கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு, மேலவையில் ஆண்டுதோறும் ஒருமுறை நடைபெறுகின்ற நிதி நிலை அறிக்கை மீதான இப்படிப்பட்ட விவாதத்தின்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அவையில் இருப்பார்களேயானால், உறுப்பினர்கள் கூறுகின்ற கருத்துக்களுக்கு அவ்வப்போது விளக்கங்கள் அல்லது பதில்கள் கொடுக்கவும் இறுதியாக பதில் அளிக்கவும் உதவியாக இருக்கும். ஆனால் மேலவையில் இந்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே நடைபெறுகின்ற விவாதங்களை எல்லாம் குறிப்புகளின் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். விவாதங்களைப்பற்றி நேரடியாக அவர்கள் தெரிந்துகொள்ளும் நிலை இல்லை. மேலவையின் முக்கியத்துவம் இதனால் புறக்கணிக்கப்படுகிறதா என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இது முக்கியமான விவாதம், ஆண்டுதோறும் இப்படிப்பட்ட முக்கியமான விவாதங்கள் நடைபெறும்போதாவது, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இருந்தால் நன்றாக இருக்கும்.





**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்த அவையில் நீண்டகாலமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிகழ்வு ஆகும். காரணம் ஒரே நேரத்தில் இரண்டு அவைகளிலும் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர்ந்து இரு அவைகளிலும் விவாதங்கள் நடைபெறுகின்றன. ஆனால் ஒரே நிதியமைச்சர்தான் இருக்கிறார். ஒரு நிதியமைச்சர் இரண்டு அவைகளிலும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. தொடர்ந்து இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கை மீதான விவாதங்கள் நடைபெறுகின்றபோது இப்படிப்பட்ட நிகழ்வுதான் பின்பற்றப்படுகிறது. அமைச்சர்கள் இங்கே இருக்கிறோம். அவை முன்னவர் என்ற பொறுப்பிலும் நான் இருக்கிறேன். உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்துக்கள் முறையாக மாண்புமிகு நிதியமைச்சருக்குப் போய்ச் சேர்கின்றன. ஆகவே நிதியமைச்சரே இங்கேயிருந்து கேட்டு பதில் அளிக்க வேண்டுமென்று கேட்பது சாதாரணமாக நிகழ்வில் இல்லாத ஒன்று. ஆகவே நீண்டகாலமாக இருந்து வருகிற அந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், நம்முடைய விதிகளை விவாதித்து உருவாக்க இருக்கிற குழுவிலே இதனை வைத்து முடிவு எடுக்க வேண்டுமே தவிர, இப்பொழுது அந்தக் கருத்தைச் சொல்வதிலே பயனில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மீதோ அல்லது அமைச்சர்கள் மீதோ நம்பிக்கையில்லை என்ற அடிப்படையில் கருத்துக்களைச் சொல்லவில்லை. நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதமாக இருப்பதால், தொடர்புடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவையில் இருந்தால் நன்றாக இருக்கும். அதற்கு ஏற்ப விவாதம் நடைபெறும் நேரத்தை மாற்றியமைத்தால்கூட நன்றாக இருக்கும். ஆகவே என்னுடைய இந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில், நமது மக்கள் பாதிக்காத வகையில், வரிகளைப் போடாமல் இருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு மத்திய அரசு திடீரென்று அறிவித்த டீசல் மற்றும் பெட்ரோல் மீதான சர்சார்ஜ் உயர்வின் காரணமாக விலை உயர்வு ஏற்பட்டது. அதே வழியில் இவர்களும் சென்று இன்னும் கூடுதலாக ஏதாவது விலை உயர்வுக்கு வழி செய்து விடுவார்களோ என்று பயந்துகொண்டிருந்தோம். மத்திய அரசு விலையை உயர்த்திய நேரத்தில், மாநில அரசு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதுவும் உலக மார்க்கெட்டில் அவற்றின் விலை இறங்கிக் கொண்டிருக்கும்போது, விலையை ஏற்றுவது

சாதாரண மக்களின் நலனை பாதிக்கும் என்ற கருத்தைக் கூட மாநில அரசு தெரிவித்ததாக எனக்கு நினைவில்லை. ஆனால் தெரிவித்திருக்க வேண்டும். சரியான முறையில், கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும்.

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மத்திய அரசு அறிவிக்கின்ற நிதி ஆதாரம் பற்றிய ஒரு பிரச்சினையானாலும், வரிப் பிரச்சினையானாலும், ஒரு அரசு என்கின்ற அளவில் மாநில அரசு ஓர் அரசியல் கட்சி போல நடந்து கொள்ள முடியாது. ஆனால் மாநில மக்கள் அந்த வரி உயர்வினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டிய இடத்தில், தெரிவிக்க வேண்டிய நேரத்தில், தெரிவிக்க வேண்டிய முறையோடு தெரிவிப்போமே தவிர, உறுப்பினர் விரும்புகிறபடி, அதை அரசியல் பிரச்சினையாக ஆக்கி, ஒரு அரசியல் கட்சிக்கு லாபம் ஈட்டுகிற பிரச்சினையாக மாநில அரசு அதை மாற்ற முடியாது. அப்படிச் செய்வதை பொதுவாக நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் விரும்புவதில்லை. ஆகவே சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்ல வேண்டிய இடத்தில், சொல்ல வேண்டிய முறையில் சொல்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** நாடாளுமன்றம் என்பது இந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய ஓர் அவை. அதற்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, செய்ய வேண்டிய காரியம்பற்றி அந்த உறுப்பினர்களுக்கும் அதுபற்றிச் சொல்வதற்கான பொறுப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

(மாண்புமிகு தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அதைத்தான் சொல்கிறேன். மத்திய அரசு பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்தியது, நாடாளுமன்றக் கூட்டத்தொடர் துவங்குவதற்கு முன்பு. நாடாளுமன்றம் கூடாதபோதே விலை உயர்வு அறிவிக்கப்பட்டதைப் பற்றித்தான் நான் கூறுகிறேன். அதனால் உருவாகியிருக்கிற தமிழக மக்களின் உணர்வுகளை இந்த அரசின் சார்பாகவோ அல்லது ஆளும்கட்சியின் சார்பாகவோ சரியான முறையில் பிரதிபலித்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன். அப்படியில்லாதது ஒரு குறை. அவர்கள் இந்த உயர்வுகளை "எக்சைஸ் டூட்டி" (Excise Duty) என்ற அளவில் போட்டிருந்தாலாவது, மாநில அரசுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பங்கு கிடைத்திருக்கும். ஆனால் அப்படிப் போடாமல், சர்சார்ஜ் என்று



போட்டிருக்கிறார்கள். அதனால் மாநில அரசு வருவாயை இழந்திருக்கிறது. நமக்குப் பங்கு வரவில்லை. அதிலிருந்து நம்முடைய நிதி ஆதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற கண்ணோட்டத்தில்தான் நான் சொல்கிறேன். மத்திய அரசு என்ன நினைக்குமோ, பிரதம மந்திரி என்ன நினைப்பாரோ என்று . . .

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** முதலிலேயே நான் பேசும்போது அதைத்தான் குறிப்பிட்டேன். யார் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணத்தோடு கருத்துக்களை வெளியிடும் எண்ணம் இந்த அரசுக்கும் இல்லை. கண்டிக்க வேண்டிய குறைகளை, எடுத்துக்காட்ட வேண்டிய குறைகளை, மக்களுக்குப் பாதகமான சூழ்நிலைகள் ஏற்படுமானால் அவைகளை, முறையோடு எடுத்துக்காட்டாமல் இருந்தது இல்லை. அதற்காக அச்சமும் கொண்டது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த உரையோடு கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. நான் ஏற்கெனவே சொன்னவாறு எந்த அளவுக்கு மக்களைப் பாதிக்கும், அரசைப் பாதிக்கும் என்ற நிலைமைகளை உணர்ந்து சொல்லவேண்டிய இடத்தில் சொல்ல வேண்டிய முறையில் இந்த அரசு சொல்லிக்கொண்டுதான் இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அப்படிச் சொல்வதை பகிரங்கமாகச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பகிரங்கப்படுத்துவது என்பதுதான் சில நேரங்களில் அரசியல் என்று ஆகிவிடுகிறது. அதில் அரசியல் லாபம் தேடுவதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்புவது இல்லை. மக்களுக்கு நன்மை தேடுவது ஒன்றுதான் அவர்களின் இலட்சியம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அடுத்ததாக, இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வரி போடப்படவில்லை என்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். மேலும் பல வரிச் சலுகைகளையும் அளித்திருக்கிறார்கள். அதற்காகவும் நான் அரசைப் பாராட்டுகிறேன். இந்த பட்ஜெட்டிலே இன்னொன்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா தமிழர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இரண்டு ஆண்டு களுக்கு முன்பு இனப்படுகொலை நடந்தபோது இங்கே எழுந்த எழுச்சி ஆத்திரம், வேகம், உணர்வுகள், இப்போது அங்கே அந்த இனப்படுகொலை நடவடிக்கைகள் அன்றாட நடவடிக்கையாக, நிகழ்ச்சிகளாகப் போய்விட்ட பிறகு, இல்லையோ என்று நினைக்கிறேன். இனப்படுகொலை பற்றி

செய்திகள் நாள்தோறும் பத்திரிகைகளில் செய்திகளாக வருகின்றன. அப்படி தினந்தோறும் படுகொலைகள் நடக்கிறபோது, மத்திய அரசு இன்னும் தெளிவாகவும், விரைவாகவும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தமிழக மக்கள் விரும்புகிறார்கள். அந்தக் கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் அரசின் கருத்துக்கள் இருக்கின்றன. நமது கருத்துக்களை இன்னும் கடுமையாகக்கூட தெரிவித்திருக்கலாம். இன்னும் சொல்லப்போனால், மாநில அரசுக்கு நாம் காலக்கெடு கூட வைக்கலாம். காலக் கெடு ஒன்று நிர்ணயித்து, அதற்குள் அப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று திட்டவட்டமாக வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சொன்னால், மத்திய அரசுக்கு நாம் விடுக்கும் கோரிக்கை இன்னும் பயனுள்ளதாக அமையும். அதோடு கூட, தமிழக முதல்வர் அவர்கள், தென் மாநில முதல்வர்களோடு இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசி ஒரு பொதுக் கருத்தை உருவாக்க தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏனென்றால் இது இப்போது தமிழ் நாட்டு பிரச்சினை அல்ல. வட இந்தியாவிலே இத்தகைய உணர்வுகள் இருக்கின்றனவா இல்லையா என்பது தெரியாது. குறைந்த பட்சம், தென்னிந்திய முதல்வர்களின் உணர்வுகளைத் திரட்டி, அவர்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்றும், அதன்மூலம் பொதுக் கருத்தை உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டானது, பஞ்சாயத்துத் தேர்தல்கள், நகராட்சித் தேர்தல்கள் ஆகியவை நடந்து முடிந்த பிறகு வந்திருக்கிறது. பஞ்சாயத்துத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரையில், நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. முதலிலே, இந்தத் தேர்தல்களே நடக்குமா நடக்காதா என்ற அவநம்பிக்கை இருந்தபோது, சுப்ரீம் கோர்ட் இந்தத் தேர்தலுக்குத் தடை செய்யுமோ என்ற சஞ்சலம் எல்லோருக்குமே இருந்தபோதிலும், எவ்வித சிக்கலும் இல்லாமல், சுமுகமாக இந்தத் தேர்தல்களை நடத்தியதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலம், கடந்த பத்தாண்டுக் காலமாக தேர்தல்கள் நடக்காமல் இருந்ததால் ஏற்பட்ட பாதிப்புகள் நீக்கப்படும் வகையில், தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் கட்சி மனமாச்சரியங்களை கைவிட்டு செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தேர்தல் முடிந்த பிறகு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற போர்முனை மனமாற்றத்தை ஆளும் கட்சியினர் ஒப்புக்கொள்ள வேண்டும்



(முற்பகல் 11-25)

என்று கேட்டுக்கொள்கிறேன். அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளா விட்டாலும்கூட, கட்சியின் உள்நடவடிக்கைகளிலாவது ஒப்புக்கொண்டு, சரியான விமர்சனத்தை ஏற்றுக்கொண்டு, உண்மையைப் புரிந்துகொண்டு, சுட்டிக்காட்டும் தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். இதை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொண்டு, பாடமாக எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே தேர்தல் முடிந்த பிறகு, கட்சி மாறுபாடு இல்லாமல் எல்லோரும் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாற்றுக் கட்சியினரைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக, பேரூராட்சித் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களிடம் ஆளும் கட்சியினர் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாதவாறு தமிழக அரசு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு ஒரு சம்பவம் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஓர் அமைச்சர், அவரின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் குடியிருந்த வார்டிலே எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். வெற்றி பெற்ற கவுன்சிலர் அவர் வார்டிலுள்ள அமைச்சருக்கு மரியாதை செலுத்தும் வண்ணம் மாலை போட விரும்பியிருக்கிறார். தனது விருப்பத்தை அமைச்சருக்கு வேண்டிய ஒரு நண்பர் மூலம் அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறார். நண்பரும் அமைச்சரிடம் கேட்டிருக்கிறார். அமைச்சர், ** என்று சொல்லியிருக்கிறார். இது சரியான ஜனநாயகப் பண்பு அல்ல. மேற்படி கவுன்சிலர் கேலி செய்வதற்காகவோ, கிண்டல் செய்வதற்காகவோ வருகிறார் என்றால், அமைச்சர் அவ்வாறு சொல்லலாம். அவர் மரியாதை செலுத்த வருகிறார் என்றால், மனமுவந்து வருகிறார் என்றால், இவ்வாறு சொல்வது ஜனநாயகப் பண்பு அல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜேப்பியார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை அவரது நண்பர் சந்திக்கச் சென்றதை மாண்புமிகு உறுப்பினர் நேரில் பார்க்கவில்லை. இவரிடம் நண்பர் சொன்னதை வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது உள்நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது.

---

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[திரு. ஜேப்பியார்] [1986 மார்ச் 19

அவர் பார்த்திருந்தால் சொல்வது சரி. மாண்புமிகு உறுப்பினரும் பார்க்கவில்லை. அவரிடம் சொன்னதை வைத்துச் சொல்கிறார்கள். அது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்சம் விரிவாகப் பேசினால், பெயர் எல்லாம் சொல்லவேண்டியதிருக்கும். நான் சொன்னது உண்மை. நன்கு தெரிந்துதான் சொல்கிறேன். உண்மையைத்தான் சொல்கிறேன். அதனால்தான் பெயரைச் சொல்லாமல், ஊரைச் சொல்லாமல், இடத்தைச் சொல்லாமல் சொல்கிறேன்.

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றிய, பேரூராட்சித் தலைவர்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர்களைச் சந்திப்பதும், காலில் விழுவதும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் அமைச்சர்கள் காலில் விழுந்த வண்ணமாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். எங்கே அப்படி நடைபெற்றது? அப்படி நடைபெறாத ஒன்றை ஆதாரம் இல்லாமல் உறுப்பினர் சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், மாண்புமிகு அவை முன்னவர் அனுமதித்தால், யார் யார், யார் யாருடைய காலில் விழுந்தார்கள் என்பதைச் சொல்கிறேன்.

திரு. ஜேப்பியார் : அமைச்சர் பெயரைச் சொல்வது தவறு இல்லை. பார்க்காததைச் சொல்வது என்பது சரியல்ல.

* திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், காலில் விழுவதைக்குறித்துச் சொல்லும்போது 'இல்லை' என்று மறுத்துச் சொல்கிறார்கள். நான், அவரது சுயமரியாதை உணர்வை வரவேற்கிறேன். ஆனால் காலில் விழுந்து வணங்கும் வழக்கத்தை முதலில் கொண்டு வந்தது சங்கராச்சாரியாருக்குப்பின் கலைஞர் அவர்கள்தான். எத்தனை பேர் அவர் காலில் விழுந்தார்கள்.



1986 மார்ச் 19]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் விமான நிலையத்தில் முதல்வரின் முன் விழுந்த வரலாற்றை எல்லாம் நாம் இப்போது தான் பார்த்திருக்கிறோம். அந்தப் பழக்கம் எங்களிடம் இல்லை.

* திரு. எஸ். ஆர். இராதா : இப்பழக்கத்தை உருவாக்கியதே மாண்புமிகு கலைஞர் அவர்கள்தான்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு வரலாம்.

* திரு. எஸ். ஆர். இராதா : எத்தனை பேர் தன் காலில் விழவேண்டுமென்பதற்காக மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்ன என்ன எல்லாம் செய்தார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். காலிலே விழ வேண்டுமென்பதற்கு தி.மு.க தலைவர்தான் காரணம்.

(முற்பகல் 11-30)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, அதற்காக முயற்சி செய்த உறுப்பினரும் திரு. இராதா அவர்கள்தான்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாற்றுத் தலைவரவர்களே, விவாதம் வேறு எங்கேயோ திரும்பி தேவையற்ற பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. அருள்கூர்ந்து உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையின்மீது நடந்துகொண்டிருக்கிற விவாதம் தொடர்பான பிரச்சினைகளைப்பற்றிப் பேசினால், அவைக்குப் பலன் உள்ளதாக அமையும். இந்தப் பிரச்சினைக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, நிதிநிலை அறிக்கை தொடர்பான விவாதத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசத் தொடங்கினால், அது நமக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, வெள்ள நிவாரணப் பணிகளைப்பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிற உதவி ரூ. 66.8 கோடி. அதில் ரூ. 45 கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 21.8 கோடி ரூபாய் செலவு செய்யப்படவில்லை. நிதியாண்டு இறுதியான மார்ச் மாதத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசின் உதவித் தொகையை ஏன் முழுவதுமாக செலவழிக்கவில்லை? ஏராளமான நிவாரணப் பணிகள் செய்யப்படவேண்டியிருக்கின்றன. சென்னையிலிருந்து

போகும் எண் 45 தேசிய நெடுஞ்சாலைகளில், குறிப்பாக விழுப்புரம் வரை உள்ள நெடுஞ்சாலை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள்/ சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கும் காட்சி நமது எல்லோருடைய கண்களுக்கும் புலப்படுகின்ற காட்சிதான். இன்னும் அந்த சாலைகள் எல்லாம் செப்பனிடப்படவில்லை. வெள்ளம் வந்து 4 மாதங்கள் ஆகிவிட்டது. இன்னும் 21.8 கோடி ரூபாய் செலவு செய்யப்படாமல் இருக்கிறது. இந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும். செப்பனிடப்படாமல் இருக்கும் சாலைப் பணிகளைச் செய்து முடிக்க விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், சுகாதாரப் பாதுகாப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது நடக்கின்ற சத்துணவுத் திட்டத்திலே எப்போதுமே நாங்கள் சொல்லி வருகின்ற, தீர்க்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டத்திலே இருக்கின்ற புகார்களைக் களைவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுத் துறையைப் பொறுத்தவரையில், அத்துறை தனித் துறையாக அமைக்கப்பட்டு, ஒரு இயக்குநரின் தலைமையில் செயல்படுமென்று முன்பு கொடுக்கப்பட்ட அறிவிப்பு செயல்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு வேளை ஒரு முட்டை, ஒரு கப் பால் ஆகிய இந்த இரண்டையும் கொடுக்க முடியுமா என்பதை இந்த அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முட்டையும், பாலும் சரியான முறையில் குழந்தைகளுக்கு சேர்த்துக் கொடுத்தால் அவர்கள் மேலும் ஆரோக்கியமுள்ள குழந்தைகளாக வளர்வதற்கு வழி செய்யும். எனவே அந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிருஷ்ணா ஆற்று குடிநீர் திட்டத்தில் நமது அரசு அதிகரித்த நிதி ஒதுக்கீட்டையெல்லாம் செலவு செய்துவிட்டது; ஆனால் ஆந்திர அரசு அதிகரிக்க வேண்டிய ஒதுக்கீடு அதிகரிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்களும், ஆந்திர முதல்வர் அவர்களும் நண்பர்கள்தான்; நல்ல நண்பர்களாகப் பழகியவர்கள்தான். இந்த இரண்டு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கிற நிதி ஒதுக்கீட்டில், ஆந்திர அரசு தனது உரிய பங்கைச் செலவழிக்கவில்லை. அதன்





காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. நமது முதல்வர் அவர்களும் ஆந்திர முதல்வர் அவர்களும் சந்தித்துப் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் மின்சக்தி உற்பத்திபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அண்மையில் ஒரு பத்திரிகையில் நமது மின் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தத் துறை சம்பந்தமான வேலையே இல்லையென்றும், ஒரு நாளைக்கு 5 கதைப் புத்தகங்களாவது அவர் படிக்கிறார் என்றும் போடப்பட்டிருந்தது. . . (உறுப்பினர் ஒருவர் எழுந்தார்). . . நான் குற்றமாகச் சொல்லவில்லை. . . .

திரு. அ. ப. சிவராமன் : தலைவரவர்களே, ஒரு பத்திரிகையிலே, அதுவும் வாரப் பத்திரிகையிலே ஒரு ஹேஷ்யமாகப் போடப்பட்டிருக்கிற செய்தியை அவைக் குறிப்பிலே ஏற்றுகிற முயற்சியில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் சந்தேகிக்கிறேன். தயவுசெய்து அதை அவர்கள் மாற்றிக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், அந்தப் பத்திரிகை எழுதியது சரியா, உண்மையா, உண்மைக்கு மாறானதா என்பதற்குள் நான் போகவில்லை. அதற்கு என்ன அர்த்தம் என்றால், மின் துறை அமைச்சர் அவர்களுக்கு வேலையே இல்லை என்பது மாதிரி போட்டிருக்கிறார்கள். அதாவது மின்சார வாரியத் தலைவருக்குத்தான் நிறைய வேலை இருக்கிறது; மின் துறை அமைச்சருக்கு வேலையே கிடையாது; எல்லா ஃபைல்களும் மின்வாரியத் தலைவருக்குப் போய்க் கொண்டிருக்கின்றன என்கிற பொருளில்தான் அந்தச் செய்தியில் உணர்த்த வருகிறார்கள் என்பதுதான் முக்கியம். கதைப் புத்தகம் படிப்பது கூட ஒரு relax செய்வதற்காகக் கூட இருக்கலாம். ஆனால் நம்முடைய விதிமுறைகள், அரசியல் சட்டங்கள் இடம் கொடுத்தால், எல்க்ட்ரிசிட்டி போர்டு சேர்மனை எக்ஸ்-அபிசியோ எலக்ட்ரிசிட்டி மினிஸ்டராக ஆக்கிவிடலாம்; இந்தப் பிரச்சினையையும் தீர்த்துவிடலாம். வேண்டுமானால்

(முற்பகல் 11-35)

இப்படிச் செய்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம். மின்சார வாரியத்தின் தலைவருக்குத்தான் அதிக அதிகாரம், அவருக்குத்தான் அதிகமான வேலை, மின்வாரிய அமைச்சருக்கு வேலையே கிடையாது, அவருக்கு ஃபைலே கிடையாது, அந்தத் துறைக்கும் அவருக்கும் சம்பந்தமே இல்லை என்றால்,

எதற்காக ஒரு அமைச்சர் அந்தத் துறைக்கு இருக்க வேண்டும்? பெயரளவில் மட்டும் இப்படி ஒரு * * அவர் இருக்கத்தான் வேண்டுமா? பத்திரிகைகளில் விமர்சனம் செய்கிற அளவுக்கு, கேலி செய்கிற அளவுக்கு, நையாண்டி செய்கிற அளவுக்கு அவர் ஆக்கப்பட்டிருக்கிறார். . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது மின்வாரியம் பற்றியும் மின் வளர்ச்சி பற்றிய திட்டங்கள்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியைதான் மாண்புமிகு உறுப்பினர் இப்போது வேறு ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார். மின்வாரியம் என்பது தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனுடைய தலைவரும் அங்கே இருக்கிற மற்றப் பொறுப்பாளர்களும் முழுமையான உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் கொள்கை சம்பந்தமான எந்த முடிவையும் அரசுதான் எடுக்கிறது. அரசின் சார்பில் அமைச்சர் அவர்கள் எடுக்கிறார். ஆகவே அவருடைய அனுமதியில்லாமல், ஆணையில்லாமல், அரசாணை இல்லாமல் மின் வாரியம் எந்த இயக்கத்தையும் மேற்கொள்ள முடியாது. பத்திரிகையில் பல்வேறுவிதமான உணர்வுகளோடு செய்திகளை வெளியிடுகிறார்கள். சிலர் பாராட்ட வேண்டும் என்று வெளியிடுகிறார்கள். சிலரை இழிவுபடுத்த வேண்டும் என்றும் வெளியிடுகிறார்கள். எனவே பத்திரிகைச் செய்திகளை நாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுவது என்பது நமக்கு அவ்வளவு பயன் தராது என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, ஒரு அமைப்பில் தற்போது இருக்கும் நிர்வாக முறையை மாற்ற வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொல்வது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உள்ள உரிமை. ஆனால் அதற்கு ஆதாரமாகச் செய்திகளை எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, பத்திரிகைகளில் வருகிற அவதூறான செய்திகளையோ அல்லது பத்திரிகைகள் தங்கள் வாசகர்களை மகிழ்விக்க வேண்டும் என்று போடுகிற செய்திகளையோ ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு புதிய திட்டத்தை அரசு பரிசீலிக்கலாம் என்கிற வகையில் பேசுவது அவ்வளவு பொருத்தமாக அமையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு நகராட்சிமன்றத்தின் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யாரோ ஒருவர் ஒரு அமைச்சரைப் பார்க்க

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



வேண்டும் என்று விரும்பியதாகவும் அதற்கு அந்த அமைச்சர் மறுத்ததாகவும மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய ஆட்சேபம்கூட எழுந்தது. நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனால் அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது, மாண்புமிகு உறுப்பினர் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார். அந்த அமைச்சர் * * இங்கே வர விடக்கூடாது" என்று சொன்னதாக—அதுவும் மாண்புமிகு உறுப்பினர் அதைக் கேட்கவில்லை, அந்த அமைச்சர் சொன்னதாக அவரிடம் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்—இங்கே அமைச்சர் அவர்களின் பெயரைக் குறிப்பிடவில்லை என்ற காரணத்தால் நான் அதற்குள் போக விரும்பவில்லை. எனவே அமைச்சர் அவர்கள் அந்த வார்த்தையைச் சொன்னதாக ஒரு தவறான கருத்து இந்த அவைக் குறிப்பில் இடம் பெறாமல் இருப்பது தான் நல்லது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** நான் அந்த மாதிரியான வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. அமைச்சர் குறிப்பிட்ட அந்த வார்த்தையைச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியதாக அவைக் குறிப்பில் இருந்தால், அதை எடுத்துவிடுவதில் எனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை. நான் அப்படிச் சொல்லவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட * * என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

**திரு. அ. ப. சிவராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது * * இருக்க வேண்டுமா என்று கேட்டார்கள். அந்த வார்த்தையையும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** * * என்ற அந்த வார்த்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ். இராகவானந்தம்:** * * என்ற வார்த்தையை மட்டும் எடுத்துவிட்டால் * * என்பது மட்டும்தான் இருக்கும். அது சரியாக இருக்காது. எனவே அந்த வாக்கியத்தையே எடுத்துவிடுவது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[illegible] [1986 மார்ச் 19

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அப்படியே அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: எந்த வார்த்தையை வேண்டுமானாலும் எடுத்துவிடுங்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நான் சில கருத்துக்களை இந்த அவையில் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினேன். அதைத் தெரிவித்துவிட்டேன். அது போதும். எனவே சில வார்த்தைகளையோ வாக்கியத்தையோ அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

அடுத்து, மருத்துவத் துறையையொட்டி ஒரு கருத்தை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கனவே கேள்வி நேரத்தின்போதுகூட, நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மூன்றிற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதாவது 'இராமச்சந்திரா காலேஜ் ஆப் ஹெல்த் சயன்ஸ்' என்பது ஒன்று. 'ராஜா முத்தையா இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த் சயன்ஸ்' என்பது இரண்டாவது. 'பி.எஸ்.ஜி. இன்ஸ்டிடியூட் ஆப் மெடிகல் சயன்ஸ்' என்பது மூன்றாவது கல்லூரி. இதில் 'இராமச்சந்திரா காலேஜ் ஆப் ஹெல்த் சயன்ஸ்' என்பதும் 'பி.எஸ்.ஜி. இன்ஸ்டிடியூட் ஆப் மெடிகல் சயன்ஸ்' என்பதும் தனியார் கல்லூரிகள். அதில் தவறில்லை. வேறு வழியுமில்லை அவைகள் தனியார் கல்லூரிகளாகத்தான் செயல்பட வேண்டும். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்பது தன்னாட்சி பெற்ற பல்கலைக் கழகம். 1928 ஆம் ஆண்டு சட்டப்படி அமைக்கப்பட்ட பல்கலைக் கழகம். அதில் துவக்கப்படுகிற இந்த மருத்துவக் கல்லூரிக்கு ஏன் தனியார் மருத்துவக் கல்லூரி என்று அந்தஸ்து அளிக்க வேண்டும்?

(முற்பகல் 11-40)

அந்தப் பல்கலைக் கழகத்திலே ஒரு துறையைத் துவங்குவதற்கோ, ஒரு படிப்பை மூடுவதற்கோ அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. நம்முடைய அரசால் வழங்கப்பட்ட இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் ஒரு மெடிக்கல் ஃபாகல்டியை ஆரம்பித்திருக்கிறார்கள். 'டென்டல் ஃபாகல்டி'யை ஆரம்பித்து 'டென்டல் காலேஜ்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதைப்போல 'மெடிக்கல் ஃபாகல்டி'யை ஆரம்பித்து மெடிக்கல் காலேஜ் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்கு தனியார் கல்லூரி என்று அந்தஸ்து கொடுத்து, அதற்குச்சில நிபந்தனைகளைப் போட்டு, அதன் மூலம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1986 மார்ச் 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

தன்னாட்சி உரிமை பாதிக்கக்கூடிய அளவிற்கு அரசு நடவடிக்கை எடுத்திருப்பது சரியல்ல என்பதை வருத்தத்தோடு சொல்லுகிறேன். ஆகவே தயவுசெய்து அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். நான் அந்த ஊர்க்காரன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவன். அதிலே படித்த பலர் அமைச்சர்களாக இங்கே இருக்கின்றார்கள். ஆகவே என்னுடைய மாவட்டத்திலே உள்ள பல்கலைக் கழகத்தினுடைய வளர்ச்சியிலே அதிக அக்கறை ஆர்வம் எனக்கும் உண்டு. அந்த அடிப்படையிலே சொல்லுகிறேன். அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்கத்தில் உள்ள யாருக்காவது அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகத்தின் மீது கோபதாபம் இருந்தால் ஒரு நடைமுறை, கோபதாபம் இல்லாமல் இருந்தால் ஒரு நடைமுறை என்று இருப்பது தவறு. நாங்கள் கொள்கைக்காக நிற்கிறோம். விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்டு, கோபதாபங்களுக்கு அப்பாற்பட்டு நடக்கிறோம். அதைப்போலவே அரசும் கோபதாபங்களுக்கு அப்பாற்பட்டு நடந்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு, அன்போடு வேண்டுகிறேன். நமக்குக் கோபம் இருந்தால், அந்தச் சமயத்தில் பிரச்சினைகள் மீது ஒருவிதமாக நடவடிக்கை எடுப்பது, கோபம் இல்லாதபோது வேறுவிதமாக நடவடிக்கை எடுப்பது என்று இரட்டை அணுகு முறை வைத்துக் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில், கோபதாபங்களுக்கு இடமில்லை. கோபதாபங்களின் காரணமாக ஒரு முடிவை எடுத்திருக்கிறோம் என்று கருதுவது உண்மைக்கு மாறானது. லீகல் டிப்பார்ட்மெண்ட் இதைப்பற்றி ஆராய்ந்திருக்கிறது. இதிலே பிரச்சினை ஏற்பட்ட நேரத்தில், நம்முடைய அரசாங்க மருத்துவமனைகளை அதன் வரையறைக்குட்படுத்த வேண்டியிருக்கிறது, அரசாங்க மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளைப் பயன்படுத்தவேண்டிய நிலை இருக்கிறது. ஏனென்றால் கிளினிக்கல் மெட்டீரியல் அரசாங்கத்திடம் தான் இருக்கிறது. இந்தப் பிரச்சினை வந்தபோது அரசாங்கத்தினுடைய அனுமதியுடன்தான் அது நடைபெற வேண்டும் என்ற எக்ஸ்பெர்ட் ஒப்பீனியனை லீகல் டிப்பார்ட்மெண்டிடம் பெற்ற பிறகுதான் இந்த முடிவு ஏற்கப்பட்டது. இதிலே எந்தவிதமான மாச்சரியங்களுக்கோ, 'லைக்ஸ் அண்டு டிஸ்லைக்ஸ்' என்பதற்கோ இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறியதற்கு நன்றி. நான் சொல்லுவதற்கு ஆதாரமாக அவர் அடியெடுத்துக் கொடுத்திருக்கிறார். அரசாங்க மருத்துவமனைகளை இணைக்க

வேண்டியிருக்கிறது, அதைப்பொட்டி சட்டதிட்டங்களை, முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். மருத்துவமனை வசதிகளை இணைக்க வேறு வழி இருக்கிறது. 'அனாட்டமி ஆக்ட்' தென்னாற்காடு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தலாம். அப்படி விரிவுபடுத்தினால் சிதம்பரம், கடலூர், நெய்வேலி ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளை அவர்கள் பயன்படுத்த முடியும். அதுகூட தற்காலிக ஏற்பாடுதான். அவர்கள் தங்களுக்குச் சொந்தமாக மருத்துவமனையைக் கட்டியாக வேண்டும். அப்படி அவர்கள் கட்டும் வரையில் இந்த அரசாங்க மருத்துவமனைகளை, அதில் உள்ள நோயாளிகளைப் பயன்படுத்த தற்காலிக வசதியை வேறு வழியில் அரசு ஏற்படுத்திக் கொடுக்க முடியும். சட்டத் துறையின் ஆலோசனையின் பேரில் வெளியிடப்பட்டிருந்தாலும், அந்த அரசாணை சரியானதல்ல. இந்தப் பிரச்சினையை சட்டத்துறை சரியான முறையில் அணுகவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்த கருத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றால், அதற்காக 'அனாட்டமி ஆக்ட்'-ஐ விரிவுபடுத்தலாம். அதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. தன்னாட்சி உரிமை பாதிக்கப்படாமல் செய்யலாம். தன்னாட்சி உரிமைபற்றி அரசுத் தரப்பிலே ஆணித்தரமான கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நாங்களும் சொல்லியிருக்கிறோம். கல்லூரிகளை எல்லாம் தன்னாட்சிக் கல்லூரிகளாக மாற்ற வேண்டும் என்று கருதி தன்னாட்சி உரிமையைக் கொடுக்கிறோம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் "யூனிட்டரி" தன்மையைக் கொண்டது ரெசிடென்ஷியல் பல்கலைக் கழகம், அதற்கு affiliate status கிடையாது. ஆகவே அங்கே மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தால், அவர்களுக்கு 'அஃபிலியேட்டெட் ஸ்டேடஸ்' இல்லையென்பதால் அவர்களுக்குச் சம்பந்தம் இல்லாமல் நடத்தப்படுகிற கல்லூரியாக அது போகும். அது சரியானதல்ல என்பது என்னுடைய கருத்து. ஆகவே இதை அரசு மறுபரிசீலனை செய்து முடிவுகளை மாற்றி ஆணை வெளியிட வேண்டும். 'ராஜா முத்தையா இன்ஸ்ட்டியூட் ஆஃப் ஹெல்த் சையன்ஸ் இல் உள்ள ஃபாகல்டிக்காக ஏற்கெனவே உள அரசாணையிலிருந்து தவிர்ப்பு கொடுக்க வேண்டும், விதிகளைத் தளர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-45)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :**

On a clarification, Sir, we have not interfered with the affiliation. அதைப் பொறுத்தவரையில், நான் இதிலே தலையிடவில்லை. அபிலியேஷன் பொறுத்தவரையில் மெட்ராஸ் யூனிவர்சிடியோடு அபிலியேஷன் ஆகவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னாலும்கூட, it goes without saying வேறு வழியில்லாமல் அதைச் செய்தாக வேண்டும். நம் அரசு தலையிடவில்லை என்7 நம் அமைச்சர் அவர்கள் சாதுரியமாகச் சொல்லலாம். இதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். அண்ணாமலை மருந்துவக் கல்லூரிக்கு 'பேகல்ட்டி' அந்தஸ்து வேண்டும். அதற்கான விதிமுறைகளை, ஏற்கெனவே வந்த ஆணையை மாற்றி, திருத்தங்கள் செய்தோ அல்லது இதற்குத் தளர்வுகள் கொடுத்தோ உருவாக்கி அதற்கு ஒரு சரியான பரிகாரத்தை உடனடியாகக் காண வேண்டும் என்று தமிழக அரசையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

நமது கல்வித் துறைக்கு சென்ற ஆண்டு ரூ. 478 கோடி என்று இருந்தது. இந்த ஆண்டு ரூ. 550 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய கல்வித் துறையானது நாளுக்கு நாள் அதனுடைய தேவையை அதிகப்படுத்திக் கொண்டே போகிறது. அண்மையிலே கூட நகராட்சிப் பள்ளி மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை, ஊழியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக அறிவித்து விட்டோம். நாளுக்கு நாள் கல்வித்துறை ஆசிரியர்—அலுவலர் எண்ணிக்கை அதிகமாக ஆகிக் கொண்டே வருகிறது. இது ஒரு பெரும் துறையாக போய்க்கொண்டிருக்கின்றது. தமிழகத்திலே கிட்டத்தட்ட 3½ லட்சம் பேர்கள் இதில் பணி புரிகிறார்கள். 3½ லட்சம் பேர்கள் பணிசெய்யக்கூடிய ஒரு துறையாக மிகப் பெரிய துறையாக மாறிக்கொண்டு வருகிறது. அப்படி மாறிக்கொண்டு வரும் போது, விகிதாசார முறைப்படி, நாம் ஒதுக்கியிருக்கின்ற தொகை சரியா என்பதை நாம் கல்வி மான்யத்திலே விரிவாக விவாதிக்க வேண்டியிருக்கும். ஆனால் ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்றிரண்டு விஷயங்களைக் கூறுகிறேன். சரியான ஒதுக்கீடு இல்லை என்பதைச் சுட்டிக் காட்டிச் சொல்கிறேன்.

இன்றைக்கு கூடுதல் ஆசிரியர்கள் பதவிகள்பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. கூடுதல் ஆசிரியர்கள் பதவிகள் பற்றி பட்ஜெட்டிலே சொல்லாவிட்டாலும், எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற புதிய திட்டங்களின் பட்டியலிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்னென்ன பதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? இடைநிலை ஆசிரியர்கள் பதவி 500, 1986-87 ஆம் ஆண்டிக்கு என்று இருக்கின்றது. தமிழாசிரியர்கள் பதவிகள் 85. உடல் கல்வி ஆசிரியர்கள் 50. உடல் கல்வி ஆசிரியர்கள் தான் உண்டு. உடல்

கல்வி இயக்குநர்கள் பதவியே கிடையாது. ஆனால் பி.ஈ.டி. பதவிகள் இருக்கின்றன. அதாவது தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலே பகுதி நேர தொழிலாசிரியர்கள் பதவிகளில் 50-ஐ முழு நேர ஆசிரியர்களாக மாற்றியிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் 100, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பதவிகள் எத்தனை என்று சொல்லவில்லை ரூ. 8.5 லட்சம் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் எண்ணிக்கை இத்தனை என்று கிடையாது. கல்லூரி ஆசிரியர்கள் பதவிகள் பற்றிச் சொல்லும்போது, துணைப் பேராசிரியர்கள் பதவியே குறிப்பிடப்படவில்லை. ஆகவே இது எப்படி நியாயமாகும்? நம்முடைய மதிப்பீட்டுக் குழுவிலே சொல்லியிருக்கின்றார்கள். நான் ஆளுநர் விவாதத்திலேகூட சொல்லியிருக்கிறேன். நம்முடைய அரசாங்கத்தினுடைய மதிப்பீட்டுக் குழுவிலே அளிக்கப்பட்ட விவரங்களின்படி, ஐந்து ஆண்டுகளுக்கு ஆன விவரங்களின் படி தமிழகக் கல்வித் துறைக்கு 38 ஆயிரம் ஆசிரியர்கள் பதவிகள் வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இது 1978-லே சொல்லப்பட்ட நிலை தற்போதைய விதிமுறைகளின்படி பார்த்தால் அதிகமாக இருக்கும். இப்படித்தான் ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டிலே பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. 1978-ல் 38 ஆயிரம், இன்றைக்கு இருக்கின்ற கணக்கை எடுத்துச் சொன்னால், அது அதிகமாக ஆகிறது. அது 45 ஆயிரத்திலே வந்து நிற்கும். சத்துணவுத் திட்டத்தின் மூலமாக ஏராளமான குழந்தைகள் சேர்க்கப்பட்டு அதன் மூலமாக மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகி, கூடுதல் ஆசிரியர்கள் பணியிடங்கள் தேவைப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கும் சத்துணவுத் திட்டம் நீட்டிக்கப்பட்டதனால், அங்கேயும் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக ஆகியிருக்கின்றது. அந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் சொல்கிறோம். ஆனால் பட்ஜெட்டிலே அதற்கேற்ற தேவையான பணியிடங்களை நாம் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுக்காமல் இருந்தால், எப்படி கல்வித் தரத்தை நிலைநிறுத்த முடியும்? நிலைநிறுத்த முடியாது. இவ்வளவுதான் இருக்கின்றது. இவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று சொன்னால், நாங்கள் எப்படி புதிய கல்விக் கொள்கையை நிறைவேற்ற முடியும்? அதைப்பற்றி எப்படிப் பேசுவது? புதிய கல்விக் கொள்கைக்கு எவ்வளவு தேவைப்படுகின்றது என்று கேட்டால், ரூ. 30 ஆயிரம் கோடி அதை அமல்படுத்துவதற்கு தேவைப்படுகின்றது என்று சொல்கின்றார்கள். ஏழாவது ஆண்டுத் திட்டத்திலே முப்பது ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்கின்றார்கள். ஆனால் ஏழாவது திட்டத்திலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது ரூ. 6 கோடிதான். மீதி 24 ஆயிரம் கோடி





ரூபாய்க்கு எங்கே போவது? இன்றைக்கு வரையிலும் சொல்லவில்லை. பணமே இல்லாமல் புதிய கல்விக் கொள்கையைப் பற்றி கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரைக்கும் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நிதிக்கு வழியைக் கண்டுபிடிக்கவில்லை. இன்றைக்கு ரூ. 30 ஆயிரம் கோடி தேவை. ஆறு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றோம். மீதியுள்ள ரூ. 24 ஆயிரம் கோடிக்கு வழி கண்டுபிடிக்கவில்லை. மத்திய அரசின் பட்ஜெட்டிலே எந்த ஒதுக்கீடும் காணவில்லை. நம்முடைய மாநில பட்ஜெட்டிலே அதைப்பற்றி ஒன்றும் காணோம். எப்படி புதிய கல்விக் கொள்கையை வெற்றியடையச் செய்யப்போகிறோம்? கருத்தரங்கு நடத்தி, மகாநாடு நடத்தி, கூட்டங்கள் நடத்தி, அதைப்பற்றி நிறைய விமரிசனம் செய்து, அத்துடன் நிற்கப்போகிறது. புதிய கல்வி திட்டத்தைப்பற்றி ஒரு அறிக்கை வெளியாகும். அது போன்ற அறிக்கை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்கு, எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கும் பேசுவதற்குத்தான் பயன்படும். அதற்குத்தான் அது உதவியாக இருக்கும். சரியான அணுகுமுறை இல்லாமல் நாம் எப்படி இதை நிறைவேற்றுவது? மத்திய அரசு அப்படி செய்கிறது என்று நாமும் அப்படிச் செய்யக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. தேவையான பதவிகள் இல்லை. இன்றைய நிலைமைகளின்படி 45 ஆயிரம் ஆசிரியர்கள் பதவிகள் தேவை, ஆனால் இப்போது ஒட்டுமொத்தமாகக் கொடுப்பது ஆயிரம் கூட இல்லை எனலாம். மீதி 44 ஆயிரம் எங்கே இருக்கின்றது? எப்படி ஆசிரியர்கள் பாடம் நடத்துவார்கள்? மாணவர்களுடைய கதி என்ன ஆவது? அவர்கள் வகுப்பறையிலே என்ன செய்வார்கள்? இதை ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக நாம் கருத வேண்டும். அப்படி நாம் கருதவில்லை. நிதித்துறை அதிகாரிகள் எவ்வளவு கொடுத்திருக்கின்றார்கள் என்றால், போன வருடம் என்ன என்று பார்க்கின்றார்கள். 100, 50, 25 என்று கொஞ்சம் கூட கொடுக்கின்றார்கள். அதுவும் குறைச்சலாகத்தான் கொடுக்கிறார்கள். போன வருடம் 200 என்றால், இந்த ஆண்டு நூறுதான் கொடுப்பார்கள். ஆயிரம் என்றால் 500 தான் கொடுப்பார்கள். குறைத்துக் கொண்டே வருகின்றார்களே தவிர வேறல்ல. இது சரியான அணுகுமுறையல்ல. கல்வியை முழுவதுமாகப் புறக்கணிக்கின்றார்கள். ஆசிரியர்களும் புறக்கணிக்கப்படுகின்றார்கள். கல்வித் துறையிலே பணியிடங்களும் கிடையாது, வசதிகளும் கிடையாது. பள்ளிக்கூடங்களுக்கு இன்றைக்கு நமக்குத் தேவையானது, அரசுப் புள்ளிவிவரங்களின்படி ரூ. 120 கோடியாகும். இன்றைக்கு கட்டிடமே இல்லாத அரசுப் பள்ளிகளில் ஒரு நான்கு வகுப்பறைகள் கட்ட வேண்டும் என்றால்கூட, ரூ. 120 கோடி தேவை. ஆனால் நாம் சென்ற ஆண்டு செலவு செய்த தொகை 1½ கோடி ரூபாய். இந்த ஆண்டு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 மார்ச் 19

ஒதுக்கீடு ரூ. 1 கோடிதான். இந்த ஒரு கோடி ரூபாயை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்யலாம்? ஒரு சில பள்ளிக்கூடங்களுக்கு மட்டும் வகுப் பறைகள் கட்டலாம். அல்லது 10, 15 பள்ளிகளுக்கு 4, 5 வகுப்பறைகள் கட்டலாம். வேறு வன்றும் செய்ய முடியாது. ஓதி பள்ளிக்மீடங்களுக்கு என்ன ஆவது? வானம் பார்த்த பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவே, செய்வது? செங்கல்லே பார்க்காத பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவே, அதற்கு என்ன செய்வது? அது என்ன ஆவது? நம்முடைய பட்ஜெட்டிலே அதற்கு ஒன்றுமே செய்யவில்லை இதை நாம் ஒவ்வொரு ஆண்டும் சுட்டிக் காட்டுகிறோம். அப்படி என்றால் அதற்குப் பரிகாரம் என்ன?

(முற்பகல் 11-50)

தீர்வு என்ன? ஆகவே அரசு தரப்பிலிருந்து இதற்கு சரியான பரிகாரம் காணக்கூடிய அளவுக்கு "பதில் தேவை அல்லது நட வடிக்கைகள் அறிவிக்கப்பட வேண்டும். இல்லை என்றால், கல்விப் பிரச்சினை நாளுக்கு நாள் சிக்கலாகும். கல்விக்காகச் செலவிடுவதை 'டெட் கேப்பிடல்' என்று நினைத்தால், இந்த நாடு மிகப் பயங்கரமான பிரச்சினையை எதிர் நோக்கிச் செல்லும் என்பதை மறந்துவிடக் கூடாது. இதைப் புறக்கணித்து, புறக்கணித்து இதற்கான ஒதுக்கீட்டைக் குறைத்துக் கொண்டே வந்தால், மிக அபாயகரமான பிரச்சினைகளை எதிர்காலத்தில் சந்திக்க வேண்டி வரும். அந்தக் கண்ணோட்டத்தில் இதை நிவர்த்திக்க வேண்டும். இந்த ஒதுக்கீடு போதாது. பள்ளிக் கட்டிடமானாலும், ஆசிரியர்கள் பதவியானாலும், எதுவாக இருந்தாலும், இந்த ஒதுக்கீடு போதாது என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஒதுக்கீட்டை அதிகரித்து, போதுமான கட்டிடங்கள் கட்டவும், போதுமான ஆசிரியர் பதவி களுக்கு அனுமதி கொடுக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது, அரசுத் தரப்பிலிருந்து திட்டவட்டமான பதிலை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர் போராட்டத்திற்குப் பிறகு, எங்கள் அணுகுமுறையைப் பொறுத்த வரையில், எரிகிற கொள்ளியில் எண்ணெயைக் கொட்டுவது அல்லது எரிகிற வீட்டில் பிடுங்கிய வரையில் ஆதாயம் என்று எண்ணும் நடைமுறையே எங்களுக்குக் கிடையாது. ஆசிரியர்களுக்கும் அரசுக்குமிடையே நல்ல சுமுகமான நிலைமை இருக்க வேண்டும். அதனால் மாணவர்கள் எதிர்காலம் நன்றாக இருக்கும்; அது கல்விக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நல்லது என்ற அடிப்படையிலேதான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்



1986 மார்ச் 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கிறோம். இந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு அதிகமாக இருக்கிறது. அதை அரசு செய்ய வேண்டும். போராட்டத்திலே ஆசிரியர்கள் கலந்துகொண்டு விட்டார்கள் என்பதை மனதிலே வைத்துக் கொள்ளக் கூடாது. ஆசிரியர்களும் அதை மனதிலே வைத்துக் கொள்ளக் கூடாது என்று நாங்கள் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக் காட்டியதுபோல, அரசுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. ஆசிரியர் பெருமக்களுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. அரசு பொறுப்பு என்னும்போது, சரியாகக் கடமை ஆற்றாத தற்காக சில ஆசிரியர்கள் கூது நடவடிக்கைகளை எடுக்கிறது. ஆசிரியர்கள் ஒழுங்காகப் பணியாற்றாதபோது நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நேரத்தில், அது போராட்டத்தில் போய் நிற்கிறது. அதையும் மாண்புமிகு உறுப்பினரவர் கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். கள்ளிகுளத்தில், ஓர் ஆசிரியர் ஒரு மாணவனை சிகரெட் வாங்கிவரச் சொல்லியபோது, மாணவன் அதை மறுத்த போது, ஆசிரியர் அந்த மாணவனை சக ஆசிரியர் 2 பேர் கூடி மிகக் கடுமை யாக அடித்ததால், மாணவன் காயமு*று இருக்கிறான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கும் ஒரு சம்பவம் இது. அப்படி நடந்திருந்தால், அது கண்டிக்கத்தக்கதாகும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தவறுகளை நாங்கள் மூடி, மொழுகிப் பேசவில்லை. அமைச்சர்கள் செய்தாலும், நாங்கள் செய்தாலும், ஆசிரியர்கள் செய்தாலும் தவறு, தவறுதான். அந்த முறையிலே அமைச்சரவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்கிறேன். இது லட்சத்தில் ஒன்று, ஆயிரத்தில் ஒன்றாக இருக்கலாம். இது குறித்து இலாக்காபூர்வமாக நடவடிக்கை எடுப்பதற்குக் குறுக்கே நிற்கவில்லை. இதை உறுதிமொழியாகவே தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 மார்ச் 19

ஆசிரியர்களுக்கும் அரசுக்குமிடையே சுமுகமான நிலைமை இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. துரதிருஷ்டவசமாக அந்த நிலைமைக்குப் பாதிப்பு ஏற்பட்டது. மறுபடியும் சுமுகமான சூழ்நிலை நிலவுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அரசுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே நல்ல உறவு இருக்க வேண்டும். அரசுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே மட்டுமல்லாமல், தொழிலாளர்கள், மற்றவர்களுக்கிடையே உறவைப் பாதிக்கும் நிகழ்ச்சிகள் இருக்கக்கூடாது. அரசுத் தரப்பிலும் இருக்கக்கூடாது, மற்ற தரப்பிலும் இருக்கக்கூடாது. ஆசிரியர்கள் போராட்டத்தை சுமுகமாக முடிக்க எல்லாவிதமான ஒத்துழைப்பும் நாங்கள் தந்தோம். ஒரு நபர் குழு அறிக்கை அளிக்க காலக்கெடு சொல்லவில்லை. விரைவிலே வரும் என்று சொல்லுகிறோம். அறிக்கை எப்போது வரும்? சொல்லி மூன்று மாதங்கள் ஆகிவிட்டது. மார்ச் மாதம் முடியப் போகிறது. இன்னமும் ஒரு நபர்க் குழு அறிக்கை கொடுக்கவில்லை. அவர்கள் அறிக்கை கொடுத்து, அதை அரசு பரிசீலித்து, பட்ஜெட்டில் அறிவிப்பு வருமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஒரு நபர் குழு விரைவில் அறிக்கை கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதை அரசு ஆய்வு செய்து, இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன் ஒரு நபர்க் குழு அறிக்கையை ஏற்று, நல்ல அறிவிப்புகளைச் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கருத்தை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, பென்ஷனர்களைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 300 ரூபாய்க்குக் கீழே ஓய்வூதியம் வாங்குபவர்கள் எம்.ஓ. மூலமாக வாங்குகிறார்கள். அவர்களை எல்லாம் ஆண்டுக்கு ஒரு முறை, ஏப்ரல் மாதம் முதல் தேதி அலுவலகத்திற்கு வரச்சொல்லி எல்லோரையும் வராண்டாவில் உட்கார வைத்து, மஸ்டர் ரோல் மாதிரி கணக்கெடுக்கிறார்கள் அது, அவர்களைக் கேவலப்படுத்தும் முறையாகும். அப்படி அரசாங்க ஆணையில் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஆணையில்

(முற்பகல் 11-55)

சொல்லாமல் நடந்திருந்தாலும், இப்படிப்பட்ட முறை கூடாது. ஆண்டுக்கு ஒரு முறை மஸ்டர் ரோல் கணக்கு எடுப்பது மாதிரி ஏப்ரல் மாதம் அவர்களை வரச் சொல்லி, பெயரை வாசிக்கச் சொல்லி அவமானப்படுத்தும் முறையை அவசியம் எடுக்க வேண்டும்.



1986 மார்ச் 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அடுத்து, அரசாங்கத்தினுடைய உறுதிமொழிகள் பற்றி எத்தனை தரப்பட்டன, எத்தனை நிறைவேற்றப்பட்டன, எத்தனை நிராகரிக்கப் பட்டன என்ற கேள்வியை நான் முன்பே மேலவையில் கேட்டேன். உடனே என் கேள்வியையே நிராகரித்து விட்டார்கள். நேரடியாக இதுபற்றிக் கேட்டபோதுகூட, இது உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டது அல்ல என்றார்கள். இது உறுப்பினர்களுடைய தனிப்பட்ட விஷயம் பற்றியதல்ல, அமைச்சருக்கும் இது தனிப்பட்ட விஷயம் அல்ல.

It is a matter of public importance.

The Hon. Dr. H. V. HANDE: For the sake of convenience to the hon. Member, I would like to tell him that there are Assurances Committees in the Assembly and the Council and it is the duty of the Chairman of that Committee to go into the matter of implementation of assurances. Since the same is a part of the Council affairs, it cannot be raised as a question. The problem was taken up and decided earlier about 10 or 15 years ago. There are Members from various parties in the Assurances Committee and usually and by convention, the Leader of the Opposition will be the Chairman of that Committee. The grievance of the hon. Member can be easily sorted out in the Committee itself and it cannot be made a part of the proceedings of the Assembly or the Council.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினர் அரசாங்க உறுதிமொழி விஷயத்தைப் பற்றி கமிட்டியில் பேசி தீர்ப்பை வாங்க வேண்டும். அது அவையில் வர வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மேலவையில் தெரிவிக்கப்பட்ட உறுதிமொழிகள் எத்தனை, நிறைவேற்றப் பட்டவை எத்தனை, நிராகரிக்கப்பட்டவை எத்தனை என்று தான் கேட்டேன். கமிட்டியைப்பற்றிக் கேட்கவில்லை.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: மாற்றுத் தலைவர் அவர்களே, உறுதி மொழிக் குழுவில் இந்த சபையினுடைய எல்லா கட்சிகளுடைய பிரதிநிதி களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அவ்வப்போது இந்த அவையில் அது பற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது, எத்தனை நிறைவேற்றப்பட்டன, எத்தனை நிறைவேற்றப்படவில்லை என்பது பற்றிய விவரங்கள் ஒவ்வொரு காலத்திலும் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே அவைகளைத் திருப்பிப் பார்த்தாலேயே, உறுப்பினர் அதுபற்றிய முழு விவரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

The Hon. Dr. H. V. HANDE: I am supplementing what the hon. Member Thiru M. P. Subramaniam has stated. There is a Committee to go into that matter. We have to be vigilant in that Committee. There is no meaning in bringing the work of the Committee as a subject-matter of discussion in the Council.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினருடைய கேள்வியை நிராகரித்ததாகச் சொன்னார். அதுபற்றி அவையில் சொல்லாமல் தலைவரிடம் அறையிலேயே பேசலாமே.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: எனக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் பற்றி நான் சொல்லவில்லை. பொதுவாக இதற்கு முன்பு அவையில் நடைபெற்ற மீன்றைத் தான் நான் சொன்னேன். தலைவர் அவர்கள் எனக்கு உதவி செய்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. பல உறுதிமொழிகளைப் பொறுத்தவரையில், குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட துறைகள் சரியான முறையில் பதில் கொடுக்காமல் காலதாமதம் செய்வதால், ஆண்டுக் கணக்கில் பல உறுதிமொழிகள் Pending ல் இருக்கின்றன. இப்படி தேக்க நிலையில் இருக்கின்ற பல உறுதிமொழிகளைப்பற்றி இந்தக் கமிட்டி தெரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட துறைகள் பதில் கொடுக்கின்றன. ஆனாலும் அதற்கும் அப்பாற்பட்டு சில விவரங்கள் ஆண்டுக்கணக்கில் சில துறைகளிடமிருந்து வருவதில்லை. அதைப்பற்றித் தெரிந்துகொள்கிற உரிமை உறுப்பினருக்கு உண்டு. அது உறுப்பினருக்குரிய 'பிரிவிலேஜ்' என்கிற முறையில் சொல்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: உறுப்பினருக்கு உறுதுணையாக ஒன்றைச் சொல்கிறேன். அசுவரன்ஸ் கமிட்டியில் வருகின்ற கேள்விகளுக்கான பதிலை 3 மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று அண்மையில் ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றியிருக்கிறோம்' என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00).

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, உறுதிமொழிக் குழுவின் அறிக்கையிலே, எத்தனை உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டன. எத்தனை உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற விபரங்கள் கொடுக்கப்படுகின்றன.



The hon. Member may comment on the Report. The Committee itself is going into all these on behalf of the Members. The hon. Member has no separate right other than the right of the Committee.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அந்தக் கமிட்டியில் எத்தனை உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்ற விளக்கத்தைக் கேட்டு, அறிக்கை கொடுக்கிறார்கள். அதைப்பற்றிய புள்ளிவிவரங்களை உறுப்பினர் அவர்கள் கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன். அந்த விவரங்களை அறிய அந்தக் கமிட்டியில்தான் பேசவேண்டும். அவரிடம் அந்த விவரங்கள் உள்ளன. இங்கே அதைப் பற்றி கேள்வியாக எழுப்புவது பொருத்தமாக இருக்காது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இப்போது அளிக்கப்பட்ட விளக்கங்கள் எனக்குத் திருப்தியாக இல்லை. இருப்பினும், விதிக் குழுவைக் கூட்டி, இதற்கான நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினர் அவர்கள் விரைவில் முடித்தால் நலமாக இருக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு வட ஆற்காட்டை எடுத்துக் கொண்டாலும், நாம் ஏற்கெனவே அறிவித்தபடி, தென்னார்க்காட்டை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் நடவடிக்கையை அடுத்த ஆண்டிலாவது மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒன்றுதான். நிர்வாகக் காரணங்களால் இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று கருதுகிறேன். ஆகவே அடுத்த பட்ஜெட்டிலாவது தென்னார்க்காடு மாவட்டத்தைக் கட்டாயமாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தள்ளிப் போடக்கூடாது. அந்த வகையில் அரசு கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னார்க்காடு மாவட்டத் தலைநகரான கடலூர் இப்போது பாராமுகமான ஒரு மாவட்டத் தலைநகராக இருக்கிறது. மிகவும் பின்தங்கிய மாவட்டத் தலைநகரமாக அது இருக்கிறது. பல்லாண்டு காலமாக, அங்கே நிலத்தடி நீர்க் கழிவுத் திட்டத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 மார்ச் 19

வந்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தத் திட்டத்திற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டோம். ஆனால் அரசு இன்னமும் அனுமதி கொடுக்கவில்லை.

அடுத்தபடியாக, மாநிலத்திலேயே எந்தக் கல்லூரிக்கும் இல்லாத ஒரு முறையில் கடலூரில் உள்ள கல்லூரியில் மேற்பட்டப் படிப்பான எம்.ஏ., எம்.எஸ்சி. போன்ற படிப்புகள் இல்லை. காரணம் கேட்டால், சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருப்பதாகவும் அங்கே இந்த கோர்ஸ்கள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். அது தமிழ் நாடு முழுமைக்கும் உள்ள ஒரு பல்கலைக் கழகமாக இருக்கிறது. இந்த மாவட்டத்திற்கு என்று அந்தப் பல்கலைக் கழகம் கிடையாது. இந்த ஆண்டுத் திட்டத்தில் கடலூர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பைத் துவக்குவதற்கு அறிவிப்பு இல்லை. இருப்பினும் வரகூடிய கல்வி மானியக் கோரிக்கையிலாவது கடலூர் கல்லூரிக்கு முழுத் தன்மை அளித்து, எம்.ஏ., எம்.எஸ்சி. போன்ற வகுப்புகளைச் சேர்க்க அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் கல்வி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சிதம்பரம் கல்வி மாவட்டம் என்றும் கடலூர் கல்வி மாவட்டம் என்றும் பிரிக்க வேண்டும். அதைப்போலவே, வட ஆற்காட்டில் திருவண்ணாமலை கல்வி மாவட்டம், போளூர் கல்வி மாவட்டம் என்று பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை இந்த அவைக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். நான் எப்போது பேசினாலும், அவை முன்னவர் அவர்கள் கூர்மையாகக் கவனிப்பார்கள். எப்போதும் வலியுறுத்துகிற கருத்துதான். தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் கிடைக்கிற அனைத்து சலுகைகளும்—எல்.டி.சி., வீட்டுவசதிக் கடன் போன்ற சலுகைகள்—உண்டு என்ற ஒரு கொள்கை முடிவை எடுக்க வேண்டுமென்று நீண்டகாலமாக கேட்டு வருகிறோம். இந்தப் பட்ஜெட்டில் அதைப்பற்றிய எவ்வித அறிவிப்பும் இல்லை. இதனால் தனியார் பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் விரக்தி ஏற்பட்டிருக்கிறது, ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். தனியார் பள்ளி, தனியார் கல்லூரி நிர்வாகம் நன்றாக இருக்கிறது, கல்வியின் தரம் நன்றாக இருக்கிறது என்று அமைச்சர்களும், அதிகாரிகளும் அடிக்கடி பாராட்டுகிறார்கள். பாராட்டுத்தான் மிச்சம், பலன் கிடையாது. அவர்களுக்கு இந்தச் சலுகைகளை இன்னமும் கொண்டு வராதது ஒரு clear discrimination ஆகவே, தனியார் பள்ளி, கல்லூரி



1986 மார்ச் 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் கிடைக்கிற அனைத்துச் சலுகைகளும் தரப்பட வேண்டுமென்ற கொள்கை ரீதியான முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் காணப்படும் நல்ல அம்சங்களைப் பாராட்டி, தமிழக அரசு மக்களைப் பாதிக்கக்கூடிய எந்தவித வரிகளையும் போடாமல் இந்த பட்ஜெட்டைக் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டி, அமைகிறேன்.

(பிற்பகல் 12-05)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் முயற்சிக்கிறேன்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையைத் தயாரித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழிலே மிகவும் ஆற்றல் மிக்கவர்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அவர்கள் இதிலே மிகச் சிறப்பாக ஒன்றைச் செய்திருக்கிறார்கள்.

தொடக்கத்திலே ஒரு குறளிலே தொடங்கி, முடிக்கும்போதும் ஒரு குறளிலே முடித்திருக்கிறார்கள். அது நாம் எல்லாம் பெருமைப்படத்தக்கதாகும். படித்து ரசிக்கத்தக்கதாகும். அந்த வகையிலே அவர்கள் செய்திருக்கிறார்கள்.

முதல் பத்தியிலே,

"பெரும் பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு"

என்று நாட்டைப்பற்றிய ஒரு இலக்கணத்தைச் சொல்லி, "மிக்க பொருள் உடையதாகவும், எல்லோராலும் விரும்பத்தக்கதாகவும், எத்தகைய கெடுதலும் எய்தாததாகவும், மிகுந்த விளைபொருள் தருவதாகவும் அமைவதே நாடு" என்ற விளக்கத்தையும் கூறி, அந்தப் பத்தியின் முடிவிலே, "இத்தகைய இலக்கணத்திற்குப் பெரிதும் பொருந்தி வரக்கூடிய ஒரு சிறந்த நிலப்பகுதியாக தமிழ் நாடு பொலிவு பெற்றுத் திகழ வேண்டும் என்பதில், நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு, இன்றைய தமிழக அரசு, அரும்பணிகள் பலவற்றையும் நிறைவேற்றி வருகிறது" என்று முடித்திருக்கிறார்,

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பதன் மூலமாக அந்தக் குறளுக்குரிய இலக்கணத்துடன் இப்போது இந்த நாடு இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். 'இல்லை' என்றால் நாடு இப்போது அவ்வாறு இல்லை என்று பொருள். பத்தாண்டுகளாக ஆட்சி நடத்திய பிறகும்கூட அந்நிலை இல்லை என்று மறைமுகமாக அக்கருத்து தொனிக்கிற வகையிலே சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல் இறுதியாகவும் குறளின் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். குறளைக் கூறாமல் குறளின் கருத்தை மட்டும்—விளக்கத்தை மட்டும்—சொல்லியிருக்கிறார்கள்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்று அரசுக்கு இலக்கணம் இதுதான் என்று கூறியிருக்கும் திருக்குறளைக் கூறாமல், அதன் கருத்தைக் கோடிட்டுக்காட்டி, அந்தக் குறளைச் சொல்லாமல் அதன் விளக்கத்தை மட்டும் சொல்லியிருக்கிறார்கள்.

"விளைபொருள் உற்பத்தி—செய்பொருள் உற்பத்தி ஆகியவற்றைப் பெருக்கியும், அவற்றின்மூலம் கிடைக்கும் வரி வருமானம்—வரியில்லா வருமானம் ஆகியவற்றை ஈட்டியும், ஈட்டப்பட்ட வருமானங்களைச் செம்மையுறக் காப்பாற்றியும், காப்பாற்றப்பட்ட வருமானங்களை நீதி—நேர்மை—சட்டம்—திட்டம்—ஒழுங்கு—தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வகுத்துத் தந்தும் ஆட்சி புரிய வேண்டும்" என்ற குறள் நெறிக் கருத்திற்கு இணங்க, என்று அவர்களுக்கு உரிய முறையில் அழகாகக் கூறியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் இப்போது இல்லாவிட்டாலும் கூட வார்த்தைகளிலாவது அவற்றை வகுத்துத் தந்து ஆட்சி புரிய தமிழக அரசு செயலாற்றி வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு முதலிலே சொன்ன குறளுக்கு இலக்கணமாகவும் இல்லை; முடிவிலே சொன்ன குறளுக்கு இலக்கணமாகவும் இல்லை என்பதைத் தெளிவாக்குவதே என்னுடைய உரை.

விளைபொருள் உற்பத்தி—செய்பொருள் உற்பத்தி ஆகியவற்றைப் பெருக்குவது என்று சொன்னால், 'விளைபொருள் உற்பத்திக்கான திட்டங்கள் என்ன இருக்கின்றன? ஏற்கனவே இருக்கிற திட்டங்கள் என்ன என்ன? புதிய திட்டங்கள் என்ன என்ன? வளர்ச்சிக்குரிய திட்டங்கள் என்ன என்ன? வேலை வாய்ப்புக்குரிய திட்டங்கள் என்ன என்ன என்று இப்படிப் பிரித்துப் பிரித்துப் பார்த்து, அதற்கெல்லாம் இந்த அறிக்கையில் இடமிருந்ததென்று சொன்னால், உண்மையிலேயே இந் நிதிநிலை அறிக்கையை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் இந் நிதிநிலை அறிக்கையை இணைப்பையும் சேர்த்து ஒரு பெரிய



புத்தகமாக ஆக்கியிருக்கிறார்களே தவிர, சொற்சிலம்பம் ஆடியிருக்கிறார்களே தவிர, வார்த்தை ஜாலங்கள் புரிந்திருக்கிறார்களே தவிர, இந் நிதிநிலை அறிக்கையில் உருப்படியான திட்டங்கள் ஏதுமிருக்கின்றதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டமே 'சகாரா'—வாக ஆகி வருகிறது. காவிரி நீர்ப் பிரச்சினை தீராத பிரச்சினையாக இருப்பதால், தஞ்சை மாவட்டமே வறண்டு போயிருக்கிறது. அங்கே நிலத்தடி நீரை எடுப்பதற்கோ மழை நீரை சேமித்து வைப்பதற்கோ புதிய திட்டங்கள் இருக்கின்றனவா என்றால், இல்லை. பின் விளைபொருள் உற்பத்தி எப்படிப் பெருகும்?

அதுமட்டுமல்ல, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிரந்தரத் தீர்வு ஏதுமிருக்கின்றதா என்றால், இல்லை. வளர்ச்சித் திட்டங்கள் ஏதேனும் உண்டா என்றால், இல்லை.

பின் உற்பத்தியைக்கூட தனியார் துறைக்குத் தரப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசு அதை ஏற்று நடத்தத் தயாராகவில்லை.

இதில் என்ன புதியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது? சத்துணவுத் திட்டத்தை இதுவரையிலே கணக்கிலேயே கொண்டு வராமல் நடத்திக் கொண்டிருந்தோம். இப்போது இந்த நிதிநிலை அறிக்கையிலே அதற்கென்று ரூபாய் 168.92 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை அந்தத் திட்டத்தைக் கூறி யார் யாரோ எப்படி எப்படி எல்லாமோ வசூல் செய்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நிதிநிலை அறிக்கையில் இப்போது அது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-10)

சத்துணவுத் திட்டத்தை இப்போது நாம் எதிர்க்கவில்லை. அதை எதிர்க்காவிட்டாலும்கூட, 169 கோடி ரூபாய் ஒரு ஆண்டிற்கு அரசு செலவு செய்து கொண்டிருக்கிறது. நான்கூட முன்பு ஒரு முறை இந்த அவையிலே பேசும்போது குறிப்பிட்டுக் காட்டினேன். அந்த சத்துணவுத் திட்டம் நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை மாணவர்களும்—ஒரு சோஷலிச சமுதாயம் அமைவதற்குக் கூட அது ஒரு வாய்ப்பாக அமையும்—பங்கேற்க வேண்டும்; ஆசிரியர்களும் பங்கேற்க வேண்டும்; அங்கேதான் சாப்பிட வேண்டும்; சீருடை அணிய வேண்டும்

என்றெல்லாம் மேலை நாடுகளைப் போல் திட்டம் வகுத்து, தரமான சத்துணவாக மாற்றி, ஒரு திட்டம் போட வேண்டும். அந்தத் திட்டத்தில் சத்துணவு சாப்பிடுகின்ற அத்துணை மாணவர்களும், அவர்களுடைய வருவாய்க்கு ஏற்ற வாறு—கீழ்மட்டத்திலே இருப்பவர்களுக்கு 5 ரூபாய், மேல் மட்டத்திலே வருவாய் உள்ளவர்களுக்கு 500 ரூபாய் வசூலிக்கக்கூடிய அளவுக்குக்கூட அதிலே வசூலையும் வைத்தால், அரசுக்கு நஷ்டம் இல்லை. கீழ்மட்டத்திலே இருப்பவர்களையும் காப்பாற்றிய பெருமை வரும். நாட்டினுடைய பொருளாதாரமும் பூரண வளர்ச்சி அடையும். ஆனால் இப்போது இருக்கிற சத்துணவுத் திட்டத்தினால் பொருளாதாரத்தை வளர்க்க முடியாத அளவுக்கு, செலவு மட்டுமே செய்யக்கூடிய அளவுக்கு அதைத் தொடர்ந்து அரசு செய்து கொண்டிருக்கிறது. புதிய முறையிலே சத்துணவு எப்படி அளிக்கலாம் என்பதற்குரிய முயற்சியை அரசு மேற்கொண்டிருந்தால், நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன் . . . . . .

**திரு. அ. ப. சிவராமன்:** தலைவரவர்களே, சத்துணவு போடுவதால் நாட்டினுடைய பொருளாதாரம் சீரழிகிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்ல வருகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அரசு எவ்வளவு காலத்திற்கு சத்துணவு போட்டுக் கொண்டிருக்கிறதோ, எவ்வளவு காலத்திற்கு வேஷ்டி, சேலை கொடுத்துக் கொண்டிருக்கிறதோ அவ்வளவு காலத்திற்கு நம்முடைய . . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள், தான் பேசும்போது அதைக் குறிப்பிட்டுப் பேசலாம். இடையிடையே பேசும்போது குறுக்கிடுவதால், அவையின் காலம் நீட்டித்துக் கொண்டே போகும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கர்ணன், "நான் யார் எது கேட்டாலும், இல்லை என்று சொல்லாமல் தர வேண்டுமென்று வேண்டினான்" என்றால், அதனுடைய உட்பொருள், "நான் மட்டுமே பணக்காரனாக இருக்க வேண்டும்; மற்றவர்கள் எல்லாம் ஏழையாக கையேந்திக் கொண்டே இருக்க வேண்டும்" என்பதாகும். அதுபோல் நான் சொல்ல விரும்புவது, எல்லோரும் ஏழையாக எப்போதுமே இருப்பது என்கிற அர்த்தத்திற்கு அது வரும். ஆகவே அவர்களை 'டெவலப்' செய்ய வேண்டும். அவர்களே சம்பாதித்து, அவர்களே கைப் பணத்தைப் போட்டு, அவர்களே சாப்பிட்டு, அவர்களே வேஷ்டி, சேலை வாங்கி, தொழில் செய்யக்கூடிய அளவுக்கு நாடு என்றைக்கு வருகிறதோ அதுவரையில் பொருளாதாரச் சரிவுதான்; பொருளாதார இன்னல்



தான்; பொருளாதார பாழ்தான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் மேல்நாடுகளில் இருப்பது போன்ற திட்டத்தைச் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் நாம் புதிய ஆலோசனை சொல்கிறோம். இப்படி அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆக இதில் இயற்றல் எங்கே இருக்கிறது? இயற்றலும், ஈட்டலும் என்று சொன்ன வகையில் இயற்றல் இருக்கிறதா? அதாவது புதிய திட்டங்கள் இருக்கின்றனவா? இல்லை. சரி, ஈட்டுவதற்குரிய வழி ஏதாவது நல்லமுறையிலே செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. புதிய வரி இல்லை. அதை வரவேற்கிறோம். புதிய தொழில்கள் இல்லை. எப்படி வரவேற்க முடியும்? செய்பொருள் உற்பத்தி இல்லை. எப்படி வரவேற்க முடியும்? விளைபொருள் உற்பத்தி இல்லை, எப்படி வரவேற்க முடியும்? ஆகவே ஈட்டல் இல்லை. ஆனால் ஈட்டல் இல்லவே இல்லையா என்றால், உண்டு. எப்படி அரசு ஈட்டுகிறது? சாராயக் கடை மூலமாக ஈட்டல், குதிரைப் பந்தயத்தை அரசே ஏற்று நடத்துவதன் மூலமாக ஈட்டல், லாட்டரிச் சீட்டுக்குள்ள வரியைக் குறைப்பதன் மூலமாக அதனுடைய வியாபாரத்தைப் பெருக்கி ஈட்டல், அடுத்து 5 சினிமாக் காட்சிகள் நாள் பூராவுமே காட்டி, அந்த சினிமாவிற்குரிய வரியின் மூலமாக ஈட்டல். ஆக இந்த ஈட்டல் முறையானதுதானா? ஒரு நாடு என்றிருந்தால் . . . .

மதுவிலக்கு அண்ணாவினுடைய இதயத்தில் இருந்த ஒன்று. அதையடுத்து, குதிரைப் பந்தய ஒழிப்பு அவரே கொண்டுவந்த ஒரு திட்டம். லாட்டரிச் சீட்டு கூடாது என்று சொன்னது அவரே. (குறுக்கீடு) சொன்னது எனக்குத் தெரியும். சினிமாவை வரவேற்றாலும்கூட, அது அளவோடு இருக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னதும் தெரியும். ஆகவே இன்றைக்கு நடைபெறுகிற மாதிரி மக்களைக் குடிக்க வைத்து, சூதாட வைத்து, கவர்ச்சியில் மயங்க வைத்து, அதன் மூலமாக பொருளை ஈட்டுவது ஒரு அரசா? பொருளை ஈட்டுவது என்றால், வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டுவந்து, தொழிற்சாலைகளைக் கொண்டுவந்து, உற்பத்திப் பெருக்கத்தை உண்டாக்கி அதற்குரிய டெக்னீசியன்களை உருவாக்கி அவர்கள் மூலமாக குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய ஆற்றலையும் வளர்த்து, அதன் மூலமாக ஈட்டுவதுதான் . . . . .

**திரு. எஸ். ஆர். இராதா:** தலைவரவர்களே, நான் குறுக்கிடுவதற்காக [illegible] மாண்புமிகு உறுப்பினர் அண்ணா அவர்களைப் பற்றிப் பேசும்போது கொஞ்சம் பொறுப்போடு பார்த்துப் பேச வேண்டும். நான் அவருக்கு ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் வரிசையாகச் சொல்லும் போது லாட்டரிச் சீட்டையும் அண்ணா அவர்கள் வேண்டாமென்று சொன்னமாதிரி வந்துவிட்டது. அது அப்படி வாக்

கூடாது. ஏனென்றால் அண்ணா அவர்கள் நல்ல நோக்கத்திற்காகத்தான் அதை ஆரம்பித்து வைத்தார்கள். அதை இப்போது சூதாட்டமாக ஆக்க வேண்டாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, ஆகவேதான் அதை நான் குறிப்பிட்டேன். அண்ணா அவர்கள் கூட அந்த நேரத்திலே கொண்டு வந்தபோது, அது தேவையில்லை என்று சொல்லிவிட்டு, என்றாலும், வருமானத்திற்காகக் கொண்டுவர வேண்டுமென்று கொண்டு வந்தார்கள். அது இப்போது சூதாட்டமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு எல்லாம தெரியும். மற்றவர்களுக்கும் . . . .(குறுக்கீடு) நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய பேச்சிலே அவர்களுடைய கருத்தைச் சொல்லலாம். ஆகவே, ஈட்டுகின்ற பொருளையும் கூட, அரசாங்கம் ஈட்ட வேண்டுமென்று சொன்னாலும் கூட, அதை எப்படி ஈட்டுவது என்று சொன்னால் ஈதல் அறம்; தீவினை விட்டு ஈட்டல் பொருள்.

(பிற்பகல் 12-15)

ஆக தீவினையால் ஈட்டல்தான் பொருள் என்று இலக்கணமே வகுத்துக் கொண்டிருப்பது சரிதானா என்றுதான் கேட்க விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தமிழில் புகுந்து விளையாடியிருப்பதால், தமிழ் தெரிந்த அவருக்காக நான் இதைச் சொல்ல விரும்புகிறேனே ஒழிய, மற்றவர்களுக்காக நான் இதைச் சொல்ல வில்லை.

தீவினையால் பொருள் ஈட்டுதலையே இந்த அரசு தன்னுடைய முயற்சி யாக மேற்கொண்டிருக்கிறது. இந்த அரசு எப்படி பொருளை ஈட்டுகிறது என்பதை நான் இங்கே ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன். அதைச் சொல் லும்போது, மதுவிலக்கைப்பற்றியும் ஒன்றை நான் குறிப்பிட்டாக வேண்டும். இதைச் சொல்லும்போது, ஆளும் தரப்பில் இருப்பவர்கள், "தாங்கள் மது விலக்கைத் தான் 1987 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் முதல் கொண்டு வருவ தாக அறிவித்திருக்கிறோமே, அதற்குத்தான் அந்த நல்ல நாளைப் பார்த்து வைத்திருக்கிறோமே, அன்றைக்கு கொண்டு வரப் போகிறோமே, அதற்குள் என்ன அவசரம்?." என்றெல்லாம் கூட கேட்கலாம். இந்த ஆண்டே கொண்டு வந்தால், அதற்காக ரூபாய் 60 கோடி இழப்பு ஏற்படும் என்றுகூட இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறதே என்று கூட சொல்லலாம். நான்





கேட்கிறேன். அப்படி ஒரு விஷயத்தைச் சொல்லும்போது, மகிழ்ச்சியோடு அறிவித்திருக்கலாமே? 1987 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் முதல் அது நீக்கப் படும் என்று ஏன் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை? 1987 ஜனவரி 1 ஆம் தேதியோடு மது ரத்து செய்யப்படுமா? அல்லது நீட்டிக்கப்படுமா? தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. நீக்கப்படமாட்டாது என்பதற்கு இங்கேயே ஆதாரம் இருக்கிறது. நீக்கப்படுமா அல்லது நீட்டிக்கப்படுமா? ஒரு தெளிவான பதில் இல்லை. எல்லாம் ஒரே மழுப்பல். ஆனால் ஒன்றை மட்டும் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது மதுவை ரத்து செய்வதன் மூலம் ஏற்படுகிற இழப்பில் 50 விழுக்காட்டை மத்திய அரசு தரும் என்று எதிர்பார்க் கப்படுகிறது என்று இந்த அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. எதற்காகத் தெரியுமா? பின்னாலே மத்திய அரசு 50 சதவீதம் இழப்பீட்டுத் தொகை அளிக்கவில்லை. ஆகவே நீடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று சொல்வதற்கான இடத்தை இப்போதே ஏற்படுத்தி வைத்திருக்கிறார் கள். மதுவிலக்கை கொண்டு வரப்போவதில்லை என்று இவர்கள் இப்போதே மெய்ப்பித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் மதுவிலக்கை நீண்ட காலமாகவே செயல்படுத்துவோம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் கள் இவர்கள். முதலமைச்சர் அவர்கள் தம் அன்னையின் மீது சத்தியம் செய்து ஆண்டு பலவாகி விட்டது. அண்ணா பிறந்த நாள் முதல் மது விலக்கை அமுல்படுத்தப் போகிறோம் என்று சொல்லி ஆண்டுகள் பலவாகி விட்டன. இப்படிச் சொன்னவைகள் எல்லாம் நீர்மேல் எழுத்துக்களாகிப் போய்விட்ட நிலையில் இன்றைக்கு 1987 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியை குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், அந்தக் கொள்கையைப் பின்பற்றாததன் காரணமாக, இன்றைக்குத் தவறான முறையில், பொருள் ஈட்டல் இந்த அரசால் நடக்கிறது. அப்படி பொருள் ஈட்டுவதுதான் சரியாக நல்ல முறையில் இல்லை, காத்தலாவது நல்ல முறையில் நடக்கிறதா என்றால், அதுவும் இல்லை. காக்கிற வழியையாவது சரியாகச் செய்கிறார்களா? என்றால் இல்லை. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், தெலுங்கு கங்கைத் திட்டம், கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் என்று சொல்லப்பட்ட திட்டம் இன்றைக்கு எப்படிச் செயல்படுத்தப்படுகிறது? அதைப்பற்றி நான் இந்த அவையிலேயே பலமுறை பேசியிருக்கிறேன். "இந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமா? அல்லது 'ஹரே கிருஷ்ணா, ஹரே ராமா' என்று நாங்கள் பஜனை செய்து கொண்டிருக்க வேண்டுமா? அது எப்போது வரும்?" என்றெல்லாம் கேட்டிருக்கிறேன். அப்படி இரண்டு மூன்று முறையாக அரைத்த மாவையே அரைக்கும் வகையில் அந்தத் திட்டத்தைப் பற்றியே தொடர்ந்து இவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். புதிய திட்டத்தைப்பற்றிப் பேசவில்லை.

இந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்திற்குக் கூட நம்முடைய அரசு அநாவசியமாக, வீணாக இன்றைக்கும் செலவு செய்து கொண்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடு தான் இந்த அறிக்கையின் மூலம் நமக்குக் கிடைக்கிறது. ஏற்கெனவே இத்திட்டத்திற்காக ரூபாய் 47 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதுவல்லாமல், 5 கோடி ரூபாய் அளவுக்கு நம்முடைய தமிழகத்தில் அதற்காகக் கால்வாய் வெட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக இன்றைக்கு மொத்தம் ரூபாய் 52 கோடிக்கு மேல் இந்தத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஆந்திர மாநிலத்தால் இதற்காக ஒரு நயா பைசா கூட செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்றால், அப்படிப்பட்ட குறிப்பு ஏதும் இந்த அறிக்கையில் சொல்லப்படவில்லை. அப்படியென்றால் ஆந்திரத்தில் உள்ள அரசு என்ன செய்கிறது? "நீங்கள் அரிசி கொண்டு வாருங்கள், நாங்கள் உமி கொண்டு வருகிறோம், இரண்டையும் கலந்து ஊதிச் சாப்பிடலாம்" என்று சொல்லுவதைப்போல், நம்முடைய பணத்தை வைத்துக் கொண்டு சித்து விளையாடிக் கொண்டிருக்கிறது. அதுதான் போகட்டும். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு தன்னுடைய ஒப்புதலை யாவது கொடுத்திருக்கிறதா என்றால், இதுவரையில் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கிறது. 'விரைவில் மத்திய அரசின் ஒப்புதலைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, இப்படி மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்படாத திட்டத்திற்கு ஏற்கெனவே 52 கோடி ரூபாய் செலவழித்ததோடு அல்லாமல், இப்போது இந்த ஆண்டு ரூபாய் 45 கோடி இத்திட்டத்திற்காக நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்றால், இதுதான் பொருளைக் காப்பதற்கான இலட்சணமா? இதைத்தான் குறள் சொல்லியிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தின் மீது இந்த அரசுக்கே நம்பிக்கை இல்லை. இதன் காரணமாகத்தான் கடந்த ஆளுநர் உரையில் இன்னொரு திட்டம் பற்றி சொல்லப்பட்டது. இந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்று தெரியாத காரணத்தால்தான், வேறு ஒரு திட்டம்பற்றி அதில் குறிப்பிடப்பட்டது. அதாவது உடனடியாக இந்தத் திட்டம் செயல்படாது என்று புதிதாக ஆரணியாறு-கொற்றலையாறு திட்டம் கொண்டு வந்து, சென்னை நகருக்கு அதிகமான அளவுக்குக் குடிநீர் சப்ளை செய்ய இருக்கிறோம் என்று சொல்லி அதற்காக ரூபாய் 94 கோடி செலவிடப்படும் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டது. அந்தத் திட்டம் இப்போது என்ன ஆயிற்று? அது ஒரே மழுப்பலாக இருக்கிறது. பொதுவாக நிதிநிலை அறிக்கை என்பது ஆளுநர் உரையில் சொன்னதற்கு ஒரு பொழிப்புரையாக இருக்கும். அந்த வகையில் ஆளுநர் உரையில் சொல்லப்பட்ட ஆரணியாறு-





கொற்றலையாறு திட்டம் மூலம் சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது இன்றைக்கு என்னவாயிற்று? அதை நிதிநிலை அறிக்கையில் காணோமே? அது எங்கே போய்விட்டது? இப்படி ஒரே குழப்பமா? குழப்பத்தில் பிறந்த திட்டம் என்ற காரணத்தாலேயே இங்கே அதைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்டார்களா ? அப்படியானால் முன்னாலே ஆளுநர் உரையில் சொன்னது என்னவாயிற்று? எனவே இப்படிக் காப்பதையும் சரியான முறையில் செய்யாத காரணத்தால்தான், வகுக்க முடியாமல் இந்த அரசு கஷ்டப்படுகிறது.

ஏற்கெனவே ஆளுநர் உரையில் 30 லட்சம் வீடுகள் 3 ஆண்டுக் காலத்தில் கட்டி முடிக்கப்படும் என்று சொல்லப்பட்டு இந்த ஆண்டு அதற்காகத் தொகை ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே தொகை ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை.

(பிற்பகல் 12-20)

காரணம், இவர்கள் இயற்றவும் இல்லை, ஈட்டவும் இல்லை, காக்கவும் இல்லை, காத்ததற்குப் பிறகு அல்லவா வகுக்க வேண்டும். ஆகவேதான் இவர்களால் வகுத்தல் செய்ய முடியவில்லை. அதனால்தான் ஆசிரியர்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை உங்களாலே நினைவுகொள்ள முடியவில்லை. ஆகவேதான் டாக்டர் கலைஞர் அவர்கள், "இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்ல தரசு" என்பது குறளிலேதான் இருக்கிறது. செயலிலே இல்லை என்று சொன்னார்கள். அதை மெய்ப்பிக்கின்ற வகையிலேதான் இந்த அரசின் நடைமுறை இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டாமல் இருக்க முடியவில்லை. ஆகவே நிதியமைச்சர் அவர்கட்கு குறிப்பிட்டுச் சொல்கிறேன்; தெரிந்திருந்தாலும், குறள் தெரிந்திருந்தாலும் அவற்றைச் செயல்முறைப்படுத்த முடியாத நிலையில் குறளை நிதிநிலை அறிக்கையிலே மேற்கோளாக எடுத்து அந்தக் குறளையே விமர்சனம் செய்யக்கூடிய அளவிற்கு தயவுசெய்து இனி குறளை எடுக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே, "30 இலட்சம் வீடுகளை மூன்று ஆண்டுகளிலே கட்டுவோம்" என்று தெரிவிக்கப்பட்டது. ஒரு அமைச்சர்கூட அதைப்பற்றிப் பேசும்போது, ஒவ்வொரு வீடும் பத்தாயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார். ஒரு வீட்டுக்கு பத்தாயிரம் ரூபாய் செலவு என்று அமைச்சர் சொன்ன குறிப்பின்படி, 30 லட்சம் வீடுகளை மூன்றாண்டுகளில் கட்ட வேண்டுமென்றால், மூவாயிரம் கோடி ரூபாய் தேவை. ஓராண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். நம்முடைய ஆண்டு வருமானமே மூவாயிரம் கோடிதான். அதிலே மூன்றில் ஒரு பங்கு இந்தத் திட்டத்திற்காக

மட்டும் ஒதுக்க வேண்டும். இது நடைபெறக்கூடிய காரியமா? தேர்தல் காலத்திலே, உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்காக பெரிய பெரிய விளம்பரங்களைச் செய்தார்கள். 30 இலட்சம் வீடுகளைக் கட்டித் தருகிறோம் என்று விளம்பரம் செய்தார்கள். இது நடக்காது என்பது அவர்களுக்கே தெரியும். இருந்தாலும் நாட்டை ஏமாற்ற, பாமர மக்களை ஏமாற்ற, அதன் மூலம் வாக்குகளைப் பெற விளம்பரம் செய்தார்கள். பிறகு என்ன ஆயிற்று? இப்போது இந்த வீடு கட்டும் திட்டத்தையே காணோம். முதலில் 'அட்கோ'-வைக் காட்டி, அடுத்து எச்.டி.எஸ்.சி.-யைக் காட்டி, பிறகு எல்.ஐ.சி.-யைக் காட்டி அதற்குப் பிறகு என்.ஆர்.ஈ.பி.-யைக் காட்டி, அதற்கடுத்து ஆர்.எல்.ஈ.ஜி.பி.-யைக் காட்டி கடைசியில் நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 26 கோடியைக் காட்டி, வீட்டைக் காட்டாமல் விட்டுவிட்டார்கள். இவர்கள் வீட்டைக் கட்டப் போவதில்லை. தேர்தலுக்காகச் சொல்லப்பட்டது இது. தேர்தலுக்கு முன்பே சொல்லியிருந்தால், சரியாக இருந்திருக்கும். இப்போது மாநகராட்சித் தேர்தலை நடத்த போவதில்லை. ஆகவே வெளிப்படையாக இந்தத் திட்டம் கிடையாது என்பதை ஒத்துக்கொள்வதைப் போல நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். இப்படி ஏமாற்றுவதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அரசு என்பதை மிகப் பெரிதாக மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரசு என்பது சொல்வதைச் செய்ய வேண்டும்; செய்வதைச் சொல்ல வேண்டும். செய்யாததை எல்லாம், செய்ய முடியாததையெல்லாம் தேர்தல் காலத்திலே, மேடைகளில் அள்ளி வீசுவதைப்போல இந்த அவைக்குள்ளே சொல்லிவிட்டு, பிறகு சமாதானம் சொல்லுவது என்பதை ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொரு விஷயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையைப் படித்தவர்கள் இதிலே இருப்பது அத்தனையும் உண்மைக்கு மாறானது என்பதை அறிவார்கள். இதிலே ஒன்றை மட்டும் படித்துக் காட்டுகிறேன். 39 ஆவது பக்கத்திலே நிதியமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். "தமிழ் நாட்டில் ஏற்கெனவே சாலைகள் நன்கு அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன" என்று குறிப்பிட்டிருப்பது 1986 ஆம் ஆண்டின் மிகப் பெரிய ஜோக். இதைவிட மிகப் பெரிய நகைச்சுவை வேறு எதுவும் இருக்க முடியாது. கிராமத்திலே உள்ள குடிமக்களிலிருந்து மேல் மட்டத்திலே உள்ளவர்கள் வரையில் இந்த வாசகத்தைப் படித்தால், இது எவ்வளவு பெரிய உண்மைக்கு மாறான செய்தி என்று கூறுவார்கள். எந்த நகைச்சுவை நடிகனாலும் இப்படிப்பட்ட நகைச்சுவையைக் கூற முடியாது. சாலைகள் இன்று எப்படி இருக்கின்றன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.



சாலைகளா அல்லது காட்டுப் பாதைகளா என்று புரியவில்லை. சாலைகள் எல்லாம் உழுதுவிட்ட நிலம் போல உள்ளன. சாலைகளிலே மலையைக் காணலாம், மடுவையும் காணலாம். இப்படிப்பட்ட நிலையில், சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்று யாரை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. நாங்கள் எல்லாம் அந்த அளவிற்கு ஏமாளிகளா? எங்களிடத்திலேயே, நாள்தோறும் அனுபவித்துக் கொண்டிருக்கிற எங்களிடத்திலேயே, "மிகச் சிறந்த முறையில் பராமரித்து வருகிறோம்" என்று சொன்னால் எப்படி? வேண்டுமானால் அமைச்சர்கள் செல்லும் பகுதியில் அவர்கள் வருகையை முன்கூட்டியே அறிந்து மேடு பள்ளங்களை நிரப்பி வைத்திருப்பார்கள். இப்போதுகூட இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 3.05 கோடிதான். இது எந்தக் கோடிக்குப் போதும்? எங்கள் தெருக்கோடிக்கே போதாது. எப்படி நாடு பூராவிற்கும் போதும்? ஆகவே இந்த அரசு எதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமோ அதற்கு ஒதுக்கீடு செய்யவில்லை, எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவில்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

புதிய வரிகள் இல்லை என்பது நல்ல விளம்பரம்.

(பிற்பகல் 12-25)

அவர் படித்த நிதிநிலை அறிக்கையிலே புதுவரி இல்லை என்று இருக்கின்றது. புது வரி எதுவும் தேவை என்று நான் சொல்லவில்லை. மக்களை எதிர்த்து புதிய வரி போட வேண்டும் என்று தி.மு.க. உறுப்பினர் சொல்கின்றார் என்று அவர்கள் சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். ஆனால் எதையும் மக்களை ஏமாற்றுகின்ற வகையிலே சொல்லாதீர்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

வெல்லம், சீரகம், சிகைக்காய் 5 சதவிகிதம் பலமுனை வரி என்பதை 8 சதவிகிதம் ஒரு முனை வரியாக மாற்றப்படும், உயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது ஒரு வார்த்தை ஜாலம்தான். சொற்சிலம்பம்தான். மாற்றப்படும் என்பது உயர்த்தப்படும் என்பதுதான். உயர்த்தப்படும் என்று சொன்னால் வெளிப்படையாகத் தெரியும். எனவே மாற்றப்படும் என்று சொல்கின்றார்கள்.

அதிலேகூட பாருங்கள். நாட்டுச் சர்க்கரை மீதான விற்பனை வரி நீக்கம். நாட்டுச் சர்க்கரை என்றால் தூள் சர்க்கரை. வெல்லத்தின் மீதான வரி உயர்வு. இதை நன்றாகப் பாருங்கள். வெல்லம் கட்டியாக இருந்தால் வரி உயர்வு. தூளாக இருந்தால் வரி கிடையாது. ஆக கட்டியாக இருந்

தால் வரி உயர்வு. தூளாக இருந்தால் இல்லை என்று வியாபாரிகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். தூளாக விற்றால் ஃபிராம் செய்யலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். வெல்லம் கட்டியாக விற்றால் வரி உயர்வு. வெல்லம் தூளாக இருந்தால் வரி கிடையாது. இது என்ன என்றே எனக்குப் புரியவில்லை. பீம்சிங் என்பவர் இயக்கிய ஒரு சினிமா படத்திலே கேட்டிருக்கிறேன். பீம்சிங்! 'இது என்ன ஒரு புதுக் குழப்பம்?' என்று. அப்படி ஒரு வசனம் வருகின்றது. அதுபோல் இது இருக்கிறது. இப்படியெல்லாம் சொல்லியா ஊரை ஏமாற்றுவது? அதைத்தான் நான் இங்கே சொல்வேன்.

இன்னொன்று பாருங்கள். பருத்தி நூலாலான உள்ளாடைகளுக்கு வரி 2 சதவிகிதம். கைத்தறி ஆடைகளுக்கு 3 சதவிகிதம். நூல் வகைகளுக்கு 4 சதவிகிதம் என்று ஏற்கெனவே இருக்கின்றது. அனைத்திற்கும் ஒரே சராசரியாக மாற்றுகின்றார்கள். எப்படி? 3 சதவிகிதமாக. இதனால் விளைவு என்ன? 2 சதவிகித வரி, 3 சதவிகிதமாக உயர்கிறது. உள்ளாடை வாங்குகின்றவர்களுக்கு வரி உயர்வு. ஆனால் வரியே இல்லை என்று பெயர். 2-சதவிகிதமாக இருப்பது 3 சதவிகிதமாக உயர்கின்றது. 3 சதவிகிதம் என்பது 3 சதவிகிதமாக இருக்கின்றது. 4 சதவிகிதம் என்பது உங்கள் மொழியிலே சொன்னால் 3 சதவிகிதமாக மாறுகிறது. ஆக இதனுடைய ஆங்ரேஜ் என்று பார்த்தால், 2, 3, 4 கூட்டி 9 சதவிகிதம். அதாவது 3 இன்டு 3, 9 சதவிகிதம். இப்படிப் போட்டிருப்பது 3 சதவிகிதம் என்று ஆகிறது. தாய் என்றாலும் மகள் என்றாலும் பெண் பிள்ளைதான். வரிச் சலுகை என்று சொல்வது வெளியிலே ஒரு விளம்பரத்திற்குத்தான் வாய்ப்பாக அமைந்திருக்கின்றது.

புயல், வெள்ளம், மழை இதனாலேயெல்லாம் நம் நாட்டிலே பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அது உண்மைதான். அதற்காக நிவாரணப் பணிகளுக்காக என்று ரூபாய் 60 கோடி இங்கே ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே ரூபாய் 45 கோடி அளவுக்கு செலவாகியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. மத்திய அரசுகூட ரூபாய் 66.8 கோடி தந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த நிவாரணப் பணி எப்படி செய்யப்பட்டிருக்கின்றது? தஞ்சையைப் பொறுத்த வரையில், பாசனம் இல்லாமல் என்ன செய்ய முடியும்? வறண்டுபோன அந்தப் பகுதியிலே என்ன செய்தாலும் பலன் இல்லை. அதனாலே பலனே கிடையாது. அதற்கு என்ன செய்யப்பட்டிருக்கின்றது? ஆனால் தேர்தலுக்காக சில பகுதியிலே பணம் வாரிவிடப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேட பணத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். உருப்படியான திட்டங்கள் என்ன செய்திருக்கின்றார்கள் என்றுதான் நான் கேட்டுக்



கொள்ள விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையிலே அதைப்பற்றி என்ன சொல்லியிருக்கின்றார்கள்? நீர் இல்லாத பகுதியிலே, விளைச்சல் இல்லாத பகுதியிலே வறட்சிப் பகுதியாக அறிவித்து, துயர் துடைப்புப் பணிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா? இல்லை. வரி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றதா? பாதிக்கப்பட்டவர்களுக்கு சலுகை செய்யப்பட்டிருக்கின்றதா? இல்லை. கூட்டுறவுக் கடன்கள், மின் வாரியக் கடன்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவா? இல்லை. எங்கே போகின்றது அந்தப் பணம்? அது அரசியல் ஆதாயத்திற்காகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது நிலவள வங்கிக் கடனுக்கு வட்டி ரத்து செய்யப்பட்டிருக்கின்றதா? அசல் நீண்ட காலத் தவணைக்கு மாற்றப்பட்டிருக்கின்றதா? விவசாயிகள் ஒரு குதிரை சக்திக்கு ரூபாய் 75-லிருந்து ரூபாய் 50 வரை கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அது செய்யப்பட்டிருக்கின்றதா? என்றால், இல்லை. வறட்சியான பகுதிகளிலே கிணறுகள் அமைக்கின்றார்கள். இறைவைக்கு வசதியாக பம்ப் செட் வைத்திருக்கின்றார்கள். அந்தக் கிணறுகளிலே நீரே வறண்டிருக்கின்றது. நீரே கிடையாது. இறைவையும் கிடையாது. ஆனாலும் 75 ரூபாய் அரசு பெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்த நிலை இன்றைக்கும் இருக்கிறது. அதை எப்படி விவசாயி ஏற்றுக்கொள்ள முடியும்? வறண்ட கிணற்றுக்கு மின் சக்தி தேவையில்லை. பம்ப் செட்டிற்கு வேலையில்லை என்று சொன்னாலும், மின் சக்திக்கு என்று கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விவசாயி செலுத்தித்தான் ஆகவேண்டும். அவன் உருப்படுவானா? முன்னேறுவானா? அதை நான் கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

அவன் முன்னேற வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா? அப்படி இருந்தால், அதைச் செய்திருக்கிறதா? அதைத்தான் கேட்கிறேன். நிலுவைப் பாக்கிக்கு சர்-சார்ஜ ரத்து செய்யப்பட்டதா? கரும்பு, பருத்தி ஆகியவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே, செய்திருக்கிறார்களா? பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன சலுகை தந்திருக்கிறார்கள்? 'கன்ஸ்டிரக்டிவ்' ஆக எதையும் சொல்ல முடியாது. அதைத்தான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சையைப் பற்றி பேச்சை எடுத்தால், தலைவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், அங்கே எண்ணெய் கிடைக்கிறது, விவசாயம் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். "தஞ்சையிலே எண்ணெய் கிடைக்கிறது, எரி வாயு கிடைக்கிறது. நாகைக்குப் பக்கத்திலே நரிமணத்தில் நல்ல எண்ணெய் கிடைக்கிறது, அது பயன்படும்" என்று சொல்லுகிறார்கள். கோவில்களப்பாலில் கிடைக்கிறது. இந்த எண்ணெய் அங்கேயிருந்து மணலிக்கு வருகிறது. இதுவரை 35 லாரி வந்திருப்பதாகச் சொல்லு

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 மார்ச் 19

கிறார்கள். நரிமணத்திலிருந்து மணலிக்கு வருகிறது. விவசாயம் இன்றைக்கு அங்கே போய்விட்டது. எனவே அங்கேயே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்த ஏன் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யக்கூடாது? அதை ஏன் சென்னைக்குக் கொண்டுவர வேண்டும்? அங்கே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு தர ஏற்பாடு செய்யக்கூடாதா? அதைப்பற்றி நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. அதைச் செய்திருக்கிறார்களா? தஞ்சை மாவட்டத்தை, தொழில் மிகுந்த மாவட்டமாக மாற்றும் வாய்ப்பு இந்த எண்ணெயால் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்திட இந்த அரசு முயன்றிருக்கிறது அல்லது முயற்சி செய்யும் என்பதாக நிதிநிலை அறிக்கையில் இருக்கிறதா என்றால், இல்லை. அதையாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் செய்யாமல், விவசாயிகளை ஏமாற்றும் வகையிலே, பொது மக்களை ஏமாற்றும் வகையிலே இதையெல்லாம் செய்வதைத் தவிர்த்து, இனிமேலாவது உண்மையைச் சொல்லி, அதைச் செயல் படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் சொல்வதை நிதிநிலை அறிக்கையிலே விட்டு விடுகிறார்கள். நிதிநிலை அறிக்கையில் சொல்வதை, அடுத்த நிதி நிலை அறிக்கையிலே விட்டுவிடுகிறார்கள். பின்னாலே என்ன செய்யப்படுகிறது என்பதே தெரியவில்லை என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நாங்கள் எல்லாம் மிகப் பெரிய போராட்டம் நடத்தினோம். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள்கூட குறிப்பிட்டுக் காட்டினார்கள். நிதிநிலை அறிக்கையிலே சில அறிவிப்புகளை எதிர்பார்த்தோம். அதிலேகூட, ஆசிரியர்களுக்கான நீதி நிலை நிறுத்தப்படவில்லை. இதற்கு முன்னர் எல்லாம், அறிஞர் அண்ணா, கலைஞர் காலத்தில் ஆகட்டும், திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் ஆகட்டும், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் ஆகட்டும், நான் ஆசிரியர் சங்கத் தலைவனாக இருந்திருக்கிறேன். அப்போதே பல்வேறு பெரியவர்களைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சில அறிவிப்புகளை ஆவலோடு எதிர்பார்த்தார்கள். இன்றைக்கு, அதிலேகூட ஏமாற்று வேலை. எதுவும் அறிவிக்கவில்லை. எந்தப் புதிய அறிவிப்பும் இல்லை. ஆசிரியர்கள் கோரிக்கைகள் எல்லாம் வைத்து, பேச்சு வார்த்தை நடத்தி, முதலமைச்சரவர்கள் அதை முடித்தார்கள். 20 கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதற்குப் பின்னாலே 9 கோரிக்கைகள் பொறுத்துத்தான் ஆணைகள் வந்திருக்கின்றன. 3 மாதங்களுக்கு மேல் ஆகியிருக்கிறது. பேச்சுவார்த்தை நடந்து முடிந்து 3 மாதங்கள் ஆகிவிட்டன. சொன்னது இன்னமும் செய்யப்படவில்லை. "இந்த நிதிநிலை அறிக்கையி



1986 மார்ச் 19] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

லாவது அவைகள் செய்யப்படுமா? அவற்றுக்கான நிதி ஒதுக்கப்படுமா? அல்லது அதற்கான அறிகுறி இருக்குமா?" என்றால், இல்லை. ஒரே ஒரு திட்டம் வந்திருக்கிறது. வீடு கட்டும் ஊழியர்கள் இறந்துவிட்டால், அதற்குரிய கடன் தொகையும், வட்டியும் தள்ளுபடி. அதோடு சில பத்திரிகைகளில் நிறுத்தி விட்டார்கள். ஏனென்றால் விளம்பரம் கிடைக்காது. அதிலே இருப்பது என்ன? உள்ளே படித்துப் பார்த்தால் தெரியும். ஊழியர்களிடம் பணம் வசூலித்து, அதன் மூலம் அரசுக்கு லாபம் தரும் திட்டமாக இது இருக்கிறது. சும்மா ரத்து பண்ணவில்லை. ஒரு ஸ்கீம் இருக்கிறது. ஊழியர்கள் முதலீடு செய்ய வேண்டும். சாகிறவர்கள் குறைச்சல். எல்லோரும் பணம் கட்ட வேண்டும். ஊழியர்கள் கட்டும் தொகையையும், அதற்கான வட்டியையும் கணக்கிட்டால், இதன் மூலம் அரசு வசூலுக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. 'அப்படியே ரத்து செய்கிறோம்' என்று சொல்லவில்லை. பத்திரிகையிலே 'கடன் ரத்து, வட்டி ரத்து' என்று போடப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-35)

இப்படித்தான் விளம்பரம் செய்யப்படுகிறது. எதை எடுத்தாலும் விளம்பரம் செய்யப்படுகிறது. சமீபத்தில் கூட அரசு அறிக்கையாக ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தார்கள். அந்த அறிக்கையில் கல்வி நிலையங்களின் மாணவர்களை திறமையின் அடிப்படையில் சேர்க்கின்ற காரியத்தை அரசு செய்திருக்கிறது என்று அதனை ஒரு சாதனையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே இந்த அரசால் பிற்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கும்போது, 250 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்களைச் சேர்க்கிறார்கள். ஆனால் பிற்படுத்தப்பட்ட மாணவர்களையும், தாழ்த்தப்பட்ட மாணவர்களையும், அவர்கள் 20 அல்லது 25 மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றிருந்தால்கூட, சேர்த்துக்கொள்ளலாம். அதுபோல் மேல்நிலைப் பள்ளிகளில் தரும் ஆசிரியர் பயிற்சிக்கு 300 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருக்க வேண்டும். 200 இடங்களில் நடைபெறுகின்ற இந்தப் பயிற்சியைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு இடத்திலும் நான்கு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களுக்கு முறையாக தாழ்த்தப்பட்டவர்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் சேர்க்கலாம். ஆனால் அப்படிச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக 800 இடங்கள் ஒதுக்கப்பட்டும் பாழாகின்ற நிலை இருக்கிறது. ஏன் அந்த இடங்களில் பிற்படுத்தப்பட்டவர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் சேர்க்கக் கூடாது? அவர்களை சேர விடாமல்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 மார்ச் 19

தடுப்பது இந்த அரசு. வேறு ஆட்களையும் சேர விடாமல் தடுப்பது இந்த அரசு. மேலும் பயிற்சிக்கு ஆண்களைச் சேர்ப்பதில்லை. பெண்களுக்குத் தான் பயிற்சி அளிக்கிறார்கள். காரணம் போராட்டம் செய்யாமல் பெண்கள் தாழ்ந்து போய்விடுவார்கள் என்று இந்த அரசு எண்ணுகிறது. ஆண்கள் என்றால் போராட்டம் நடத்துவார்கள் என்று அரசு கருதுகிறது. அரசின் சாதனை பற்றிய விளம்பர அறிக்கையில் மற்றொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் தலையீடு, தனி நபர் செல்வாக்கு எல்லாம் ஒழிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்கிறேன். பணச் செல்வாக்கு இல்லாமல் இன்றைக்கு ஒன்றும் நடக்காது. அமைச்சரே சொன்னால் கூட, அவரிடமிருந்தும் ஒரு 200 ரூபாய் வாங்கிய பிறகு தான், காரியத்தைச் செய்வார்கள். ஆகவே அரசியல் தலையீடு இல்லாமல், தனி நபர் செல்வாக்கு இல்லாமல், காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொல்வதிலிருந்து பணச் செல்வாக்கு இல்லாமல் ஒன்றும் நடக்காது என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு பணத்தால் எதையும் செய்ய முடியும் என்கிற நிலைமை இருக்கிறது. சுயநிதி திட்டத்தின்கீழ் தாங்களாகவே பணம் போட்டு கல்வி நிலையங்களை ஆரம்பிக்கிறார்கள் என்றால், இங்கே மூன்று ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். உடனே அவர்கள் அங்கே ஆறு ஆயிரம் ரூபாய் 'கலெக்ட்' பண்ணுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் அரசியல் தலையீடு ஒன்றும் இல்லை, ஆனால் பணத்தின் மூலம் எதையும் செய்யலாம் என்று தெளிவாக்கியிருக்கிறார்கள்.

'கலெக்ட்' பண்ணுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் அரசியல் தலையீடு ஒன்றும் இல்லை, ஆனால் பணத்தின் மூலம் எதையும் செய்யலாம் என்று தெளிவாக்கியிருக்கிறார்கள்.

அடுத்து, பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு உதவி என்பது பற்றி சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர், இதுவரை பயன் பெற்றவர்கள் எத்தனை பேர் போன்ற விவரங்கள் இல்லை. அதுபோல் பள்ளி மாணவர்களுக்கு சீருடை இலவசமாக வழங்குவது பற்றி சொல்லியிருக்கிறார்கள். எல்லோருக்கும் என்றா சொல்லியிருக்கிறார்கள்? இல்லை. சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மட்டும் தான் சீருடை தருகிறார்கள். சத்துணவு வழங்குவதைப் பொறுத்தவரையில் கூட, தேர்தல் அன்றைக்கு சாட்டை வரி யாக வரி ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கூடுதலாக வாடகை கொடுத்து வரியைக் கொண்டு வந்த மக்கள் தன்னாலே இறக்கினார்கள். இப்படி ஏமாற்று வேலையாக அல்லது விளம்பர வேலையாகத்தான் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார்கள்.



**திரு. அ. ப. சிவராமன்:** உறுப்பினர் சொல்வது தவறான தகவல். சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மட்டுமல்ல சீருடை. மற்றவர்களுக்கும் இலவச சீருடை தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இடையவே இடையாது. சத்துணவு சாப்பிடவில்லை என்ற காரணத்திற்காக தன் பிள்ளைக்கு சீருடை இல்லை என்று சொல்லி, ஒருவர் என்னிடம் முறையிட்டார். நானே அவர் பிள்ளையை சத்துணவு சாப்பிடச் சொல்லி, சீருடையை பெற்றுக்கொள்ளச் சொல்லுங்கள் என்றேன்.

(பிற்பகல் 12-40)

சத்துணவு சாப்பிடுபவர்கள்களுக்கு மட்டும்தான் சீருடை வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கும் சீருடை தரப்படுகிறது என்று சொல்வது தவறான தகவல். இப்படித்தான் முன்பொரு முறை, தி.மு.க. தலைவர் ஒருவர் ஓர் அமைச்சரின் காலிலே விழுந்தார் என்ற தவறான செய்தியைச் சொன்னீர்கள். அதைப் போலத்தான் இதுவும் என்று கருதுகிறேன். நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புவது, நகராட்சி, மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள். . .

(திரு. அ. ப. சிவராமன் எழுந்தார்)

குறுக்கீடு செய்வதை நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) அரசுப் பள்ளி ஆசிரியர்களாக ஆக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் ஆக்கப்பட்டார்களா?

**திரு. அ. ப. சிவராமன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இப்படித்தான் தி.மு.க. தலைவர் ஒருவர் அமைச்சரின் காலில் விழுந்தார் என்று தவறான தகவலைத் தந்தேன் என்று சொல்கிறார். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அனுமதித்தால், யார் காலில் யார் விழுந்தார் என்று தேதி உட்பட என்னால் சொல்ல முடியும். அப்படி அவையிலில்லாத நபர் பெயரை இந்த அவையில் சொல்லக்கூடாது என்ற மரபு இருப்பதால், அந்த மரபு கருதித் தவிர்க்க விரும்புகிறேன். நான் தவறான செய்தியைத் தரவில்லை. உறுப்பினர் அவர்களின் குழந்தைகளுக்கு சீருடை தரப்படவில்லை என்று சொன்னார்கள். அனால் என்னுடைய குழந்தைகள் அத்தகைய சீருடைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே எல்லாக் குழந்தை களும் சீருடை பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் உறுதியாகக் கூற முடியும்.

[1986 மார்ச் 19

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறார்கள் உறுப்பினர் அவர்கள். நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் ஆரம்பித்து, எப்போதோ நடந்துபோன தனி நபர் பிரச்சினை பற்றிப் பேசுகிறார்கள். இதைப் பார்த்தால் வீணே வம்புக்கு வருவது போல் இருக்கிறது. (சிரிப்பு) சப்ஜெக்டில் பேசுங்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அவர் ஆதாரம் இல்லாமல் பேசுகிறார் என்று நான் சொல்கிறேன். அவர் ஆதாரத்தைக் காட்டினால், நான் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆதாரம் இல்லாமல் மீண்டும் பேசுகிறார் என்றுதான் நான் வலியுறுத்திச் சொல்கிறேன். வேண்டுமானால் ஒரு எம்.எல்.சி.-யுடைய குழந்தை என்ற இன்ஃப்ளுயன்சில் அவருடைய குழந்தைகளுக்கு சீருடை தந்திருக்கலாம். அப்படியென்றால் அதைவிட ஒரு அபத்தம் கிடையாது.

**திரு அ. ப. சிவராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, எம்.எல்.சி-யுடைய குழந்தைக்குக் கிடைத்தது என்று சொல்கிறார்கள். இந்த ஆட்சி மிகச் சாமானியமானவர்களை எல்லாம் சட்டமன்றத்திலும், மேலவையிலும் இடம் பெற்று உட்காரச் செய்திருக்கிறது. நான் மிக ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன். எனவே நான் வாங்குகிற சம்பளத்தாலேயே என்னுடைய பொருளாதாரம் நிர்ணயிக்கப்படுவதில்லை. எனவே என்னுடைய குழந்தைகள் சீருடை பெறுவது என்பதையும், அதுவும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் பெறுவது என்பதையும் பெருமைப்படத்தக்க ஒன்றாகவே கருதுகிறேன். மீண்டும் சொல்கிறேன், நான் நிரூபிக்க முடியும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அனுமதித்தால், யார் காலில் யார் விழுந்தார்கள் என்று நிரூபிக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் கூட அவரைப்பற்றிச் சொல்லி நிரூபிக்க முடியும். இவையெல்லாம் தேவையில்லாத பிரச்சினை என்பதை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக, அரசு, "ஆசிரியர்களையெல்லாம்" அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம் என்று இதிலே சொல்லியிருப்பது எவ்வாறு? அதைத்தான் நான் கேட்கிறேன். எல்லோரையும் என்றால், நகராட்சி ஆசிரியர்கள், மாநகராட்சி ஆசிரியர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள் எல்லோரையுமா? ஆகவே, இந்த சீருடை போலத்தான் இதுவும். ஆசிரியர்களை 'எல்லாம்' அரசு ஊழியர்களாக ஆக்கியிருப்பது, ஆகவே பஞ்சாயத்து யூனியனில்



1986 மார்ச் 19] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

இருக்கிற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதுபற்றி எனக்கு இப்பொழுது ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் சட்டம் வரவில்லை. ஒரு அரசாணைதான் வந்திருக்கிறது. நமமுடைய உள்ளாட்சித் துறை அமைச்சரே, மீண்டும் அவர்களை உள்ளாட்சித் துறைக்கே கொண்டுவர முயற்சித்ததால்தான், இந்த ஆசிரியர்கள் போராட்டமே எழுந்தது. அதற்குப் பின்பு அது பெரியதாக உருவெடுத்து, மிகப் பெரிய போராட்டமாக உருவெடுத்தது உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். இன்றைக்கு நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் 400, 500 பேர் ஆசிரியர்கள் நிர்வாகத்தில் தனது கைக்குள் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புவார்களே தவிர, ஆசிரியர்கள் தங்கள் நிர்வாகத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்று யாரும் விரும்ப மாட்டார்கள். உள்ளாட்சி அமைச்சரே கூட அதை இதுவரை சட்டமாகக் கொண்டு வந்து நிறைவேற்றாததற்குக் காரணம், இப்படி ஒரு சூழ்நிலை வந்ததற்குப் பிறகு ஒரு தீர்மானம் அவர்களே கொண்டு வந்து நிறைவேற்றுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறாரோ என்று நான் அஞ்சுகிறேன்.

அப்படி வந்தால், மீண்டும் ஒரு பெரிய போராட்டம்தான் வரும். அப்படி ஒரு சூழ்நிலைக்கு அவர் காத்துக் கொண்டிருப்பதுபோல் தெரிகிறது. இப்போது பஞ்சாயத்தில் கூட இரட்டை ஆட்சி நடக்கிறது. அங்கே போய்ப் பார்த்தால் தான் தெரியும். பஞ்சாயத்து யூனியன் பள்ளி, ஆனால் அங்கே வேலை செய்வது அரசு ஊழியர்கள். அந்தக் கட்டிடங்கள், பள்ளிகள், அரசுக் கட்டிடங்களாக, பள்ளிகளாக மாற்றப்படவில்லை. காரணம் கட்டிடம் பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தம் தனி அதிகாரிகள் இருந்த காலத்திலேயே மாற்றியிருந்தால், நலமாக இருந்திருக்கும். அரசு ஊழியர்கள் பணியாற்றும் பள்ளிக் கட்டிடம், பழுது பட்டால், அதை யூனியன் சரி செய்யுமா? இப்படி எதையெடுத்தாலும் உருப்படியாகக் கிடையாது. அந்த நேரத்தில் யாராவது வேண்டியவர்கள் வந்து சொன்னால், ஒரு சட்டம் போட்டு விடுவது. பிறகு அதைப்பற்றி சிந்திப்பதே கிடையாது. முழுமையும் கிடையாது. அப்படி அந்தக் கட்டிடங்களை அரசு எடுக்கவில்லையென்று சொன்னால், இப்போது வந்திருக்கிற சேர்மன், தலைவர் மற்ற யாராக இருந்தாலும், அவர்கள் கட்டிடங்களை பழுது பார்ப்பதில் கவனம் செலுத்துவார்களா? மாட்டார்கள். இப்படியொரு பிரச்சினை எல்லா இடத்திலும் ஏற்பட்டிருக்கிறது. கட்டிடங்களை இப்போது எடுப்பதற்கும் அவர்கள் இடைஞ்சலாக இருப்பார்கள். முன்பே

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 மார்ச் 19

எடுத்திருந்தால் அரசே அதைப் பராமரிக்கலாம் அல்லவா? 'ஆசிரியர்களுக்குச் செய்திருக்கிறோம்' என்றால், எதைச் செய்தீர்கள்? 1—6—1986 முதல் நகராட்சி, மாநகராட்சி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்கள், ஆக்குவோம், ஆக்குகிறோம் என்பது இப்போது கல்வியமைச்சருடைய புதிய அறிவிப்பு. இது என்ன புதிய அறிவிப்பு?

இதுதான் 11—12—1985 அன்றே முதல்வரிடம் பேசும்போதே ஒப்புக்கொண்டது ஆயிற்றே? அப்போதே போட்டிருக்கவேண்டிய அந்த உத்தரவை மூன்று மாதம் கழித்து இப்போது சொல்வதால், பத்திரிகையில் என்ன செய்தி வருகிறதென்றால், ஆசிரியர்களுக்குப் புதிய அறிவிப்பு வந்திருக்கிறது முதல்வர் சொன்னதைவிட, கல்வி அமைச்சர் சொல்வது புதிய அறிவிப்பா? இதைச் சொன்னதற்கு, உடனே கல்வி அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் மாநாடு, பாராட்டு! அறிவிப்புக்கு பாராட்டு ஆணை வந்ததற்கு அல்ல.

(பிற்பகல் 12-45)

1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் தேதி அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடந்த மாநாட்டிற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சென்று, 14 சலுகைகளை அறிவித்துவிட்டு வந்தார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கென தனி இயக்குநரகம் ஆக்குவதாகச் சொன்னார். சிறப்பு ஆசிரியர்களுக்கு பயிற்சிக்கு ஒரு ஊதிய உயர்வு தரப்போவதாகச் சென்னார். அதற்கும் இதுவரை உத்தரவு இல்லை. இப்போது புதிய அறிவிப்பு. இதை தொடர்ந்து உடனே மாநாடு. புகழாரங்கள். அப்படி ஒரு மாநாட்டுக்கு இந்த நேரத்தில் அது தேவைப்படுகிறது. மேலவைத் தேர்தல்களுக்காக ஏன் அப்போதே ஆணை போடவில்லை? இனிமேல் போட்டால் நகராட்சியில் இருப்பவர்கள் தடுப்பார்கள். தடுக்க வேண்டும் என்பதுதானே உங்கள் எண்ணம்.

'ஆசிரியர்களே, அரசியல் பகடைக்காய்களாக ஆகாதீர்கள்' என்று கூறுகிறார்கள். ஆகக்கூடாது. அது இரண்டு பக்கத்திற்கும் பொருந்தும் அல்லவா? ஆனால் அவர்கள் ஆளும் கட்சியில் மட்டும் இருக்க வேண்டுமோ? அங்கே மட்டும் ஜால்ரா போட வேண்டும். அது எப்படி? அரசியல் பகடைக்காயாக அங்கே மட்டும் இருக்கலாமா? "ஊருக்குத்தான் உபதேசம். உனக்கும் எனக்கும் இல்லையடி" என்று சொல்வது போலத்தானே இது இருக்கிறது.



1986 மார்ச் 19] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

ஆனால் ஒன்றைக் குறித்து என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன் ஆசிரியர்கள் போராட்டத்தை ஆரம்பத்தில் அரசியல் போராட்டம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது தந்திருக்கிற அறிக்கையிலே "ஆசிரியர்கள் போராட்டம் உரிமைப் போராட்டம்" என்று சொல்லியிருக்கிறார்கள். "ஆசிரியர்கள் நடத்தியது உரிமைப் போராட்டம். அதை மனிதாபிமானத்தோடு தீர்த்து வைத்திருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்கள் போராட்டம் உரிமைப் போராட்டம் என்று இப்போதாவது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆனால் அதை எங்கே அவர்கள் மனிதாபிமானத்தோடு தீர்த்து வைத்திருக்கிறார்கள். இன்னமும் எங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையே எங்கள் மீதிருந்த வழக்குகளை வாபஸ் பெறுமாறு நாங்கள் மூன்று மாதங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போதுதான் வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கிறார்கள். இப்போது வாபஸ் பெற்றதை உள்ளாட்சித் தேர்தல்களுக்கு முன்பு வாபஸ் பெற்றிருந்தாலாவது, அவர்கள் நிலைமை சற்று நன்றாக இருந்திருக்கும். இப்போதுகூட வாபஸ் வாங்க அமைச்சர் யாரும் காரணமில்லை. அதற்குக் காரணம் வேறு யாரோ ஒருவர் ஒரு செயலாளர். அவர் ஆட்சியை ஒரு வழியாக முடித்துவிட்டுத்தான் போவார் போலிருக்கிறது. அவர்கள் அப்போது போடவில்லை. இப்போதுதான் போட்டிருக்கிறார்கள். இப்போதும் போட்டிருக்கிற உத்தரவிலும் என்ன போட்டிருக்கிறார்கள் தெரியுமா? ஆசிரியர்கள் மீதான வழக்குகள் மட்டும் வாபஸ் என்று போட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் தவிர அலுவலர்கள் இருக்கிறார்கள், திட்ட அலுவலர்கள் இருக்கிறார்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள், உதவிக் கல்வி அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. வாக்காளர்கள் யாரோ அவர்கள் மீதான வழக்குகள் மட்டும் வாபஸ். தேர்தல் என்றால்தான் எதையும் செய்ய முடியும். இப்படிப் பட்ட ஒரு நிலை இருக்கலாமா?

ஆசிரியர்கள் போராட்டத்தை மனிதாபிமானத்தோடு தீர்த்துவைத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். மனிதாபிமானம் ஆசிரியர்களிடம் மட்டும்தான் வந்திருக்கிறது. ஆசிரியர்களிடம் வந்த மனிதாபிமானம் ஏன் தலைமைச் செயலக ஊழியர்களிடம் வரவில்லை? தலைமைச் செயலக ஊழியர்களிடம் மனிதாபிமானம் இன்னமும் வரவில்லையே, ஏன்? தலைமைச் செயலக ஊழியர்கள் வாக்களிக்கவேண்டிய அவசியம் இல்லை. காரணம் இப்போது சென்னையில் நடைபெறும் தேர்தல் பட்டதாரிகள் தொகுதி தேர்தல் இல்லை.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 மார்ச் 19

இப்போது நடைபெறும் தேர்தல் சென்னை பட்டதாரித் தொகுதியாக இருந்திருந்தால், தலைமைச் செயலக ஊழியர்களிடத்தும் மனிதாபிமானம் வந்திருக்கும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி "yield" ஆகமாட்டேன் என்று சொல்லுவார்கள். பரவாயில்லை. இப்போது "yield" ஆகியதற்கு நன்றி, தலைமைச் செயலக ஊழியர்கள் போராட்டத்தில் மனிதாபிமானம் இல்லாவிட்டாலும், ஆசிரியர்கள் போராட்டத்திலாவது மனிதாபிமானம் இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு தகவலுக்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எங்கள் மாவட்ட உறுப்பினருக்கு இந்தச் சந்தேகம் வந்திருக்கக்கூடாது. எங்கள் மாவட்டக்காரர்களை ரொம்ப புத்திசாலி என்று சொல்வார்கள். அவருக்கு இந்தச் சந்தேகம் வந்திருக்கக் கூடாது. ஏனென்றால் நான் பேசும்போதே சொன்னேன். மனிதாபிமானம் தேர்தல் நோக்கில்தான் இந்த அரசுக்கு வந்திருக்கிறதென்று சொன்னேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா எழுந்தார்)

நான் பேசுவதற்கு நிறைய இருக்கிறது. தயவுசெய்து பேசவிடுங்கள்.

இப்போது இந்த ஆணை போடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. வேலை நிறுத்தம் செய்த ஒரு நாள் சம்பளத்திற்கு ஓர் ஆணை போட்டார்கள். அந்த ஆணை இன்னும் பள்ளிகளுக்குப் போய்ச் சேரவில்லை. அதனால் சம்பளம் வாங்க முடியவில்லை. ஆணை போட்டு இரண்டு மாதங்கள் ஆகியும் இன்னும் வரவில்லை. எங்கே அரசு இயந்திரம் செயல்படுகிறது என்று கேட்கிறேன்.

உத்தரவுகள் போடப்பட்டபின் அந்த உத்தரவுகள் உரிய இடத்திற்குப் போய்ச்சேருவதில்லை. வழக்குகள் வாபஸ் உத்தரவு நகல் தருமாறு நான் துறைச் செயலாளருக்கு ஒரு தடவை எழுதிக் கேட்டேன். அவர் இது ரொம்ப Confidential என்று சொல்லி தர முடியாது என்று சொல்லிவிடுகிறார். ஒரு எம்.எல்.சி.-க்கே ஆணையின் நகல் கிடைக்கவில்லை. ஆணை போடப்பட்டு பத்திரிக்கைகளில் எல்லாம் வருகிறது. ஆனால் இந்த அவையில் அங்கம் பெற்றிருக்கின்ற ஓர் உறுப்பினரால் அந்த ஆணையைப் பெறமுடியவில்லை என்று சொன்னால், எங்களுக்கு ஏன் இந்தப் பதவி? ஏன்



1986 மார்ச் 19] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

(பிற்பகல் 12-50)

எம்.எல்.சி.-யாக இருக்க வேண்டும்? எங்களுக்கு இது ஒரு அவமானமாக இல்லையா? ஏற்கெனவே அரசு ஒரு சட்டமே போட்டிருக்கிறது. கல்வித் துறையினுடைய ஆணைகளை, கல்வித் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று ஆணையே இருக்கிறது. நான் மடல் எழுதி அனுப்புகிறேன், அதற்கு செயலாளர் அவர்கள் அது 'கான்பிடென்ஷியல்', தரக்கூடாது என்று சொல்கிறார். அப்படியென்றால் வழக்கில் அரசு ஏதோ சிக்கல் வைத்திருக்கிறதா? எனக்குப் புரியவில்லை. அந்த ஆணையைத் தர முடியாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? அது வெளிப்படையாக இருக்க வேண்டாமா? திறந்த புத்தகமாக இருக்க வேண்டாமா? ஆக அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்கள் எங்களைகூடக் கேட்டார்கள். "சம்பளத்திற்காக ஆணை போட்டு இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. நீங்கள் கொண்டுவந்து கொடுக்கிறீர்கள், ஆனால் டிப்பார்ட்டுமெண்ட் மூலமாக வரவில்லை" என்று சொல்லி, அதனால் சம்பளம் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள் என்று நான் சொன்னேன் . . . .

**மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவரவர்களே, கல்வித் துறை ஆணையைப் பொறுத்தமட்டிலும், அதனுடைய ஆணைகள் கல்வித் துறையின் சார்பிலே கல்வித் துறையைச் சார்ந்த எம்.எல்.சி.-களுக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் வழக்கு சம்பந்தமான பிரச்சினைகளை எல்லாம் உள் துறை கவனிக்கிறது. உள் துறையின் ஆணைகள் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியப் பிரதிநிதியாகிய எம்.எல்.சி.-களுக்குத் தர வேண்டுமென்று இதுவரை ஏதாவது சட்டம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** போராடியவர்கள் நாங்கள். போராட்டம் சம்பந்தமாகப் போடப்பட்ட ஆணை. அந்த ஆணையை கல்வித் துறை மூலமாக அனுப்பச் செய்ய வேண்டியது அரசின் கடமை. ஆகவே அவர்கள் எங்கு ஆணை போட்டிருந்தாலும், அது கல்வித் துறையின் மூலமாக வரவேண்டும். அதிலும் குறிப்பாக அது அந்த ஆசிரியப் பிரதிநிதிகளுக்குத் தரவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அவ்வளவுதான். அது மட்டுமல்ல. சம்பளத்தைப்பற்றி ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டபோது நான் ஒன்றைச் சொன்னேன். நான் சொன்னேன், "சட்டமன்ற உறுப்பினர்

களுக்கே 200 ரூபாய் சம்பளத்தை உயர்த்தித் தருவதாகச் சொல்லி 1½ வருடம் ஆகிவிட்டது. இன்னும் எங்களுக்கு 'அரியர்ஸ்' கொடுக்கப்படவில்லை. எங்கள் நிலைமையும் அப்படித்தான் இருக்கிறது. அப்படி இருக்கும்போது இது உங்களுக்கு எங்கே இப்போது வரப்போகிறது" என்று சொன்னேன். அப்படி ஒரு சூழ்நிலை. இங்கே இருப்பவர்களுக்கே, திலுவையைத் தவிர அவ்வளவு விரைவாக, வேகமாக, அதாவது ஆமை வேகத்திலே அரசு இலாக்காக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறாகக் கருதுகிறார்கள். அந்தப் பணத்தை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் வாங்கிச் செலவு செய்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ரொம்பக் கோபமாகப் பேசுகிறார்கள். திரு. தாமஸ் அவர்கள் கோபத்திலே ராஜினாமாச் செய்தார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ராஜினாமா செய்துவிடக் கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : திரு. தாமஸ் மாதிரி நான் ராஜினாமா செய்ய மாட்டேன். ஏனெனில் எனக்கு 'ஸ்டன்ட்' அடிக்கத் தெரியாது. நான் இங்கே சொல்ல விரும்புவது . . . .

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாற்றுத் தலைவரவர்களே, திரு. தாமஸ் அவர்கள் சிறையிலேயிருந்து, போராட்டம் வெற்றியடைய வேண்டுமென்பதற்காக, அரசாங்கத்தின் செயலைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு, வேதனை தெரிவித்து தனது பதவியை ஆசிரியர்களுடைய நலனுக்காக ராஜினாமா செய்ததை 'ஸ்டன்ட்' அடித்ததாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது நன்றாக இல்லை. அது மிகுந்த வேதனையை அளிக்கக்கூடியது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனது கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : அவையில் இல்லாத உறுப்பினர்களைப்பற்றி இங்கே பேசக்கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் பேசவில்லை. அவர் பேசுகிறார். அதற்கு நான் சொல்ல விரும்புவது . . . . .

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதை 'ஸ்டன்ட்' என்று சொல்லக்கூடாது. அந்த வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும்.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : அது ஒரு வீரம் என்ற அர்த்தத்திலே ஆசிரியர்களின் எத்தனையோ பிரச்சினைகளுக்காக நான் அவையிலிருந்து வெளியே சென்றிருக்கிறேன். . . . .

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாற்றுத் தலைவரவர்களே, ஆசிரியர் பிரதிநிதிகளுக்குள்ளே மோதல் வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஸ்டன்ட்' என்பது பொதுவாக தவறான எண்ணத்திலே சொல்லக்கூடிய வார்த்தை தான். அதனால் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் 'ஸ்டன்ட் அடித்தார்' என்று சொல்லியதை பெருந்தன்மையாக மாற்றிவிட்டால் நன்றாக இருக்கும். ஆசிரியர் பிரச்சினைகளுக்காகத் தான் நாம் எல்லோரும் கருத்து வேறுபாடுகளை மறந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே அந்த வார்த்தை நமது சுமூகமான உறவைப்

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் அந்தப் பொருளிலே சொல்லவில்லை என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினைகளை. . . எல்லோரும் குறுக்கிட்டதனாலே எங்கே போகிறேன் என்றே தெரியவில்லை. தலைமைச் செயலக ஊழியர்களின் பிரச்சினையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வில்லை. சரியான விதத்தில், மனிதாபிமானத்தோடு அரசு நடந்துகொள்ளவில்லை. (மணி அடிக்கப்பட்டது.)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : இன்னும் 5 நிமிடங்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு மணி நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். 1 மணிக்கு அவையைத் தள்ளி வைக்கவேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவரவர்களே, முடிப்பதற்கு முயற்சி செய்கிறேன். தயவுசெய்து மன்னிக்கவும். நான் 50 நிமிடங்கள் தான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இனி யாரும் இன்று பேச இல்லை. இப்போதே முடித்து விட வேண்டுமென்றால் முடித்துவிடுகிறேன். உங்களுடைய விருப்பம் அதுவானால், தலைவரவர்களே, நான் முடித்துவிடுகிறேன். ஒரு மணிக்கு மேலாகப் பேசுகிறவர்கள் இருந்த வரலாறும் உண்டு, நிகழ்ச்சிகளும் உண்டு. தலைவரவர்கள் உடனே முடித்துவிடவேண்டுமென்று சொன்னால் முடித்து விடுகிறேன். தலைவரவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிய நான் தயாராக இருக்கிறேன். உட்கார்ந்து விடட்டுமா?

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினரவர்கள் தனது உரையை சீக்கிரம் முடிக்க முயல வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைமைச் செயலக ஊழியர்கள் பிரச்சினையில் அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாததனால், தலைமைச் செயலக ஊழியர்களிடையே அமைதி இல்லை; பணிகள் சுறுசுறுப்பாக நடைபெறவில்லை; மனித சக்தி வீணாகிறது; பணமும் பாழாகிறது. அதிலே ஒன்றை நான் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் என்ன மிகப்பெரிய தவறைச் செய்துவிட்டார்கள்? அவர்கள் இந்தக் காலத்திலேதான் போராடினார்கள் என்று அரசு கருதுகிறதா?

(பிற்பகல் 12-55)

1974 ஆம் ஆண்டில் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் இதே தலைமைச் செயலக ஊழியர்கள் போராடினார்கள். இன்றைக்குத் தலைமைச் செயலகச் சங்கத்தின் தலைவராக இருக்கிற திரு. ரஹீம் அவர்கள் அன்றைக்கு அதன் செயலாளராக இருந்தார். அப்போது போராட்டம் நடத்தினார்கள். எதற்காக? மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு உயர்த்திக் கொடுத்த அகவிலைப்படியை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடினார்கள். இப்போது எப்படி மிகப் பெரிய போராட்டத்தை இந்த வளாகத்திலே நடத்தினார்களோ அப்படித்தான் அன்றைக்கும் நடத்தினார்கள். இப்போது கட்டிடத்திலிருந்து கீழே இறங்கி வந்து கூட்டம் போட்டு, எப்படி ஊர்வலம் நடத்திப் பேசினார்களோ அப்படித்தான் அப்போதும் செய்தார்கள். அது 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 ஆம் நாள் தொடங்கியது. அப்படி அவர்கள் போராட்டம் தொடங்கியபோது, அன்றைய முதல்வர் இங்கே இல்லை. டெல்லியில் இருந்தார். அப்படி அவர் டெல்லிக்குப் போன போதும்கூட என்ன சொல்லியிருந்தார் தெரியுமா? போராட்டம் நடத்தினால், அந்தப் போராட்டம் எப்படி இருந்தது என்பதைப் பார்க்க அதை யெல்லாம் படமெடுத்து வையுங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். அப்போதுதான் 'மூவி கேமரா' அறிமுகப்படுத்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன். அந்த மூவி கேமராவைப் பயன்படுத்தி அந்தப் போராட்டத்தையே ஒரு படத் தொகுப்பாக எடுத்தார்கள். முதல்வர் டெல்லியிலிருந்து திரும்பி வந்ததும் போராட்டம் எப்படி நடந்தது, அது என்னவாயிற்று என்று தலைமைச் செயலாளரைக் கேட்டார். அப்போது இருந்த தலைமைச் செயலாளர்—இப்போது இருக்கிற தலைமைச் செயலாளர்



கற்பனா சக்தியில் குறைவாகத்தான்—இப்போது இருப்பவர் உயர் வைவிடக்
வான செயலாளர்—கற்பனையில் மிக வேகமாகப் போகிறவர்—அப்போது
இருந்த செயலாளர் அந்தப் போராட்டத்தையே குறைத்துத்தான் சொன்னார்.
'அது ஒன்றும் பெரிய போராட்டம் இல்லீங்க, சும்மா கொஞ்சம் 4 பேர்தான்"
என்று இப்போது எப்படி சரியான தகவல்கள் மேல் மட்டத்தில் தெரிவிக்
கப்படாமல்—இப்போது எப்படி முதலமைச்சருக்கே பல விவரங்கள் தெரி
விக்கப்படாததால் பிரச்சினைகள் வளர்கின்றனவோ அப்படிப்பட்ட முறையில்
அப்போதும் வளர்ப்பதற்கான முறையில் முயற்சி செய்யப்பட்டது. ஆனால்
அப்போதிருந்த முதலமைச்சரோ "படம் எடுக்கச் சொன்னேனே எடுத்தீர்
களா? அந்தப் படத்தைக் கொண்டு வந்து போட்டுக் காட்டுங்கள், பார்க்
கிறேன்." என்று சொன்னார். அவர்கள் படம் போட்டுக் காட்டினார்கள்.
அதைப் பார்த்த முதலமைச்சர் "இவ்வளவு பெரிய எழுச்சியிருக்கிறதே,
ஒன்றுமே இல்லை என்று சொல்லுகிறீர்களே" என்று சொல்லிவிட்டு—அந்தப்
போராட்டம் நடந்தது 10 ஆம் தேதி—தலைமைச் செயலக ஊழியர்கள்
சங்கம் முதலில் போய் அவரைப் பார்த்துக் கேளாதபோதே, 19 ஆம் தேதியே,
அதாவது 9 நாளிலேயே பத்திரிக்கையில் ஒரு அறிக்கை வெளியிட்டார். "பேச்சு
வார்த்தைக்கு வாருங்கள்" என்று அழைத்தார். அப்படி 9வது நாளிலேயே
அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி அவர்கள் கோரிய அந்த டி.ஏ. வையும்
தந்தார். இப்போது எப்படி தலைமைச் செயலக ஊழியர்கள் சஸ்பெண்டு
செய்யப்பட்டிருக்கிறார்களோ அப்படியேதான் அப்போதும் தலைமைச்
செயலக ஊழியர்கள் பலர் சஸ்பெண்டு செய்யப்பட்டிருந்தார்கள். அவர்க
ளெல்லாம் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். 10/(ஏ)(1) ஆக
இருந்த 600 பேருக்கு மேல் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். அந்த 600
பேருக்கும் திரும்பவும் வேலை தரப்பட்டது. இப்போது எப்படி தலைமைச்
செயலக ஊழியர் சங்கம் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டிருக்கிறதோ அதைப்
போல்தான் அப்போதும் அந்தச் சங்கத்தின் அங்கீகாரமும் ரத்து செய்யப்பட்டி
ருந்தது. அந்த அங்கீகாரமும் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
இப்படி 9 நாளிலேயே பிரச்சினையை பேசித் தீர்த்து, கேட்ட கோரிக்கையை
முடித்து வைத்து ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி தலைமைச்
செயலக ஊழியர்களை மகிழ்வோடு பணியாற்ற விட்டாரே கலைஞர், அந்தப்
பெருந்தன்மை இப்போது ஏன் உங்களுக்கு வரவில்லை என்றுதான் நான்
கேட்க விரும்புகிறேன்.

எதற்கெடுத்தாலும் "உங்கள் ஆட்சியில் நடந்தது தெரியாதா" என்று குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, ஏன் எங்கள் ஆட்சியின்போது நடந்த நல்ல காரியங்களைக்கூட பின்பற்ற மாட்டேன் என்கிறார்கள் என்று தான் கேட்க விரும்புகிறேன். இன்றையதினம் நிலைமை என்ன? தலைமைச் செயலக ஊழியர்கள் 104 நாளாக 'சஸ்பெண்டு' செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். தலைமைச் செயலக ஊழியர்கள் போராட்டத்தையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 1974 ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்ட அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுத்துப் பழி வாங்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிச் சொன்னால், நான் ஆதாரத்தோடு இங்கே வந்து பேச விரும்புகிறேன். எனவே அப்படி அவர் சொல்லுகிறாரா இல்லையா என்றுதான் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசும்போதே ஒரு கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களைப் பொறுத்தவரையில், நான் பேசும்போது என்னையே கவனிக்கிறாரே தவிர, என் கருத்துக்களைக் கவனிக்கத் தவறி விடுகிறார். நானே குறிப்பிட்டேன். அப்போது 10 (ஏ) (1) ஆக இருந்த 600 தலைமைச் செயலக ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். ஒரு அரசு என்றால், போராட்டம் நடக்கிறபோது அதைச் செய்யத்தான் செய்யும். அந்த வகையில்தான் சங்கத்தின் அங்கீகாரத்தையும் ரத்து செய்தார்கள். ஆனால் நான் குறிப்பிட்டது போராட்டம் தொடங்கிய 9-வது நாளிலேயே, அவர்களை நேரில் அழைத்துப் பேசி பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள் என்றுதான் சொன்னேன். இன்றைக்கு என்ன நிலைமை? ஊழியர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு 104 நாட்களாகின்றன. 100-வது நாளை விழாவாகக் கொண்டாட வேண்டும் என்றுகூட அவர்கள் நினைத்தார்களாம். ஆனால் அது ஞாயிற்றுக் கிழமையாகப் போய்விட்டது என்பதாலே அவர்களால் கொண்டாட முடியவில்லையாம்! ஒரு அப்போதும் அவர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை ரத்து செய்வதால், இந்த அரசுக்கு என்ன கேடு வந்து விடும் என்றுதான் கேட்க விரும்புகிறேன். அதைச் செய்யுங்கள் என்றுதான் கேட்கிறேன். வேறு ஒன்று





மில்லை. ஏதோ அவர்கள் போராடினார்கள். இந்த அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது. எடுத்த பிறகு இன்றைக்கு ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறபோது, அந்த நடவடிக்கைகளை மாற்றலாமில்லையா? கூப்பிட்டு அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதா? ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கக் கூடாதா? அவர்கள் இங்கே தலைமைச் செயலகத்தில் பணி புரிகிற ஊழியர்கள்தானே, அவர்கள் நம் பக்கத்தில் இருப்பவர்கள்தானே? நம்முடைய வளாகத்தில் இருப்பவர்கள்தானே? அப்படிப்பட்ட முரண்பாட்டை தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதாலே என்ன நல்லது ஏற்படும்?

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். இங்கே தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகின்றவர்களில் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டவர்களில் சிலர் இப்போதுகூட எழுதிக் கொடுத்துவிட்டு உள்ளே போயிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் ஏற்கெனவே பேசும்போது கூட அதைக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போதுகூட, ஏற்கெனவே மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கப்படவில்லையா என்று கேட்டார்கள். இப்போது நீங்கள் அப்படித்தான் மன்னிப்புக் கடிதங்கள் எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள்; நீங்கள் பேசியதை மறந்துவிட்டு அதை நாம் இப்போது விட்டுவிடலாம்.

(பிற்பகல் 1-00)

---

எழுதி வாங்கிக்கொண்டு உள்ளே அனுமதித்திருக்கிறார்கள் என்ற அந்தப் பொருளிலேயே விட்டுவிடலாம்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: நான் சொன்னது, அவர்கள் எழுதிக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்பது. எழுதிக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள் என்ற வாசகத்திற்கும், எழுதிக் கேட்டுப் பெற்றார்கள் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கும் வரையில், அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் விரைவில் தன் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். மற்ற விவரங்களை அடுத்த சந்தர்ப்பத்தில் பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் எழுதி வாங்கியதை அல்லது எழுதிக் கொடுத்ததை இப்போது என்ன செய்யலாம் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மொத்த வருமானமான ரூபாய் 3,275,37 கோடியில், கல்வியைப் பொறுத்தவரையில் ரூபாய் 531 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய தொகைதான். என்றாலும் இதற்கு முன் ஒதுக்கிய தொகையைப் பார்த்தால், 25 விழுக்காடு ஒதுக்கியிருக்கிறார்கள், 20 விழுக்காடு ஒதுக்கியிருக்கிறார்கள், 13 விழுக்காடு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இவ்வாண்டு கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது 17 விழுக்காடுதான்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாற்றுத் தலைவர் அவர்களே, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறதா இல்லையா என்பதை தாங்கள் அறிவித்தால் எங்களுக்கு நலமாக இருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் * * ஏனென்றால் தாங்கள் அதுபற்றி ஏற்கெனவே அறிவித்துவிட்டீர்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது என்று ஏற்கெனவே சொன்னேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கும் வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன் * *

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் ஒரு மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவருக்குப் பல பிரச்சினைகள் இருக்கலாம். இருந்தாலும் ஓரிரு நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



திரு. ஆர். டி. சீத்தாபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, * * என்று தவறாக பத்திரிகைகளில் வந்தால் அசிங்கமாக இருக்கும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களே அதை மாற்றிக் கொண்டால் நலமாக இருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: * * என்று நான் சொல்லவில்லை. * * என்ற ஐயப்பாட்டைத்தான் தெரிவித்தேன். இப்போது அந்த ஐயப்பாட்டையும் எடுத்துவிடுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் * * என்று சொன்ன வாக்கியத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு வகுப்பறைகள் கட்ட ஒரு இலட்சம் செலவாகும்! அவற்றில் 100 பள்ளிகளுக்கு ஒவ்வொன்றுக்கும் இரண்டு வகுப்பறைகள் வீதம் கட்டலாம். மீதமுள்ள பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்ட அரசு நிதி ஒதுக்க முயற்சி எடுக்க வேண்டும். 750 ஆசிரியர்கள் பணியிடங்கள்தான் தரப்பட்டிருக்கின்றன. நாங்கள் இரண்டே முக்கால் இலட்சம் மாணவர்களைச் சேர்த்திருக்கிறோம். அதற்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை.

புதிய கல்வித் திட்டம் விமர்சனத்திற்குரியது! கல்வி குறித்த கொள்கைக் குறிப்பு மீதான விவாதத்தின்போது சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு எதுவும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு பட்டை நாமம் சாத்தப்பட்டிருக்கிறது, அரசு அலுவலர்களைப் புறக்கணித்தால் அவர்கள் உங்களைப் புறக்கணிக்க முடிவு செய்வார்கள். எதுவும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டு ஆசிரியர்கள் தேர்தலிலும், பட்டதாரிகள் தேர்தலிலும் வாக்களியுங்கள் என்று கேட்டால் எப்படி? அவர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்திருக்கிறார்கள். புதிய சலுகையைப்பற்றிப் பேசிவிட்டேன். அதை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நபர் குழுவின் அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. இதனால் ஆசிரியர்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். ஆகவே அந்த அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மத்திய அரசு இந்த ஆண்டு சனவரி முதல் அகவிலைப் படியை உயர்த்தித் தந்திருக்கிறது. மத்திய அரசு தந்தவுடனே அதைப் பின்பற்றி மாநில அரசும் உடனே தர வேண்டும் என்ற மரபின்படி, இதுவரையும் ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. இப்படியெல்லாம் ஒன்றும் செய்யாமல் எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அக விலைப்படியையாவது உடனடியாக தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4—9—1979-க்குப் பிறகு பி.எச்.டி. பெற்ற ஆசிரியர்களுக்கு 100 ரூபாய் சிறப்புப்படி வழங்கப்படவில்லை. தற்காலிக ஆசிரியர்களை நிரந்தரம் செய்யப் போவதாகச் சொன்னது இன்னும் செய்யப்படவில்லை. இப்படி 11 கோரிக்கைகள் தரப்படாமல் இருக்கின்றன. ஆனால் எல்லாம் தந்துவிட்டதைப்போல—ஏதோ பாமரர்களை ஏமாற்றுவது போல படித்தவர்களை ஏமாற்றும் வகையில் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த எண்ணத்தை விட்டுவிட வேண்டும். பாமரர்களே ஒரு தினுசாக பிப்ரவரி 23 ஆம் தேதி தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். மார்ச் 23 வருகிறது.

(பிற்பகல் 1-05)

திரு. க. சுப்பு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் சால்லவில்லை. உறுப்பினர் அவர்கள் பாமரர்கள், பாமரர்கள் என்ற ழிவான வார்த்தையையெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்கின்றார்கள். வமானப்படுத்துகின்ற மாதிரி இருக்கின்றது. வேட்பாளர்களை அப்படிச் சால்வது சரியாகாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பாமரர்கள் என்பது அல்ல, படித்தவர்களையும் சேர்த்துத்தான் சொல்கின்றேன். அதாவது கல்வி அளவிலே மிக அதிகமான அளவிலே முன்னேற்றம் அடையாது இருப்பவர்கள் அவர்கள் என்றுதான் கோடிட்டுக் காட்டினேனே தவிர வேறல்ல. அவர்களை இழிவுபடுத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்கள் தேர்தல் பிப்ரவரி 23-ல் நடைபெற்றது. மார்ச் 23-லே படித்தவர்கள் தேர்தல் வருகிறது. அதற்கு முன்னதாகவாவது உறுதிமொழிகளை நிறைவேற்றித் தந்தால், அவர்கள் திரும்பிப்பார்த்து ஓரளவுக்குச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று ஒரு நல்ல ஆலோசனையைத்தான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. ஆனால் தேர்தலில் அதிகாரிகள் மூலம் மிரட்டுவது அதிகமாக நடந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. அங்கீகாரம் என்பதை போப்பொருளாக அக்கி "உங்களுக்கு



அங்கீகாரம் தருகிறோம், வோட்டுப் போடுங்கள்" என்று சொல்லும் நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. இப்படியெல்லாம் செய்தால், ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பட்டதாரிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உங்களுக்கே தெரியும். மதுரையில் தேர்தல் நடைபெற இருக்கின்றது. ஆசிரியர்கள் தொகுதியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கேண்டிடேட் யார் என்று தெரியவில்லை. அதற்கு என்று ஒரு அமைச்சரை அனுப்பி கேட்டிருக்கின்றார்கள். ஆதரவு தர உறுதி கூறியிருக்கின்றார்கள். அப்படிக் கேட்ட போது, அந்த வேட்பாளரே கையெடுத்து கும்பிட்டு உங்கள் ஆதரவு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அந்த அளவுக்கு ஆசிரியர்கள் உங்களை உதாசீனம் செய்கின்றார்கள். அவர்கள் அப்படி உதாசீனம் செய்யாத அளவுக்கு அரசு செய்ய வேண்டும், மிகவும் சிறப்பாகச் செய்து இந்த நிலைமைகளை எல்லாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பல பிரச்சினைகள் இருந்தாலும், காலம் கடந்துவிட்டதால், ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு வார்த்தைதான். மாநிலங்களுடைய சுயாட்சி பற்றி மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்: ஒரே ஒரு வார்த்தைதான். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று" . .

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாற்றுத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் ஆசிரியர்கள் தொகுதியில் தேர்தலுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் போட்டி போடவில்லை என்று சொன்னார்கள். அதை விட்டுவிட்டு நான் ஒன்று சொல்ல நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திலும் போட்டி போடவில்லை என்பதையும் உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தகவல் தெரியாததால், அருமை நண்பர் அவர்கள் அப்படிச் சொல்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக முழு ஆதரவு பெற்ற வேட்பாளர் வேம்பு அங்கே போட்டியிடுகின்றார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆதரவு வேண்டுமா என்பதுபற்றி திரு. பி. ஆர். தாமஸ் அவர்களிடம் போய் கேட்டிருக்கின்றார்கள். அப்போது அவர் சென்றமுறை அவர்களின் ஆதரவை பெற்றவர் என்றாலும் ஏற்கெனவே ஆதரவு இருக்கின்றது என்று சொல்லிவிட்டார்கள். இப்போது ஆதரவு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆதரவே எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஆசிரியர்கள் அரசினிடத்திலே வருத்தமடைந்திருக்கின்றார்கள். அந்த அளவுக்கு ஆசிரியர்கள் எண்ணம் இருக்கிறது.

[1986 மார்ச 19

திரு. எஸ். ஆர். இராதா : அதுவும் ஒரு ஸ்டண்டாக இருக்கலாம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். இதுவரையிலே அதிகார பூர்வமாக இந்த முறையிலே நடைபெறுகின்றது என்று சொல்லலாம். அங்கு நிற்கின்ற வேட்பாளருக்கு தி.மு.க. ஆதரவு தருவதுபற்றி தகவல் எதுவும் இல்லை. இங்கே பொருளாளர் அவர்களே இருக்கின்றார்கள். அதை அவர்களே அறிவிக்கட்டும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதில் கட்சி அரசியலைப் பேசுவது முறையானது அல்ல. இருந்தாலும் என்னுடைய நண்பர் திரு. சீத்தாபதி அவர்கள் கேட்டதால் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரையிலே பேராசிரியர் வேம்பு அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளிப்பது என்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆதரவை மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களிடம் திரு. தாமஸ் கேட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் :** ஏற்கெனவே திரு. தாமஸ் அவர்கள் பெயரை, அவர் 'ஸ்டண்ட்' அடிப்பதாகச் சொல்லி, அவருடைய மனதை வருத்தும்படியும், அவரைச் சார்ந்திருக்கின்ற எல்லோருடைய உள்ளத்தையும், எங்கள் உள்ளத்தையும், வருத்தும்படியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதுபோதாது என்று இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் இப்படி அறிக்கை விட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். அவ்வாறு நம்முடைய மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்திக்கவில்லை. அப்படிச் சந்திக்காதபோது, அவர் சந்தித்ததாகச் சொல்வது, அறிக்கை விடுவது குறித்து நான் வருத்தப்படுகிறேன். பொதுவாக இங்கே இல்லாதவரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களோ, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்களோ சொல்லவேண்டாம். இந்த மன்றத்திலே 12 ஆண்டுகள் மிகச் சிறப்பான பணி செய்து மிகவும் பண்பாளராக இருந்தவர் என்று பெயர் பெற்ற, மதிப்பிற்குரிய திரு. தாமஸ் அவர்களைப்பற்றி கருத்துவேறுபாடு உண்டாகு



1986 மார்ச் 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மாறு, அதை சர்ச்சைக்குரிய ஒரு விவாதமாக யாரும் ஆக்கவேண்டாம் என்று அன்போடு நான் என் சார்பிலும், எங்கள் அணியின் சார்பிலும், ஆசிரியர்கள் அணியின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே கூறிய 'ஸ்டண்ட்' என்ற வார்த்தையையும், தேர்தல் பற்றிய வார்த்தைகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** ஒருவருக்கு ஒருவர் பதில் சொன்னது. இருப்பதால், அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்க வேண்டிய இல்லை.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** 'அன்பார்லியமென்டரி' வார்த்தைகள் பேசவில்லை. வரம்புக்கும் புறம்பாகப் பேசவில்லை. எனவே . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** 'நீக்க வேண்டியதில்லை' என்றுதான் சொன்னேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, ஆசிரியர் யாருடைய மனமும் புண்பட வேண்டுமென்று நான் எதையும் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற தலைப்பில் மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் காலத்தில் 'மாநில சுயாட்சி' என்று சொன்னார்கள். பிறகு, 'தன்னாட்சி' என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு 'இணைப்பு ஆட்சி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று எங்களுக்குத் தெரிந்தாக வேண்டும். சர்க்காரியா கமிஷனுக்கு முன்னால் சொல்லியிருப்பது என்ன ஆட்சி? அது சுயாட்சியா தன்னாட்சியா, இணைப்பு ஆட்சியா? அது என்ன ஆட்சி என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதை இதுவரை தரவில்லை. அந்த விவரத்தைத் தந்தால் நன்றாக இருக்கும்.

ஆக இப்படிப்பட்ட குழப்பங்கள் இல்லாமல், நிதிநிலை அறிக்கையிலே பொருளாதாரத்தை தொழிற் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை, முன்னேற்றும் திட்டங்களைச் சொல்லி, அவரவர்கள் சொந்தப் பொறுப்பிலே சம்பாதித்து, சொந்தப் பொறுப்பிலே குடும்பங்களை நடத்திட உத்திரவாதம் தரும் வாய்ப்புக்குரிய அந்த நாளை ஏற்படுத்த, மன நிறைவோடு,

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 மார்ச் 19

உண்மையிலேயே அப்படி ஓர் ஆர்வத்தோடு அரசு பணியாற்ற வேண்டும். வார்த்தை ஜாலங்களைக் கட்டி, இருப்பதைப் போல நடிப்பதை விட்டு, இனிமேலாவது நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கை எங்களுக்கு மன நிறைவு அளிக்கவில்லை என்று சொல்லி, அமைகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை நாளை (20—3—1986) வியாழக்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-12)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*148. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31—10—1985 ஆம் நாளிட்ட 1921 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

*149. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூமிதான இயக்கச் சட்டத்தின் நோக்கத்திற்காக திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், சங்கம்பட்டிக் கிராமத்தை கிராமதான கிராமமாக அறிவித்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 29—12—1984 ஆம் நாளிட்ட 473 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூமிதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].



1986 மார்ச் 19]

*150. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்களை வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் காட்டுதல் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து உள்துறையில் 18—10—1985 ஆம் நாளிட்ட 2592 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்களை வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் காட்டுதல் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1984) 22 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

*151. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு சாராவி (பிணையப் பத்திரத்தின் பேரில் இருப்பு வைத்திருத்தல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்துறையின் 28—3—1985 ஆம் நாளிட்ட 250 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப் படுகிறது].

*152. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வணிக வரிகள்-அறநிலையத்துறையின் 20—11—1985 ஆம் நாளிட்ட 1050 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

*153. தைக்கப்பட்ட கைத்தறி கைக்குட்டைகள், ஆலையில் நெய்யப் பட்ட கைக்குட்டைகள் ஆகியவற்றிற்கு 1—4—1974 முதல் 24—7—1977 வரை கூடுதல் வரி, மேல் வரி செலுத்துவதை சில நிபந்தனைகளுக்குட்பட்டு தள்ளிவிடுவது குறித்து வணிக வரிகள்-அறநிலையத்துறையின் 9—8—1985 ஆம் நாளிட்ட 712 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப் படுகிறது].

[1986 மார்ச் 19

* 154. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்துறையின் 20—5—1985 ஆம் நாளிட்ட 474 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

* 155. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராயம் (சில்லறை விற்பனை கடைகள்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்துறை 1—6—1985 ஆம் நாளிட்ட 556 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

* 156. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலில் 1 ஆம் தொகுதியில் தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறைகளில் திருத்தம் செய்வது குறித்து பணியாளர்-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர்-எம்) 27—11—1985 ஆம் நாளிட்ட 1134 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியல் அமைப்பின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப் படுகிறது].

* 157. அலுவலர் சிலருடைய நியமனம் குறித்து வருவாய்த் துறையின் 1—7—1985 ஆம் நாளிட்ட 977 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியற்ற அனுபோகதாரர் வெளியேற்றல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

* 158. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31—10—1985 ஆம் நாளிட்ட 1922 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு. வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].



86-மார்ச் 19]

* 159. கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு
ரங்குதல்-விற்பனைக் குறித்து கட்டுப்பாட்டு அதிகாரத்தை செலுத்தக் கருதி
ருப்பது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 31—10—1985 ஆம்
ாளிட்ட 1916 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள்
ட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை
றன் வைக்கப்படுகிறது].

* 160. வேளாண்மைத் துறையின் II- 2 5281/1974 ஆம் எண்
அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின்
9—11—1985 ஆம் நாளிட்ட 1986 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள்
அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின்
கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

161. தமிழ்நாடு துணி ஆலை கழகத்தின் 31—3—1985-வுடன் முடியும் ஆண்டிற்கான 16-வது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619 (ஏ) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

162. பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான 11-வது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

163. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான 15-வது ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

‡ 164. சூரியகாந்தியை வேளாண் விளைபொருளாக அறிவிப்பது குறித்தும்
இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில்
கம்பு, சோளம், கேழ்வரகு, சூரியகாந்தி, கரும்பு, வெல்லம் ஆகியவற்றை
வாங்குதல்—விற்பனை குறித்து கட்டுப்பாட்டு அதிகாரத்தை செலுத்தக்
கருதியிருப்பதை அறிவிப்பது தொடர்பாகவும், வேளாண்மைத்துறையின்
3—9—1985 ஆம் நாளிட்ட 1577 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

‡ 165. வேளாண்மைத்துறையின் 18—1—1973 ஆம் நாளிட்ட II-IO 1129/1973 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத்துறையின் 10—10—1985 ஆம் நாளிட்ட 1790 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1953 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் . (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

168. மனநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு சென்னை நிறுவனத்திற்கு சொந்தமான சிறிய மோட்டார் வாகனமாகிய சிறிய பேருந்தை TMM 6874 (டீசல்) அந்த நிறுவனத்தின் காரியங்களுக்காக மட்டும் பயன்படுத்திக்கொண்டு அதனை வாடகைக்கோ, வெகுமதிக்கோ விடக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அந்த வாகனத்திற்கு செலுத்தப் படும் வரி விகிதத்தை குறைப்பது குறித்து உள் துறையின் 3095 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

167. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிவிதிகளில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள் அறநிலையத்துறையின் 3—12—1985 ஆம் நாளிட்ட 1092 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

168. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 19—3—1985 ஆம் நாளிட்ட 391 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].





169. வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 23—11—1983 ஆம் நாளிட்ட II-1|CTRE| 211/83 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள்-அறநிலையத்துறையின் 2—12—1985 ஆம் நாளிட்ட 1081 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

& 28—2—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

£ 3—3—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

‡ 7—3—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

## இணைப்பு.

(139 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 74-க்கான விடையைக் காண்க.)

27—7—1985 அன்று புதுடில்லியில் நடைபெற்ற மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் குழுவின் முதல் கூட்டத்தில், தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறுதல் பற்றி விவாதிக்கப்பட்டது.

2. கூட்டத்தில் கலந்துகொண்ட தொழிலாளர் நல அமைச்சர்கள், பொதுத் துறையில் நிலவுவது போல, கூட்டுறவு மற்றும் தனியார் பிரிவுகளிலும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கேற்பது, செயற்படுத்தத்தக்க வகையில், கட்டாயப்படுத்தப்பட வேண்டுமென கருத்து தெரிவித்தனர். இப்பொருள்வகை குறித்து விரிவாக விவாதங்களுக்குப் பின்னர், குழுவின் கூட்டுநரும், மகாராட்டிர மாநில தொழிலாளர் நல அமைச்சருமாகிய திரு. என். எம். டிட்கே அவர்கள் பொதுத் தன்மையான கருத்து ஒருமைப்பாட்டுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்தார் :—

(அ) தனியார் பிரிவுகள் விடப்படலாகாது. கூட்டுறவுத் துறைப் பிரிவுகளுக்கு இத்திட்டத்தை நீட்டிக்க வேண்டும். இத்திட்டத்தை தேர்ந்தெடுத்த அடிப்படையில், தனியார் பிரிவுக்கு நீட்டிக்கத் தக்க வகையில் சட்டத்தில் கட்டுப்பாட்டு விதிகள் ஏற்படுத்துவதுடன், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு விருப்புரிமை அளிக்கப்பட வேண்டும். உதாரணமாக நல்ல தொழில் உறவுகளுடன் உள்ள பிரிவுகளை எடுத்துக் கொள்ளலாம். இதற்காக தூண்டுதல் மட்டும் போதாது. ஆனால் தெரிந்தெடுத்த அடிப்படையில் ஆரம்ப கட்டங்களிலேயே இத்திட்டத்தை அமுல்படுத்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

(ஆ) தொழிற்களம், தொழிற்சாலை மற்றும் வாரியம் ஆகிய மூன்று மட்டங்களும் முக்கியமானவை. வாரியம் மிக முக்கியமானதால், சட்ட ஏற்பாடுகளில் அது விடப்படலாகாது.



(இ) நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கேற்கும் திட்டத்தில் பல்வேறு ...ட தொழிற்சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும். ...றைந்தது 10 முதல் 15 விழுக்காடு உறுப்பினர்களைக் கொண்ட தொழிற் ...ங்கங்களை மட்டும் பங்கு பெறச் செய்ய வரையறுப்பது பற்றி சிந்திக்கலாம்.

3. மேற்குறிப்பிட்ட பரந்த எல்லைக்கோட்டின் அடிப்படையில், ...ர்வாகத்தில் தொழிலாளர் பங்கேற்பது பற்றிய திட்டத்தை அறிமுகப்படுத்த, ...ட ஏற்பாடுகள் கூறுகளைத் தயார் செய்து மேற்கொண்டு பரிசீலனைக்கு ...ழுவில் வைக்கப்பட வேண்டுமென உணரப்பட்டது.

143542
சென்னை-600

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K Chandriah Chettiar & Sons Salem-1.
15 Parameswari Book Shop No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores. Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Velo Book Company. No. A, Annaji Rao Street, Erode 1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Culcutta 17.

©TAMIL NADU LEGISLATIVE COUNCIL SECRETARIAT—PUBLISHED UNDER RULES 196 AND 199 OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.